

மு. தயாளன்

# வாழ்வு சுமந்த வலி

மகுடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வு சுமந்த வலி

## உண்மைச் சம்பவங்களோடான பயணம்

### அனுபவ நாவல்

மு. தயாளன்

மகிடம்

இல.90, பார்வீதி,

மட்டக்களப்பு 30000

இலங்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மகுடம் பதிப்பக வெளியீடு - 79**

ISBN : 978-624-5849-47-5

● நூல் - வாழ்வு சுமந்த வலி (அனுபவ நாவல்) ● ஆசிரியர் - மு.தயாளன் ● உரிமை - ஆசிரியருக்கு ● முதல் பதிப்பு - மார்கழி-2023 ● பக்கம் - 148 ● விலை 600.00 ● வெளியீடு - மகுடம் பதிப்பகம் 90, பார்வீதி, மட்டக்களப்பு. 30000 ● தொ.பே. இல. 0774338878 ● வடிவமைப்பு - அச்சு - வணசிங்க அச்சகம், மட்டக்களப்பு.

● Book - Invisible Pain (Experience Novel) ● Author - M. Thayalan ● © Author ● First Edition - June - 2018 ● Size - 1/8 ● Pages -148 ● Price - 600.00 ● Published by - Magudam Publication. 90, Bar Road, Batticaloa. ● Ph.No. 0774338878 ● email - magudammichael@gmail.com ● Printing - Wanasinghe Printers, Batticaloa

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

இந்த உலகத்தில் கண்ணுக்குத் தெரியாத வலியோடு
காலத்தைக் கடத்துகின்ற ஒவ்வொரு ஆத்மாக்களுக்கும்
இந் நாவலை சமர்ப்பிக்கிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

மகுடம் பதிப்பகத்தின் 79வது வெளியீடாக புலம் பெயர் படைப்பாளியும் சிறுகதை மஞ்சரி ஆசிரியரும், இலட்சுமி பதிப்பக நிறுவனருமான திரு.மு. தயாளன் அவர்களின் 'வாழ்வு சுமந்த வலி' என்ற இந்நாவலை வெளியிடுவதில் பெரு மகிழ்வடைகின்றேன்.

மு. தயாளன் அவர்களினால் INVISIBLE PAIN என்ற பெயரில் ஆங்கிலத்தில் எழுதி Amazon இல் வெளியாகிய நாவலே வாழ்வு சுமந்த வலியாக தமிழில் வெளிவருகிறது. மகுடம் பதிப்பகத்தின் மூலம் இவ்வருடம் வெளியாகும் தயாளனின் இரண்டாவது நாவல் இதுவாகும். வருடத்திற்கு இரண்டு நூல்கள் என்ற வகையில் வெளியிட்டுவந்த தயாளன் தற்போது ஆங்கிலமொழியிலும் சரளமாக எழுதுவதால் Amazon பதிப்பகம் மூலமாகவும் அவரது பல நூல்கள் வெளிவருகின்றன. இன்று தமிழிலும், ஆங்கிலத்திலும் அதிகமாக எழுதும் ஒரு படைப்பாளியாக, தொடர்ந்து இயங்கி வருபவர் தயாளன்.

மனிதர்கள் ஒவ்வொருவரும் தமது வாழ்நாளில் பல வலிகளை அனுபவித்தே வாழ்கின்றனர். வலிகள் பலவிதம், கடந்த பல தசாப்தங்களாக வலிசுமந்த வாழ்வையே ஈழத்தமிழர் வாழ்ந்து வருவதும் உலகறிந்ததே.

இங்கே பேசப்படும் வலியை அறிய இந்நாவலை வாசித்தால் புரியும். வாழ்வின் வலிகளை மிக யதார்த்தமாக தனது அனுபவங்களுக்கூடாக பதிவு செய்யும் தயாளன் தொடர்ந்து எழுதவேண்டும் என வாழ்த்துகிறேன்.

**மகுடம் வி. மைக்கல் கொலின்**
ஆசிரியர்- மகுடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

இந்த நாவல் வெறும் கற்பனைகளின் வசனங்களல்ல. அனுபவத்தின் வெளிப்பாடு. உயிர்களுக்கு வலி வரும்போது அது எங்கிருந்து வருகிறது அல்லது எப்படி வருகிறது என்பதனைத் தெரியாதிருப்பது கொடிய துன்பம். இந்த உலகத்தில் பல ஆயிரக்கணக்கானவர்கள் பலவித வலிகளுடன் வாழ்கிறார்கள். உடல் வலி , உளவலி போன்ற வலிகளோடு தம் வாழ்நாளைக் கழித்துவரும் ஆண்களும் பெண்களும் இவ்வுலகில் வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறார்கள். எவ்வளவோ உயரத்திற்கு வளர்ந்துவிட்ட விஞ்ஞானத்தி னாற் கூட அணுக முடியாத வலிகள் இருக்கின்றன என்பதை வெளிப்படுத்துவதும் இந்த அனுபவ நாவலின் ஒரு நோக் காகும். அதே நேரம் சமூகம் எப்படி இந்த வலிகளைக் கையாளுகிறது என்பதை வெளிக்காட்டவும் இந்நாவல் உதவி புரிகின்றது.

இந்தக் கதையின் நாயகிக்கும் அப்படியானதொரு வலிதான். அவளின் துன்பம் எவர் மனதையும் துன்பப்ப டுத்தும். அந்தத் துன்பத்தை அவளோடு சேர்ந்து மற்றவர்க ளும் விழுங்கிக்கொள்கின்ற துயரத்தையும் இந்த நாவல் வெளிக்கொணருகின்றது.

அந்த வலியின் போது இரும்புத் தூணாக எல்லாவற் றையும் துறந்து ஞானியைப்போல் அருகிருந்து சேவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரிகிறானே அவளின் கணவன் - அவனில் நீங்கள் ஆராதிக்கும் கடவுளைத் தரிசிக்கலாம்.

எந்த வைத்தியத்தாலும் குணப்படுத்த முடியாத அவளின் வாழ்வு சுமந்த வலியின் கதை ஒரு காவியம்.

பத்து வருடங்களாக வாழ்வில் இன்பம் என்பதை சிறிதளவேனும் சுவைக்காத இரு காதல் கிளிகளின் காவியம்தான் இது.

இதனை எழுதும்போதும் என் கண்கள் கண்ணீரைத் தரிசித்தன. இப்போதும் அந்தக் கண்ணீர் ஓடிக் கொண்டிருக்கிறது. எப்போது நிற்கும்?

**மு. தயாளன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1

## காதல்

கிளயா சாதாரணமாக ஒரு பதின்ம வயதுப் பெண் காணக்கூடிய கனவுகளோடு எப்பொழுதும் தனது எதிர்கால வாழ்க்கைபற்றிக் கனவு காணும் பெண் ணாகவே இருந்தாள். வாழ்க்கையென்பது சந்தோசமா னதாகவும் சிட்டுக் குருவிகளின் கீதம்போன்றும் இருக்க வேண்டு மென்பதுதான் அவளது ஆசையாகவுமிருந்தது.

அவள் ஒரு சிட்டுக்குருவி போன்றே இருந்தாள். எதையும் சந்தோசமாக அனுபவித்துக்கொண்டு இந்த உலகத்தின் செல்வங்களெல்லாம் தனக்காகத்தான் படைக்கப்பட்டவை என்று எண்ணிக் கொண்டிருந்த சின்னஞ்சிறு சிட்டுதான் கிளயா.

அவளையிட்டு அவளது பெற்றாரும் பெருமைப்பட்டுக் கொண்டிருந்தார்கள். அவள் கேட்டதெல்லாம் வாங்கிக் கொடுத்து அவளை மகிழ்ச்சியாக வைத்திருக்கும் பெற்றார் களாகவே அவர்கள் இருந்தார்கள். படிப்பிலாகட்டும் பழகும்விதத்திலாகட்டும் கிளயாவும் அவர்களைப் பெரு மைப்படவே வைத்திருந்தாள். அன்புதான் அவளின் இதயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உச்சரிக்கும் ஒரே வார்த்தை.

கிளயாவைப்பொறுத்தவரை அவளின் வாழ்க்கை வண்ணங்களின் கலவையாகவே இருந்தது. சீலைத்துணியில் வரையப்பட்ட வண்ணப்படத்தைப்போல அவளது வாழ்க்கை அமைந்திருந்தது. அவளுடைய இதயம் எப்போதும் சந்தோசத்தாலும் எதிர்பார்ப்புகளாலும் நிறைந்திருந்தது. ஒரு நாட்டின் ராணிபோல் துள்ளித் திரிந்து கொண்டிருந்தாள். அவளைப் பார்ப்பவர்கள் எவருக்கும் சந்தோசம் தானாகவே நிரம்பி வழியும். அவ்வளவுக்கு அற்புதமானவள் தான் கிளயா.

அவள், வாழ்க்கையில் கதிர்ப்படப் பதிவாளராக வரவேண்டுமென்றே கனவு கண்டாள். அதற்காக அவள் கடுமையாக உழைத்தாள். அது சம்பந்தமான படிப்புத் துறைக்கே சர்வகலாசாலைக்கும் தெரிவானாள். கடுமையாகப் படித்து பல்கலையில் முதல் தரத்தில் சித்தியும் பெற்றாள்.

அவள் நினைத்த அத்தனையும் அவள் வாழ்வில் நிகழ்ந்து கொண்டிருந்தன. ஒரு தடவை அவளின் அம்மாவின் நண்பி ஒருவரின் வீட்டில் நடைபெறும் கல்யாண வீட்டிற்கு உதவி புரிவதற்காகத் தன் சகோதரியுடன் சென்றிருந்தாள். அங்கு தான் அவள் தரனைக் கண்டாள்.

தரனின் உயர்ந்த தோற்றமும் எப்போதும் சிரித்தபடி இருக்கும் முகமும் அவளைக் கவர்ந்தது. அங்கு நடக்கப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போகும் திருமணம் தரனின் சகோதரிக்கே என்பதையும் அறிந்து கொண்டாள். தரனுக்குத் தன்னை அறிமுகப்படுத்திவிட்டு அவனுக்கு உதவி புரிவதில் கவனம் செலுத்திய அவள் இடையில் உரையாடவும் தவறவில்லை. அவனோடு கதைக்கும் போதெல்லாம் தனக்குள் ஒரு அசைவு உருவாவதை அவள் உணர்ந்து கொண்டாள். ஆனால் எதையும் வெளிக்காட்டிக் கொள்ளவில்லை.

இருவரும் நண்பர்களாகவே கதைக்க ஆரம்பித்துக் கொண்டிருந்தார்கள். அதன் பின்பு இருவரும் தொலைபேசியினூடாகக் கதைத்துக் கொண்டிருந்தார்கள். இப்போதும் இருவரும் அத்தியந்த நண்பர்களாகவே கதைத்துக்கொண்டிருந்தனர். இந்த உரையாடல்களின்போது அவள் தனக்குள்ள காலில் உள்ள பிரச்சினைபற்றியும் உள்நாக்கு அழற்சி (Tonsllitis) பற்றியும் கூறியபோது அவன் கூறிய ஆறுதல் வார்த்தைகளும் அவற்றை அவன் கூறியவிதமும் அவளுள் ஒருவித ஈர்ப்பை ஏற்படுத்தியது. இந்த உரையாடல் நாளடைவில் காதலாக மாறிவிட்டது. ஒரு நாள் உரையாடலின் போது தன் காதலை கிளயா வெளிப்படுத்தியபோது தரனும் அதனை காத்திருந்ததுபோல் சம்மதித்தான்.

சுதந்திரமான இந்த உலகத்தில் காதலர்கள் சிட்டுகளாகப் பறந்து திரிந்தனர்.

நாளடைவில் தங்களுக்கிடையில் சம்மதம் உறுதியான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்பு இருவரும் ஒரே நேரத்தில் பெற்றாருக்குத் தெரியப்ப டுத்துவது என்று மனதுள் எண்ணிக் கொண்டனர்.

இரண்டு மாதங்கள் கடந்துவிட்டன.

பெற்றாருக்குத் தெரியப்படுத்தும் காலம் வந்துவிட்டதாக இருவரும் உணர்ந்தனர்.

ஒரு நாள் இருவரும் தமது பெற்றாரிடம் கூறினார்கள். கிளயாவின் பெற்றார்கள் எந்த எதிர்ப்பும் தெரிவிக்கவில்லை. எப்படியாவது இதனை முடித்துவிட வேண்டுமென்பதில் ஆர்வமாக இருந்தார்கள். பெண்ணைப் பெற்ற பெற்றாரின் வழமையான செயற்பாடாகவே அது இருந்தது. தங்கள் பெண்ணுக்கு நல்லதொரு மாப்பிள்ளை கிடைக்கும்போது எந்தப் பெற்றாரும் அந்தச் சந்தர்ப்பத்தைத் தவறவிடுவ தில்லை.

ஆனால் தரனின் வீடு குழம்பியது.

தரன் தாயை அழைத்து முதலில் கிளயாவைத் தான் விரும்புவதாகக் கூறினான். தரன் கிளயாவைக் காதலிக்கிறேன் என்று அந்தத் தாய்க்குக் கூறியபோது அந்தத் தாயின் மனதிற்குள் தன் பிள்ளைக்கு ஏதோ நடக்கப் போகின்றதென்ற உள்ளுணர்வு அவளை விழிப்படைய வைத்தது. அதுதான் தாய்மையின் வலிமையும் சிறப்பும். தரன் வந்து சொன்ன போது நிறுதிட்டமாக,

“ உந்தக் கல்யாணம் உனக்கு வேண்டாம்” என்று கூறி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டாள்.

தரனின் அப்பாவுக்கு வந்து விடயத்தைக் கூறி

" என்ரை மனதிலை பிள்ளைக்கு ஏதோ நடக்கப்போகுது என்று தெரியுது... உந்தக்கல்யாணம் அவனுக்கு வேண்டாம்" என்று அழுதாள்.

தரனின் தந்தையைப் பொறுத்தவரை பிள்ளைகளின் விருப்பங்களுக்குக் குறுக்கே பெற்றவர்கள் நிற்பது தவறு என்பதாகும். மனைவி வந்து கூறியதும்
"உவைகளையெல்லாம் நம்பாதை" என்று கூறினார். தந்தையினதும் அவன் அக்காவினதும் பச்சைக் கொடி தரனுக்குச் சந்தோசத்தைக் கொடுத்தது. ஆனாலும் தாயின் சம்மதம் கிடைக்காதது அவனின் மனதில் கவலையை உண்டுபண்ணியது. தாயே அவனுக்கு எல்லாமாக இருந்தாள். அவளின் சம்மதத்திற்காக காத்திருந்தான் . மூன்று மாதங்களாகத் தரனும் தாயும் ஒருவருக்கொருவர் கதைக்காமலே இருந்தார்கள்.

தரனின் தந்தையும் சகோதரியும் பலவிதமாகத் தாயிடம் எடுத்துச் சொல்லி அவளைச் சம்மதிக்க வைத்தனர். தாயின் சம்மதம் தரனுக்கு அளவற்ற மகிழ்ச்சியைக் கொடுத்தது.

இதன்பின் தமிழரின் வழமைப்படி இரு வீட்டாரும் சம்பந்தக்கலப்பு செய்து கொண்டனர். கிளயாவின் பெற்றோர்கள் கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்தவர்களாதலால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலில் இந்து மதப்படி திருமணத்தை வைத்து மறுநாள் கிறிஸ்தவ மதப்படி திருமணத்தைச் செய்வதென்றும் இரு வீட்டாரும் தீர்மானித்தனர். இதன்பின் தரனும் கிளயாவும் பெற்றோர்களுடன் சென்று நல்லதொரு மண்டபத்தைத் தெரிவு செய்தனர்.

திருமணம் கோலாகலமாக ஒழுங்கு செய்யப்பட்டது. இரு பக்கத்தாலும் பலர் வந்து கலந்து கொண்டனர். தமிழ் மரபுப்படி மேளதாளங்களோடு அவர்கள் திருமணம் நடந்தேறியது. மறுநாள் கிறிஸ்தவ முறைப்படி தேவாலயம் ஒன்றில் வைத்து அவர்களின் திருமணத்தின் இரண்டாம்பகுதி மகிழ்வாக நடந்தேறியது.

கிளயா மிகுந்த சந்தோசமாக இருந்தாள்.

காலம் விரைவாக நகர்ந்து கொண்டிருந்தது.

கிளயா இன்னும் வேலைக்குப் போகவில்லை. திருமணம் முடிந்து மூன்று மாதங்கள் கடந்துவிட்டன.

தான் படித்த துறையில் வேலை செய்வதற்காக விண்ணப் பங்களை அனுப்பிக் கொண்டிருந்தாள். நேர் முகப் பரீட்சைகளுக்குப் போவதும் வருவதுமாக இருந்த போது தான் தரன் ஹனிமூன் போவதற்கான முடிவை எடுத்தான்.

கிளயாவுக்கு மிகுந்த சந்தோசம். அதற்கான ஆயத்தங்கள் செய்யத் தொடங்கினாள். கடைகளுக்குச் செல்வதும் உடுப்புகள் வாங்குவதுமாக வேகமாகச் செயற்பட்டுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருந்தாள்.

இருவருமாகச் சேர்ந்து தாம் செல்வதற்கான இடத்தைத் தேர்வு செய்வதில் பல மணி நேரங்களைச் செலவிட்டனர். இடத்தைத் தேர்வு செய்தபின்பு விமானச் சீட்டுகளையும் ஒழுங்கு செய்தனர். தரனும் தன் வேலைத்தலத்தில் விடுமுறை கேட்டு விண்ணப்பித்திருந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2

## சொர்க்கத்தின் நிழல்

உலகத்தின் சொர்க்கபுரியென்று "பாலி" நாட்டைச் சொல்லலாம். இது ஒரு தீவு. இந்த நாட்டின் பெரும்பாலான பிரதேசம் மலைகள் நிறைந்ததாகும்.

யாவாப் பிரதேசம் இஸ்லாமியர்களால் ஆக்கிரமிக்கப் பட்டபோது அங்கு வாழ்ந்த இந்துக்கள் அடைக்கலம் தேடிப் புகுந்த இடம்தான் "பாலி". இது யாவாவிலிருந்து அதன் கிழக்குப் பக்கமாக ஒரு மைல் தொலைவில் உள்ளது. இது மலை சார்ந்த பிரதேசமாதலால் எரிமலைகளும் இங்கு அதிகமாக உண்டு. இங்குள்ள மக்களை "பலினீஸ்" என்றுதான் அழைப்பார்கள். இந்துக்களின் பலம் வாய்ந்த இந்துப் பாரம்பரியங்களை உள்ளடக்கிய ஒரு நாடாக இதுவே திகழ்கின்றது. பிரபலமான சிவ ஆலயங்கள் இங்கு நிரம்ப உண்டு. இங்குள்ள மக்கள் சமஸ்கிருதம் கலந்த பலனீஸ் மொழியையே பேசுகின்றனர்.

கலை கலாச்சரங்களை பேணுவதில் மற்றைய பிரதேசங் களைவிட இந்த நாடு முன்னணி வகிக்கிறது. பழகுவதற்கு இனிய மக்கள். மனிதாபிமானத்தோடு பிறரை இவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணுகுவதால் இந்த நாட்டை நோக்கி வருடா வருடம் பெருமளவிலான உல்லாசப் பயணிகள் உலகின் எல்லாப் பாகங்களிலிருந்தும் வருகை தருவர்.

கிளயாவும் தரனும் தங்களின் தேனிலவுக்காக 'பாலி'க்கே வந்திருந்தனர். 'பாலி'யில் இருவரும் பார்க்காத போகாத இடங்கள் இல்லை. சந்தோசமாகத் தங்கள் தேன்னிலவைக் கொண்டாடிக் கொண்டிருந்தனர். 'பாலி' நாட்டின் அழகில் மயங்கி இருந்தனர்.

அங்கிருக்கும் சிவன் ஆலயம் அதி சிறப்பு வாய்ந்தது. எல்லா மதத்தினரும் சென்று வருவர். தரனும் கிளயாவும் அங்கு சென்று வழிபட்டனர். அந்த அமைப்பும் வேலைப் பாடும் அவர்களை நன்கு கவர்ந்திருந்தது.

அந்த நாட்டின் சந்தைகளுக்கெல்லாம் சென்றார்கள். விதம் விதமான உணவகங்களுக்கும் சென்று உணவருந்தி மகிழ்ந்தனர். எல்லாவிதமான சாப்பாடுகளையும் உண்டு மகிழ்ந்தனர். கிளயா சாப்பாடுகளை மிக அவதானமாகவே தேர்ந்தெடுத்துக் கொண்டாள். தன்னைப் பாதிக்கும் எந்த உணவையும் அவள் தொட்டே பார்க்கவில்லை.

ஒரு கிழமை முடிந்துவிட்டது. இன்னும் இரு தினங்களில் புறப்படவேண்டும். அதற்கான ஆயத்தங்களில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும்போது திடீரென்று கிளயா தன் வயிற்றைப் பிடித்துக்கொண்டு கதறினாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரன் ஓடிப்போய் அவளைத் தாங்கிக்கொண்டான். அவனுக்கும் என்ன ஏது என்று புரியவில்லை. உடனே வாடகைக்காரை வரவழைத்து அவளை ஏற்றிக் கொண்டு அருகிலுள்ள வைத்தியசாலைக்குச் சென்றான். மிகப் பிரமாண்டமான தனியார் வைத்தியசாலை.

அங்குள்ள வைத்தியர்களிடம் நடந்தவற்றைத் தெளிவாக விளக்கிக் கூறினான் தரன். வைத்தியர்கள் கிளயாவைப் பரிசோதிக்கத் தொடங்கினர்.

நீண்ட நேரப் பரிசோதனையின் பின் கிளயாவுக்கு குடல் அழற்சி (Appendicitis) இருப்பதாகக் கூறினர். சத்திரசிகிச்சை செய்ய வேண்டும் என்றும் அதுவும் உடனடியாகச் செய்யாவிட்டால் உயிரைப் பாதிக்கும் என்றும் கூறினர். கிளயாவுக்கும் தரனுக்கும் இந்தச் செய்தி அதிர்ச்சியைத் தந்தது. இந்தச் செய்தி அவர்கள் இவ்வளவு நாளும் அனுபவித்த தேனிலவுச் சந்தோசம் எல்லாவற் றையும் விழுங்கிவிட்டது. இருவரும் மிகவும் வேதனையோடு சத்திரசிகிச்சைக்குச் சம்மதித்தனர்.

கிளயாவும் தன் மனத்தை சத்திரசிகிச்சைக்கு தயார்ப் படுத்திக் கொண்டாள். அன்று மாலையே சத்திர சிகிச்சை நடைபெறுவதற்கான தயாரிப்புகள் வைத்தியசாலையில் ஆரம்பமாகின.

அங்குள்ள வைத்தியர்களின் ஆதரவான பேச்சும் தாதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்களின் பொறுப்பான செயற்பாடுகளும் வைத்திய சாலையின் சுகாதார நிலைமைகளும் கிளயாவுக்கும் தரனுக்கும் திருப்தி கொடுத்தன.

சத்திரசிகிச்சை ஆரம்பமானது. வெளியில் நின்ற தரன் தனியே நின்று பதட்டத்துடன் வேதனைப்பட்டுக் கொண்டிருந்தான்.

குடல் அழற்சியை அகற்றுவதறகான வேலையில் வைத்தியர்கள் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். ஆனால் அவர்கள் நினைத்ததுபோல் அந்த அகற்றல் இலகுவாக இருக்கவில்லை. கிளயாவின் உடலுள் இருந்த உறுப்புகள் வீங்கி இருந்தமையால் அவர்களால் குடல் அழற்சியை வெளியே எடுக்க முடியவில்லை. முடிவில் சில மணி நேரப் போராட்டத்தின் பின் குடல் அழற்சியை கிளயாவின் பொக்குளினூடாக வெளியே எடுத்தனர். கிளயாவும் நீண்ட தூக்கத்தில் இருந்தாள்.

வெளியே வந்த வைத்தியர்கள் தரனிடம் நடந்த விடயங்களைத் தெளிவாகக் கூறி லண்டன் போனதும் உள்ளுறுப்புகள் வீங்கி இருப்பதற்கான காரணங்களை அறிந்து கொள்ளும்படி கூறி வைத்தனர். தரன் மனது சுக்கு நூறாக உடைந்து கொண்டிருந்தது. ஆனாலும் லண்டன் போனதும் சரி செய்து கொள்ளலாம்என்று மனது ஆறுதல்பட்டது.

ஒரு மணி நேரம் கழித்து கிளயா கண்திறந்து தரனைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்த்தாள். இந்தக் கொந்தளிப்பான நேரத்திலும் இருவரும் 'பலினீஸ்' மக்களின் விருந்தோம்பலை மனதாரப் பாராட்டினர். இந்த மக்களின் கலாசாரம் ஆன்மிகத்துடன் பின்னிப் பிணைந்து இருப்பதால் அது அவர்களின் ஒவ்வொரு செயலிலும் பிரதிபலிக்கின்றது என்பது அவர்கள் வைத்திய சாலையில் தமக்குச் செய்த பணிவிடைகளும் உதவிகளும் காட்டுகின்றன என இருவரும் பெருமைப்பட்டுக் கொண்டனர்.

தங்களது வாழ்க்கையில் ஏற்பட்ட இந்த எதிர்பாராத மாற்றம் எதிர்காலத்தில் என்ன விளைவுகளை உண்டு பண்ணப்போகிறதோ என்று மனதளவில் இருவரும் பயந்தனர். என்ன வந்தாலும் இருவரும் சேர்ந்து எதிர் கொள்வதென்று தீர்மானித்துக் கொண்டனர்.

தரன் இணைய வழியாக கிளயாவின் நிலை பற்றி அறிவதற்கான முயற்சியிலீடுபட்டான். எதிலும் தெளிவான முடிவான விளக்கங்கள் இருக்கவில்லை. எல்லாமே சந்தேகமான முடிவுகளாகவே இருந்தன.

விஞ்ஞானக் கண்டு பிடிப்புகளுக்கப்பால் ஆன்மீகத்தின் ஆற்றுப்படுத்தலுக்கும் முக்கியம் இருக்க வேண்டுமென்பதை 'பாலி' மக்களிடமிருந்து கற்றுக் கொண்டிருந்தனர்.

இவர்கள் மனதில் இவர்களை அறியாமலே ஆன்மீகத்திற்கும் விஞ்ஞானத்திற்கு மிடையில் பிரகடனப்படுத்தாத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுத்தம் நிகழ்ந்து கொண்டிருந்தது. எதுவாக இருந்தாலும் இந்தத் துன்பத்தை இருவரும் சேர்ந்தே எதிர் கொள்வதெனத் தீர்மானித்தனர். நிச்சயமாகப் புதியதொரு பயணம் ஆரம்ப மாகின்றதென்பதனை இருவரும் புரிந்து கொண் டனர்.

'பாலி'யில் இருந்து இரு நாட்களுக்குப் பின் லண்டன் நோக்கிப் புறப்பட்டனர். லண்டன் ஹீத்துறு விமான நிலையத்தில் வந்திறங்கியபோது தரனின் அப்பாவும் அம்மாவும் வந்து அவர்களை அழைத்துச் சென்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3

## தீவிர தேடல்

'பாலி' நாட்டிலிருந்து திரும்பி வந்தபின் தனக்குண்டான அந்த வலிக்கெதிராகப் போராட ஆரம்பித்தாள் கிளயா. பல வைத்திய நிபுணர்களையெல்லாம் கிளயாவும் தரனும் சந்தித்தனர். 'பாலி'யிலிருந்து கொண்டுவந்த மருத்துவ அறிக்கையில் உடலுக்குள் உள்ள உறுப்புகள் வீங்கி இருப்பதாகப் போட்டிருப்பதால் கிளயாவுக்கு ஏற்கனவே இந்தவலி சிறிய அளவில் இருந்ததாகவும் 'பாலி'யில் செய்யப்பட்ட சத்திரசிகிச்சை அதனைத் தூண்டிவிட்டிருக்கலாம் எனவும் லண்டன் வைத்தியர்கள் அபிப்பிராயம் தெரிவித்தனர்.

வைத்தியர்கள் ஆரம்பத்தில் அதனைத் தீர்ப்பது போன்று கிளயாவுக்கு மாயத் தோற்றத்தை ஏற்படுத்துவதும் முடிவில் தம்மால் முடியவில்லை என்று கூறுவதும் வைத்தியர்களின் வழக்கமாகி விட்டது. அந்த வலி அவளை ஒவ்வொரு நிமிடமும் தின்று கொண்டிருந்தது. அவளால் இருக்க முடியவில்லை. படுக்க முடியவில்லை. நடக்க முடியவில்லை. ஏன் சாப்பிடக்கூட முடியவில்லை. அவர்கள் இருவரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல வைத்தியசாலைகளுக்குச் சென் றார்கள். பலவிதமான பரிசோதனைகளும் செய்தார்கள். எத்தனையோ ஊசிகளைப் போட்டார்கள். எதுவுமே கிளயாவின் உடலுக்கு வேலை செய்யவில்லை.இவற்றால் எல்லாம் வெறுப்படைந்த கிளயா தலையில் கைவைத்து ஓவென்று அழுவாள்.

'பாலி'யிலிருந்து வந்தபின் ஒரு மாற்றத்தை அவதானித் தனர். அவளின் வலதுகால் முன்புபோல் நடக்க விடுவ தில்லை. காலினை நேராக வைத்து அவளால் நடக்க முடிவதில்லை. முன்பு அவள் இப்படி இருக்கவில்லை. ஏன் 'பாலி'யில் வலி வருவதற்குமுன் அவள் சாதாரணமாகவே நடந்திருந்தாள். அவர்களின் சத்திரசிகிச்சை எதையோ அளவுக்கதிகமாக தூண்டிவிட்டதோ என்று சந்தேகப்பட் டார்கள். அதனை லண்டனிலுள்ள வைத்தியர்களிடம் கூறியபோது சிரித்தார்கள். அவர்களின் அனுமானப்படி கிளயாவுக்கு குடல் அழற்சி இல்லையென்றும் பணத்திற்கா கவே சத்திரசிகிச்சை நடந்ததென்றும் கூறி 'பாலி' வைத்தியர் களை மட்டமாகப் பார்த்தார்கள். யார் என்ன சொன்னாலும் துன்பப்படப்போவது தரனும் கிளயாவுந்தானே!

என்ன வலி? எங்கிருந்து வருகிறது? என்பவைபற்றி எதுவுமே தெரியாமல் முழித்தார்கள் வைத்தியர்கள். தொழில் நுட்பத்தில் வளர்ந்த இந்த நாடுகளின் எந்தத் தத்துவமும் கிளயாவின் வலிக்குக் காரணம் சொல்லவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னுமொரு நகரத்தில் உள்ள வைத்தியர் இரைப்பை குடல் சம்பந்தப்பட்ட வைத்தியத்தில் சிறந்தவர் எனப் பலர் பரிந்துரைத்த போது மறுக்காமல் இருவரும் சென் றனர்.

அந்த வைத்தியர் கிளயாவின் மருத்துவ சரித்திரத்தை மிகத் தெளிவாகக் கேட்டார். நடத்தப்பட்ட பரிசோத னைகளின் பெறுபேறுகளைப் பார்வையிட்டார். அவர் இயங்கியவிதம் ஆராய்ந்த விதம் ஆகியவை கிளயா, தரன் தம்பதிகளுக்கு ஒரு நம்பிக்கையைக் கொடுத்தது. அவர் பல பரிசோதனைகள் செய்தார். அவற்றின்போது விடை எப்படி வரவேண்டுமென எதிர்பார்த்தாரோ அப்படி வர வில்லை. அவருக்கு ஆச்சரியமாக இருந்தது. மருத்துவ உலகத்தையே கேள்விக்குறியாக்கும் வண்ணம் இருந்தது பரிசோதனை முடிவுகள்.

உடற்பாகங்களை உள் நோக்கும் பரிசோதனைகளை யெல்லாம் செய்து பார்த்தனர். அவர்களால் எதையும் காணமுடியவில்லை. வைத்தியர்கள் ஏமாற்றம் அடைந்தனர். தாங்கள் கற்ற கல்வி பிரயோசனமற்றதுபோல் அவர்களுக்குத் தோன்றியது.

நண்பர்களும் உறவுகளும் கூட அவளின் துயரம் கண்டு கலங்கினார்கள். அவளின் கண்கள் சோபை இழந்துவிட்டன. நோயின் உக்கிரம் அவளை அணுஅணுவாகத் தின்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருந்தது.

இந்த வாழ்க்கை இப்படியே தொடரப் போகிறதா எனப் பயந்தாள். இதற்கு ஒரு முடிவேயில்லையா என்று கதறினாள்.

அவளுடைய இந்தக் கதறலுக்கும் துயரத்திற்கும் விடை கொடுக்க யாரும் தயாராக இல்லை. இத்தனை வலியோடும் துயரத்தோடும் தான் வாழத்தான் வேண்டுமா என எண்ணத் தொடங்கினாள்.

தரன் அவளின் எண்ணத்தைத் தவிடுபொடியாக்கினான். நீ எனக்காக வாழவேண்டுமெனக் கேட்டான். நாம் இருவரும் உறுதியாக இருந்தால் எந்த மலையையும் புரட்டி விடலா மென நம்பிக்கையூட்டினான்.

நாள்கள் மாதங்களாகி வருடங்களாகிக் கொண்டிருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4

## தோற்ற மந்திரங்கள்

விளக்கவே முடியாத இந்த வலிக்கெதிராக கிளயாவும் தரனும் நடத்துகின்ற யுத்தம் ஆன்மீக நம்பிக்கைகள் பக்கம் திரும்பியது. இந்துக்களினதும் கிறிஸ்தவர்களினதும் சமய நம்பிக்கைகள் பக்கம் தமது கவனத்தைத் திசை திருப்பினர்.

கிளயாவுக்கு யாரும் செய்வினை செய்திருக்கலாமோ என்ற சந்தேகம் உறவினர்களால் எழுப்பப்பட்டது.

செய்வினை என்பது ஒரு குறிப்பிட்ட நபரை நன்றாக வாழவிடாது தடுப்பதற்காக சில மாந்திரீகர்களின் உதவி யோடு மந்திரங்கள் சபித்த பொருட்களை உண்ண வைப்பது அல்லது அப் பொருட் களை சம்பந்தப்பட்டவரின் காணியில் புதைத்து வைத்தல் ஆகும்.

உலகம் பலவிதமாக வளர்ச்சி பெற்றபோதும் செய்வினை போன்ற சிந்தனைகள் சிறிதும் மாறாமல் அப்படியே இருக் கின்றன என்பதே உண்மையாகும்.

கிளயா மீது கோபம் அல்லது பொறாமை கொண்டவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் யாரோ செய்திருக்கிறார்கள் என்று இரு பக்கத்துப் பெற்றாரும் முடிவு செய்து கொண்டனர்.

இலங்கையின் மட்டக்களப்பில் ஒரு இந்து சாமியார் இருப்பதாகவும் அவர் ஒரு அம்மன் உபாசகர் என்றும் செய்வினை வைக்கப்பட்டிருக்கிறதா இல்லையா என்பதை அவர் கூறுவார் என்றும் தரனின் அம்மாவின் குடும்ப நண்பர் ஒருவர் கூறியிருந்தார்.

இந்த சுவாமியார் ஒரு அரசாங்க உத்தியோகத்தர். காலையில் அதிகாலை நான்கு மணியிலிருந்து ஏழு மணிவரை உருவந்து பரிகாரங்கள் கூறுவார். அதன் பின்பு தன்னுடைய அரசாங்க வேலைக்குச் சென்றுவிடுவார்.

இந்தச் சாமியார் சக்தி படைத்தவர் என்றெல்லாம் பலர் கூறினர். இவரால் பலர் சுகப்பட்டிருக்கிறார்கள் என்றும் இவரிடம் கூடுவிட்டுக் கூடுபாயும் சக்தி உண்டென்றும் கூறினர்.

அதன் விளைவு கிளயாவும் தரனும் இலங்கைக்குச் செல்லவேண்டுமென்றும் அவர்களோடு தரனின் அப்பாவும் செல்லவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது. கிளயாவும் தரனும் எந்த எதிர்ப்பும் தெரிவிக்கவில்லை. என்ன செய் தாவது இந்த வலி தன்னைவிட்டுப் போய்விட வேண்டு மென்பதுதான் அவளின் வேண்டுதலாகவிருந்தது.

அந்தநாள் வந்தது. கிளயா, தரன், கிளயாவின் சகோதரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகியோரோடு தரனின் அப்பாவும் இலங்கைக்குப் புறப் பட்டார். நீண்ட பத்து மணித்தியால விமானப் பயணத்தின் பின்பும் கொழும்பிலிருந்து மட்டக்களப்பிற்கான ஏழு மணித்தியால வாகன பயணத்தின் பின்பும் மட்டக்களப்பு வந்து சேர்ந்த இவர்கள் உறவினர் வீட்டில் தங்கி மறுநாள் அதிகாலை நான்கு மணியளவில் அந்த சாமியாரின் இடத்தை அடைந்தனர்.

சாமியார் வீட்டு வாசலில் நிரம்பக் கூட்டம். இந்துக்கள் மட்டுமல்ல இஸ்லாமிய சமயத்தைச் சேர்ந்தவர்களும் கிறிஸ்துவ சடயத'தைச் சேர்ந்தவர்களும் அங்கு காத்து நின்றனர்.

சரியாக நாலுமணிக்குக் கதவு திறக்கப்பட்டது. எல் லோரும் உள்ளே சென்றனர். அண்ணளவாக ஆறு மணியள வில் அந்த சாமியார் கிளயாவையும் தரனையும் உள்ளே கூப்பிட்டார்.

நடுத்தர வயது. அளவான உடம்பு. நெற்றி நிறைய திரு நீறு பூசி நெற்றியின் நடுவில் பெரியதொரு சிவப்புப் பொட்டும் இட்டிருந்தார். அவருக்கு அருகில் மிகப்பெரிய காளியம்மனின் படமும் சிவபெருமானின் படமும் இருந்தது.

கிளயாவைக் கண்டவுடன் அவர் உடம்பு ஆடத் தொடங் கியது. அத்தோடு அவருடைய நாக்கு முழுமையாக வெளியே வந்து பார்ப்பதற்குப் பயமாக இருந்தார். ஓம் சக்தி.... ஓம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சக்தி என்று உரத்த குரலில் கத்திக் கொண்டிருந்தார்.

கிளயாவுக்கும் தரனுக்கும் பயமாகவிருந்தது.

மந்திர உச்சாடனம் பலமாகச் செய்தார். அவரின் பார்வை, அவரின் ஆட்டம் பயத்தைக் கொடுத்தது.

கிளயா நடுங்கினாள்.

ஏதோ புரியாத மந்திரங்களை எல்லாம் கூறி திரு நீற்றை எடுத்து கிளயாவின் வயிற்றில் பூசினார். திரு நீற்றை அவளின் மீது வீசினார். வெறிவந்த வந்தவர்போல் அங்கிருந்த பெரிய கத்தியொன்றினை எடுத்து கிளயாவின் கையில் கொடுத்து கத்தியோடு வெளிக் கதவுவரை நடந்துவிட்டு வா என்றார். கிளயாவும் அதனைச் செய்தாள்.

வந்தபின் திரு நீற்றை எடுத்து அவள் மீதும் தரன் மீதும் எறிந்துவிட்டு தன் கைகளை அங்குமிங்கும் சுழற்றிவிட்டு கிளயாவின் வாய்க்குள் எதையோ திணித்து "சாப்பிடு" என்று சத்தமாக அதட்டினார். கிளயாவைப் பார்த்து " என்ன சாப்பிடுகிறாய்?" என்று கேட்டார். கிளயாவும் " பொம்மகீறீன" என்று ஆங்கிலத்தில் கூற தரனின் அப்பா மாதுளம்பழம் என்று தமிழில் கூறினார்.

அதன்பின் " எல்லாம் கலைத்துவிட்டேன். இனிக் கவலைப்படாமல் போய்வா" என்றார். அத்தோடு மறுநாள் வந்து எண்ணெய் பெற்றுச் செல்லும்படியும் கூறினார்.

மறுநாள் திரும்பவும் அங்கு வந்தனர். அந்த சுவாமியார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களைக் கூப்பிட உள்ளே சென்றனர். அவர் கிளயாவைப் பார்த்து சத்தமிட்டார். " நான் நேற்று நீ தங்கி இருக்கும் இடத்திற்கு வந்திருந்தேன். ஏன் அந்தப் போர்வையை போர்த்தி இருந்தாய்? வட்டம் வட்டமாக ஏதோ சாப்பிட்டாயே? இவற்றையெல்லாம் விட்டு விடு" என்று உரு வந்து கூறினார். தரனும் கிளயாவும் நன்கு பயந்துவிட்டனர்.

" நான் நேற்று உன் வீட்டு அறைக்கு வந்திருந்தேன்" என்று அவர் கூறியபோது தரனும் கிளயாவும் உண்மையிலேயே பயந்துவிட்டனர்.

தொடர்ந்து " எண்ணெயை வாங்கிக் கொண்டு , உன் அம்மா பிறந்த ஊருக்குச் செல்லாமல் அப்படியே லண்டனுக்குச் சென்றுவிடு" என்று கூறினார். தரனும் கிளயாவும் பயத்தோடு வெளியே வந்தனர். என்னதான் அந்த சுவாமியார் சொன்ன போதும் கிளயாவின் மனதில் பூரணமான நம்பிக்கை ஏற்படவில்லை. அடுத்தடுத்த நாள் அவர்கள் லண்டன் நோக்கிப் பயணமாகினர்.

லண்டன் வந்ததும் சில மணித்தியாலங்களில் திரும்பவும் அதே வலி அவளைத் துன்புறுத்தத் தொடங்கியது.

இப்போது உண்மையிலேயே கிளயாவின் மனம் சோர்ந்து விட்டது. சமயம் மூலமாகவாவது தீர்வு கிடைக்குமென நம்பியவளுக்கு அதுவும் தோல்வியானபோது அடுத்தது என்ன என்ற கேள்விதான் முன்னுக்கு வந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருவருமே களைத்துவிட்டார்கள் என்றுதான் சொல்ல முடியும். இவர்கள் களைத்தாலும் பாவம் இவர்கள் என்று காலம் நிற்காதல்லவா?

நாள்கள் உருண்டோடி மாதங்களை அணைக்க மாதங்கள் வருடங்களை நோக்கி ஓடிக் கொண்டிருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5

# மீண்டும் செய்வினையோடு யுத்தம்

இலங்கைக்கு மாந்திரீயத்தை நம்பிச் சென்று இரு வருடங்களாகிவிட்டன. இந்த இரு வருடங்களாக பல மேற்குலக வைத்தியங்களோடு போராடிக் களைத்துப் போயிருந்தவர்களுக்கு இன்னொரு செய்வினை அகற்றும் செயற்பாட்டை கிளயாவின் அம்மாவும் அப்பாவும் கொண்டு வந்தனர்.

கிளயாவின் அம்மா இலங்கையிலுள்ள கிறிஸ்துவ பாதிரியாருடன் கதைத்தபோது கிளயாவின் பிரச்சினைகளை அவருக்குச் சொன்னதாகவும் கூறினார். அப்போது அந்தப் பாதிரியார் கிளயாவுக்குள்ள பிரச்சினையை போக்க நீர்கொழும்புக்குக் கூட்டி வரும்படி கூறியதாகவும் கூறினார்.

அவர் கூறிய விடயத்தை கிளயாவும் தரனும் அமைதியாகக் கேட்டனர். மனதளவில் அதனை அவர்கள் விரும்பாவிட்டாலும் கிளயாவின் பெற்றார் கேட்டபடியால் எவ்வித எதிர்ப்புமின்றிச் சம்மதித்தனர்.

இன்னும் இருகிழமைகளில் புறப்படுவதென்று தீர்மானித்து அதற்கான அலுவல்களை தரன் பார்க்கத் தொடங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கினான்.

முதலில் தரன், கிளயா, கிளயாவின் அம்மா அப்பா ஆகியோருக்கு விமானச் சீட்டுகளை ஒழுங்கு செய்தான். கிளயா கொண்டு செல்வதற்கான உடுப்புகளை அடுக்கி ஒழுங்குபடுத்தினாள்.

அந்தக் குறிப்பிட்ட நாளில் அவர்கள் பயணத்திற்குத் தயாராகினர். லண்டன் கீத்துறூ விமான நிலையத்தில் இலங்கை செல்லும் பயணத்தை ஆரம்பித்தனர். பத்து மணித்தியாலங்கள் பயணம் செய்து இலங்கை சர்வதேச பண்டார நாயக்கா விமான நிலையத்தில் வந்திறங்கினர். விமான நிலைய நடைமுறைகள் எல்லாம் முடிந்து வெளியே வந்தபோது அவர்களுக்காக ஒழுங்கு செய்யப்பட்ட வாகனம் தயாராகவிருந்தது.

வாகனத்தில் ஏறி செல்லும் வழியில் எதிர்பாராதவிதமாக வாகன செலுத்துனர் நிறுத்தியை சடுதியாக அமத்தி நிறுத்தினார். வாகனம் ஒரு தடவை குலுங்கி நின்றது. பிரதான வீதியில் வந்த வாகனத்தை ஓட்டுனர் கவனிக்காததின் காரணத்தாலேயே அவர் வாகனத்தை சடுதியாக நிறுத்த வேண்டி வந்தது. அந்தக் குலுக்கலில் பின்னுக்கிருந்த கிளயாவின் அம்மா வேகமாக முன்னுக்கு இழுக்கப்பட்டு அதே வேகத்தோடு பின்னுக்குத் தள்ளப்பட்டார். அவரின் முதுகுப் பக்கத்தில் சரியாக அடிபட்டதால் தாங்கமுடியாத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலி ஏற்பட்டது.

இந்த எதிர்பாராத தாக்கத்தை வாகனமோட்டியின் கவலையீனமாகக் கருதாது கிளயாவுக்குள் குடிபுகுந்துள்ள பேய்தான் காரணம் என்று முடிவெடுத்தார்கள். அந்தப் பேய் தன்னைக் கலைப்பதற்காகத்தான் இவர்கள் போகிறார்கள் என்று எண்ணி அதனை நிறுத்துவதற்காக கோபத்தில் இந்த விபத்தை உருவாக்கியது என காரணம் கற்பிக்கப்பட்டது.

தப்பிப் பிழைத்து தெகிவளையில் ஒழுங்கு செய்யப்பட்ட வீட்டுக்கு வந்து சேர்ந்தார்கள். அடுத்த நாள் மாலை நீர் கொழும்பு செல்வதாக முடிவு செய்யப்பட்டது.

அடுத்த நாள் காலை அதே வாகனத்தில் நீர் கொழும்பை நோக்கிப் பயணித்தார்கள். அவர்கள் அந்தக் குறிப்பிட்ட தேவாலயத்திற்குச் சென்ற போது அந்தப் பாதிரியார் அங்கு இவர்களுக்காகக் காத்து நின்றார்.

குசல விசாரிப்புகள் முடிவடைந்தபின் பாதிரியார் இவர்களுக்கு ஒரு நடுத்தர வயதுப் பெண்ணை அறிமுகப்ப டுத்தினார்கள். அந்தப் பெண்ணின் பெயர் மொனிக்கா. சிங்களமும் தமிழும் சரளமாகக் கதைக்கக் கூடியவர். இவர் செய்வினை அகற்றுவதிலும் பேயோட்டுவதிலும் வல்லவர் என்று கூறினார்கள். பாதிரியார் இவர்களை அந்தப் பெண்ணோடு செல்லும்படி கூறினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்களும் அந்தப் பெண்ணைத் தொடர்ந்தனர். அந்தப் பெண் பல சந்துக்களினூடாக இவர்களை அழைத்துச் சென்றார். அழைத்துச் செல்லப்பட்ட பாதை மிக அழுக்காக இருந்தது. கிளயாவும் தரனும் மூக்கைப் பொத்திக் கொண்டனர். அவர்கள் தங்களின் வாழ்நாளில் இப்படியான இடத்திற்கு வந்ததில்லை. முடிவில் தகரத்தால் வேயப்பட்ட வீடு ஒன்றின் முன் நின்று உள்ளே வரும்படி கூப்பிட்டாள். இவர்களும் உள்ளே சென்றனர்.

அந்த வீட்டின் பின் பக்கத்திற்கு கிளயாவையும் தரனையும் மட்டும் அழைத்துச் சென்றாள். அங்கே ஒரு வாளி நிறைய கலங்கிய நீர் இருந்தது. அந்த நீர் இளநீர் என்று அந்தப் பெண் சொன்னாள். அவ்வளவு நீரையும் கிளயா குடிக்க வேண்டும் என்றும் பின் அதனை சத்தியாக வெளியே எடுக்கவேண்டுமென்றும் கூறினாள். கிளயா இதனை எதிர் பார்க்கவில்லை. பயந்தாள். தரன் அவளுக்கு சமாதனம் சொல்லி நானிருக்கிறேன் பயப்பிடாதே என்று கிளயாவை செய்ய வைத்தான்.

கிளயா முக்கித்தக்கி அந்த நீரைக் குடிப்பதும் ஏலா மையால் சத்தி எடுப்பதுமாக இருந்தாள். அந்தப் பெண் தரனைக் கூப்பிட்டு அந்தச் சத்தியில் ஏதும் இருக்கிறதா எனப் பார்க்கும்படி கூறினாள். தரனுக்கு எதுவும் தெரியவில்லை. சத்தி வெறும் நுரையாகவே இருந்தது. கிளயாவை அந்தப் பெண்ணிடம் இருந்து காப்பாற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றுவதற்காக ஆமாம் தெரிகிறது என்று தலையாட்டி வைத்தான்.

அந்தப்பெண் வெளியே வந்து கிளயாவின் பெற்றாருக்கு வயிற்றினுள் இருந்த கொடியவற்றை வெளியே எடுத்து விட்டதாகவும் இனிப் பயப்பிடத் தேவையில்லை யென்றும் எகத்தாளமாகக் கூறினாள்.

அவள் கூறும்போது தரன் தனக்குள் சிரித்துக் கொண் டான்.

அதன்பின்பு அவர்கள் அங்கிருந்து தாங்கள் தங்கியிருந்த வீட்டிற்கு வாகனத்தில் சென்று இரு நாட்களின் பின் லண்டனுக்குத் திரும்பினர்.

வந்தபின் கிளயாவின் வலி மெதுவாக எட்டிப் பார்த்துத் தன் கோர நாக்குகளை வெளியே காட்டிப் பரிகசிக்கத் தொடங்கியது.

கிளயாவின் வேதனையைப் பார்த்து அவசர நோயாளர் காவிப் பகுதியினருக்குத் தொலைபேசி எடுத்தான். அவர்களும் பதினைந்து நிமிடங்களில் வந்துவிட்டார்கள். கிளயாவைப் பரிசோதித்துவிட்டு நோயாளர் காவியில் ஏற்றிக் கொண்டு போய்விட்ட னர். அவர்களோடு தரனின் அம்மாவும் புறப்பட்டுச் சென்றார்.

அங்கே சென்றதும் கிளயாவுக்கு பரசிற்றாமலும் மோபினும் கொடுத்து கிளயாவை தூங்கவைத்துவிட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறிது நேரத்தில் கண்முழித்த கிளயாவை வலிவரும்போது பரசிற்றாமல் எடுக்கும்படி கூறி வீட்டுக்கு அனுப்பிவிட்டனர். கிளயாவின் நோய் என்னவென்றுகூட அவர்கள் பார்க்க வில்லை. இது கிளயாவுக்கும் தரனுக்கும் கோபத்தை உண்டாக்கியது. கோபத்தால் என்ன செய்யமுடியும்?

வைத்திய சாலைகளின் இன்றைய நிலமை இப்படித்தான் இருக்கிறது. புலம்பெயர்ந்தவர்கள் எதிர் கொள்ளும் பிரச்சினைகளில் இதுவும் ஒன்று. நிறம், இனம் வைத்தியத் துறைகளிலும் புகுந்துவிட்டது என்பது உண்மையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6

# பாரம்பரியத்தை நோக்கிய பயணம்

நோயின் தாக்கம் கிளயாவையும் தரனையும் நன்கு பாதித்தது. இந்த வலி எங்கிருந்து வருகிற தென்பதும் புரியவில்லை. அது எவ்வளவு அகோரமாக இருக்கும் என்பதும் புரியவில்லை. வலி வரும்போது அவள் துடிக்கின்ற துடிப்பு எந்தக் கல் மனதையும் கரைத்துவிடும். தரனின் அன்பான அரவணைப்பும் கொடுக்கின்ற தைரியமும் அந்த வலியை சுலபமாக எதிர்கொள்ள அவளால் முடிகிறது. மேற்குலக ஆங்கில வைத்தியம் அவளின் வலியின் முன்னால் தோற்றுப் போய்விட்டது. பாரம்பரிய மாந்திரீகங்கள் கூடச் செயலிழந்துவிட்டன.

தரனும் கிளயாவும் கிராம வைத்தியங்கள்பற்றிச் சிந்திக்க ஆரம்பித்தனர். இயற்கை வைத்தியங்கள் பயன் தரலாம் என்று பலர் ஆலோசனை வழங்கினர். எதையும் புறக்க ணிக்கும் மனோநிலை தரனுக்கும் கிளயாவுக்கும் இருக்க வில்லை. எங்கு சென்றாகினும் இந்த வலியிலிருந்து வெளி வந்து விடவேண்டுமென்று துடியாயத் துடித்தனர். மூலிகை வைத்தியம், வாய்மூல கிராமிய வைத்தியங்கள் உணவுப் பழக்கங்களை மாற்றிப் பார்த்தல், போன்ற பலவித வைத்திய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறைகளை தேடித்தேடி அணுகினார்கள்.

உணவுண்ணும் முறையில் மாற்றங்களை ஏற்படுத்தி உடலில் உணவுச் சமநிலையைக் கொண்டுவருவதின் மூலம் வலியை வென்றுவிடலாம் என்று முயற்சித்தாள். பல மாதங்களாக இருவரும் சேர்ந்து முயற்சித்தார்கள்.

சோறு சாப்பிடுவதை நிறுத்தினார்கள். பால் குடிப்பதை மறந்தார்கள். மாமிசத்தைப் புறக்கணித்தார்கள். வெறுமனே திரவ ஆகாரங்களையே உட் கொண்டனர். தரனும் அவள் உண்ணும் உணவுகளையே உண்டான்.

எந்த மாற்றத்தையுமே காணமுடியவில்லை. ஒரு கணம் வலி இல்லாததுபோல் ஏஃ தோற்றும். மறு கணம் வலி பொங்கிவரும். சில சமயங்களில் இருவருமே அழுதிருக்கிறார்கள்.

யாரையுமே குற்றவாளிகளாகக் கைநீட்ட முடியாது.

ஆயுள்வேத வைத்தியரை நாடினர். எத்தனையோ புதுப்புது மூலிகை மருந்துகளை உண்ணவும் பூசவும் கொடுத்தார். கசக்கும் மருந்துகளையெல்லாம் இனிக்கும் மருந்துகளாக ஏற்றுக் கொண்டாள்.

என்னதான் செய்தும் பலன் இல்லை. திரும்பத் திரும்ப வலியிலே துவண்டாள்.

மனதின் இயக்கமும் அதன் கற்பனையும் வேறுவேறான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதைகளில் பயணிப்பதுதான் வலியைப் புரிந்து கொள்ளா மைக்கான காரணமாக இருக்குமோ என்றும் இருவரும் சிந்திக்கத் தலைப்பட்டனர். இதனால் தியானத்தில் ஈடுபட்டால் மனதை ஒரு வழிப்படுத்தலாம் என்று நண்பர்கள் சிலர் கூறியதால் அதையும் முயற்சி செய்வோமே என்று முயன்றனர். ஒவ்வொரு நாளும் காலையில் எழுந்து இருவரும் சேர்ந்து ஒரு மணித்தியாலம் தியானத்தில் இருந்தனர். அந்தத் தியானம் அவர்களுக்கொரு புதிய அனுபவத்தைத் தந்தது. தியானத்தின்போது ஒவ்வொரு நாளும் ஒரு புதிய உலகத்திற்கு பட்டாம் பூச்சிகள்போல் பறந்து சென்று வருவதாக இருவரும் உணர்ந்து கொண்டனர். என்னதான் புதிய உலகத்திற்குச் சென்றாலும் திரும்பப் பூமிக்கு வரும்போது கிளயாவின் வலி அவளுக்காகக் காத் திருந்தது. ஆனால் ஒரு விடயத்தை தரன் கிளயருக்குச் சுட்டிக் காட்டினான்.

கிளயா தியானத்தில் இருக்கின்ற அந்த ஒருமணி நேரமும் அவள் வலியை உணரவில்லை என்பதைச் சுட்டிக் காட்டி னான். கிளயாவும் அதனை ஏற்றுக் கொண்டாள். ஆனால் அதற்காக இருபத்து நான்கு மணித்தியாலமும் தியானம் செய்து கொண்டிருக்க முடியுமா? என்று கிளயா கேட்டாள்.

உண்மைதான். அந்த நேரத்தில் வலி உணரப்பட வில்லையே ஒழிய வலி அவளைவிட்டுப் போகவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் அவளின் புலன் வேறொன்றில் இருக்கும்போது வலி தன்னைக் காட்டிக் கொள்வதில்லை என்பதை இருவரும் மனதார உணர்ந்தனர்.

சீன மருத்துவமான அக்குபஞ்சரை செய்து பார்த்தா லென்ன என தரனோடு வேலைபார்க்கும் நண்பியொருத்தி கூறிய ஆலோசனையால் அதனைச் செய்வதற்கு இருவரும் முயன்றனர். அதற்கான சீன வைத்தியரொருவரை அணு கினர். வித்தியாசமான அந்த வைத்திய முறை அவர்களை நன்கு கவர்ந்தது. மனித உயிருக்குச் சிகிச்சை தருவதற்கு அந்த உயிரின் உயிர் ஆற்றலைப் படிக்கத் தெரிந்தவரே மருத்துவம் செய்ய முடியும். உடல், மனம், ஆன்மா ஆகிய மூன்றையும் நேர் நிலைக்குக் கொண்டுவந்து ஆரோக்கியத் தைத் தரக் கூடிய மருத்துவ முறையாக அக்குபஞ்சர் கருதப் படுகிறது என்பதை இருவரும் நன்கு புரிந்து கொண்டனர்.

இந்தச் சிகிச்சையை ஆரம்பிக்க முன்பு இதுபற்றி முழுமையாக அறிந்து கொள்ள விரும்பினர். நவீன அக்கு பஞ்சர் மருத்துவம் உலகம் முழுவதும் உள்ள மனித குலத்தை யடைய சீனாவில் தலைவராக இருந்த மாவோவே காரணம். சீனா போன்ற சனத்தொகைமிக்க நாடுகளில் மனிதர்களுக்கு வரும் நோய்களைத் தீர்த்துவைக்க மேற்கத்தைய வைத்திய முறை போதாது என்ற எண்ணத்தின் விளைவுதான் இந்த வைத்தியமுறையின் பிறப்பு. ஊட்டச்சத்தின்மை, தொற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோய்கள், நவீன மருத்துவர்கள் கேள்விப்பட்டிராத மர்ம நோய்கள், மலேரியா, பிளேக் அம்மை நோய்கள், காசநோய் எனப் பலவிதமான நோய்கள் சீனாவை உலுக்கி வந்தவேளை 50 கோடி மக்கள் தொகை கொண்ட சீனாவிற்கு 20 ஆயிரம் அலோபதி மருத்துவர்களால் தேவையானதைச் செய்ய முடியாது என்பதை தெளிவாகப் புரிந்து கொண்டார் தலைவர் மாவோ.

இதன்விளைவு சீனாவில் சிதறிக்கிடந்த பாரம்பரிய வைத்திய முறைகளை மேற்கத்திய வைத்திய முறைகளோடு இணைத்தார். அக்குபஞ்சர் மற்றும் மூலிக மருத்துவக் குறிப்புகளை பாராம்பரிய வைத்தியர்களை வைத்து எழுதச் சொல்லி ஆவணப்படுத்தினார். மேற்கத்திய வைத்தியத்தில் கற்றுத் தேர்ந்த சீனரான ஷூலியான் என்பரால் அக்குபஞ்சர் தனி நூலாக எழுதப்பட்டது. அதுதான் இன்றைய வைத்திய முறையாக அக்குபஞ்சர் திகழ்கிறது.உடலின் ஒரு இடத்தில் குத்தினால் குறிப்பிட்டவலி அகன்றுபோகும் என்று அந்த நூலில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இது கிளயாவுக்கும் தரனுக்கும் பிடித்துப்போயிற்று. அவர்கள் கண்களில் ஒரு நம்பிக்கை ஒளி வீசத் தொடங்கியது. தீர்வு காணமுடியாத எத்தனையோ வலிகள் இதனால் இல்லாமல் போனதாக பலர் தமது அனுபவங்களைப் பகிர்ந்திருந்தார்கள்.

இந்த வைத்திய முறையின் வழிமுறைகள் இவர்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னும் கவர்ந்தது. அக்குபஞ்சரைப் பொறுத்தவரை நோயைப் பரிசோதிப்பதற்கு பன்னிரண்டு உறுப்புகளின் செயற்பாடுகள் அவதானிக்கப்படுகிறது. இரண்டு கைகளின் நாடிவழியாகப் பார்க்கப்படுகிறது. இதயம், கல்லீரல் சிறு நீரகச் செயற்பாடுகளை இடது கை நாடிவழியாகப் பரிசோதிப்பார்கள். இதயத்துக்கு ஜோடியாக சிறுகுடல், கல்லீரலுக்கு சோடியாக பித்தப்பை, சிறு நீரகத்தின் சோடியாக சிறுநீர்ப்பை என ஆறு உறுப்புகளின் செயற் பாடுகளை அவதானிக்கிறார்கள். பெருங்குடல், வயிறு , இடுப்பு வளையம் நெஞ்சுக் கூட்டுப் பகுதி , அடி வயிறு ஆகியவற்றின் நிலைகள் பரிசோதிக்கப்பட்டுத்தான் சிகிச்சையை ஆரம்பிக்கிறார்கள்.

உடலில் அதிகப்படியான உயிராற்றல் இருந்தாலோ அல்லது குறைவாக இருந்தாலோ வலி உருவாகக்கூடிய சூழ் நிலைகள் உருவாகின்றன. ஊசியால் குத்துவதன் மூலம் உடலில் இருக்கக்கூடிய உயிர் ஆற்றல் பாதைகளில் நேரக் கூடிய அடைப்புகளைச் சரி செய்வதுதான் அக்குபஞ்சர் வைத்திய முறையின் அடிப்படையாகும்.

இவைகளையெல்லாம் படித்து மனம் அமைதியடைந்த பின்பு மிகுந்த நம்பிக்கையோடு அந்த சீன வைத்தியரை அணுகினர். வைத்தியமும் ஆரம்பமானது. முதலில் வலி குறைவதுபோல் கிளயா உணர்ந்தாள். தனக்கு விடிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரப்போவதாகவே அவள் உணரத் தலைப்பட்டாள். ஒவ்வொரு நாளும் அவளின் நம்பிக்கை அதிகரித்தே வந்தது. தரனும் மகிழ்ச்சியாகவே இருந்தான். வைத்தியம் பல நாட்கள் நடந்தது. இறுதியாக இனிமேல் வலி வருவதற்கான சாத்தியமே இல்லை என்று வைத்தியர் உறுதிமொழி கொடுத்தார். இருவரும் சந்தோசமாகவே வீடுவந்தனர்.

ஒரு கிழமையாக எந்தவலியும் இருக்கவில்லை. சில சமயம் சிறிது வலி இருப்பதுபோல் கிளயா உணர்வாள் ஆனால் முன்புபோல் இல்லை. இருவரும் மகிழ்ச்சியில் வானத்தில் பறந்தனர்.

ஒரு நாள் இரவு நேரம் இருவரும் தூங்கிக் கொண்டிருந்தனர். திடீரென்று கிளயாவின் கத்தல் குரல் கேட்டு எழும்பிய தரன் கிளயா கட்டிலில் இருந்து விழுந்து வயிற்றைப் பிடித்தபடி கத்திக் கொண்டிருப்பதைப் பார்த்தான். தரனின் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தது. அவளைத் தூக்கி கட்டிலில் வளர்த்தினான். அவள் துடித்துக் கொண்டிருந்தாள். அவர்களின் கற்பனைகள் எல்லாம் பொலபொலவென்று உதிர்ந்து விழுந்து கொண்டிருந்தன. மீண்டும் வேதாளம் முருங்கை மரத்தில் ஏறிவிட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7

## புதிய பயணம்

நூறுவீதம் நம்பி மகிழ்வைத் தந்த அக்குபஞ்சரும் ஏமாற்றிய பின்பு இருவரும் நன்றாக உடைந்து விட்டார்கள். தரனும் ஒரு கிழமையாக வேலைக்குச் செல்லவில்லை. அவனுக்கு எதிலுமே பிடிப்பில்லாமல் போய்விட்டது.

அவன் தன் எதிர்கால வாழ்க்கைபற்றி திருமணத்தின் முன் வைத்திருந்த கற்பனைகள் எல்லாம் திருமணத்தின்பின் சுக்கு நூறாக உடைந்தமை எதிர்பாராததும் தாங்கமுடியாத துமாகிவிட்டமை அவனை நிலைகுலைய வைத்துவிட்டது. என்னதான் உடைந்தாலும் கிளயாவின் துன்பம் அவனை துயரத்தில் வைத்துக் கொண்டிருந்தது.

ஒரு நாள் மாலை தன் நண்பனைச் சந்திப்பதற்காகச் சென்றிருந்தான். அங்கு நண்பனோடு கதைத்துக் கொண்டி ருந்தபோது அவனது சித்திக்கு கிளயாவைப்போல் வலி இருந்ததாகவும் அவரால் உணவு உண்பது கடினமாக இருந்ததாகவும் சிறீலங்காவுக்குச் சென்று தனியார் வைத் தியசாலையில் உள்ள பிரத்தியேக வயிறு சம்பந்தப்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்தியர் தர்மநாயக்காவை சந்தித்ததாகவும் அவர் வயிற்றில் செய்த சத்திரசிகிச்சைக்குப் பின் அவர் சுகமடைந் துவிட்ட தாகவும் கூறினார். இப்போ அவ எல்லா உணவுகளையும் உண்பதாகவும்,அதை நீ ஏன் முயற்சித்துப் பார்க்கக் கூடாது என்று அவன் நண்பன் கேட்டான்.

வலியோடு ஆரம்பித்த துன்பம் ஒரு கட்டத்தில் உணவெதுவையும் உண்ண முடியாத நிலையையும் அடைந்து கிளயாவையும் தரனையும் துன்பப்படுத்திக் கொண்டிருந்தது. இப்போ நண்பன் கூறியதும் இதைச் செய்தாலென்ன என்று தரனின் மனம் ஆசைப்பட்டது.

அன்று மாலை தரன் தன்னுடைய ஒன்றுவிட்ட சகோதரியைத் தொடர்பு கொண்டு விசாரித்தான். அவனு டைய ஒன்றுவிட்ட சகோதரி கொழும்பிலுள்ள நவலோக வைத்திய சாலையில் வேலை செய்திருந்தாள். இப்போ அவள் அங்கு இல்லையாயினும் உடனே புறப்பட்டு அங்கு செல்லும்படியும் தான் வைத்தியர் தர்மநாயக்காவிடம் கதைத்து ஒழுங்கு செய்வதாகவும் கூறினாள்.

எல்லாவற்றிலுமே தோல்வியைத் தொடராகச் சந்தித்துக் கொண்டிருந்த தரன் விரக்தியின் விளிம்பிலேயே நின்றி ருந்தான். ஆனால் அவன் நண்பன் விடவில்லை. திரும்பத் திரும்ப தரனை வற்புறுத்தினான். கடைசியில் தரன் சம்மதித்து முதலில் இது சம்பந்தமாக கிளயாவோடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதைத்துப் பார்ப்போம், நீயும் என்னோடுவா என்று இருவரும் புறப்பட்டுத் தரனின் வீட்டுக்குச் சென்றனர்.

வீட்டில் கிளயா வலியால் அவதிப்பட்டபடி இருந்தாள்.

இருவரும் இலங்கையில் செய்யப்படக் கூடிய அந்தச் சிகிச்சைபற்றி அவளுக்குக் கூறினர். இதைக் கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்த கிளயா சிறிது நேரம் எதுவும் கூறாமல் இருந்து விட்டு சட்டென " சரி, தரன் போவோம். நீங்கள் அதற்கான ஆயத்தங்களைச் செய்யுங்கள். " என்றாள்.

தரனுக்கும் அவன் நண்பனுக்கும் மிகுந்த சந்தோசம்.

உடனேயே காரியத்தில் இறங்கினார்கள்.

தரன், கிளயா, தரனின் அப்பா - மூவரும் போவதென முடிவு செய்தார்கள். அப்பவே அங்கிருந்தே வைத்தியர் தர்மநாயக்காவிற்கு தொலைபேசி எடுத்தார்கள். கிளயாவின் வலி பற்றிய தன்மைகளை அவருக்கு எடுத்துக் கூறினான் தரன். இது சம்பந்தமாக தரனின் சகோதரி கூறியதையும் வைத்தியர் கூறினார். இவர்கள் கூறிய யாவற்றையும் புரிந்து கொண்ட புரிந்து கொண்ட அந்த வைத்தியர் அவர்களை கொழும்பு நகரில் அமைந்துள்ள பிரபலமான தனியார் வைத்தியசாலையான நவலோகவுக்கு வரும்படி கூறினார்.

இவர்களும் அதனை ஏற்றுக் கொண்டு உடனடிப் பயணத்திற்கு ஏற்பாடு செய்தார்கள். தரனின் அப்பாவுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொலைபேசி மூலம் கூறினார்கள்.தரனின் அப்பா, தரன் கிளயா ஆகிய மூவரும் இலங்கைப் பயணத்திற்குத் தயாராகினர்.

பயணம் ஆரம்பமானது.

கொழும்பு சென்று தரனின் அப்பாவின் சகோதரர் வீட்டில் தங்கி மறுநாள் நவலோகவுக்குச் சென்றார்கள்.

கொழும்பிலேயே பெரியதும் பிரபலமானதுமான நவலோகவுக்குள் காலடி வைத்தனர். தரன் வரவேற்பு பகுதியிலுள்ள பெண்ணிடம் விவரங்களைக் கூற ஏற்கனவே இவர்கள்பற்றி வைத்தியர் தர்மநாயக்கா கூறியதாகவும் அமர்ந்திருக்கும்படியும் கூறினார்கள்.

இரண்டு மணித்தியாலங்கள் காத்திருந்தார்கள். வைத்தியர் வந்ததும் பரிசோதனை அறைக்கு கிளயா அழைத்துச் செல்லப்பட்டாள். அங்கு வைத்து வைத்தியர் தர்மநாயக்கா அவளைப் பரிசோதித்துவிட்டு

" பிரச்சினை புரிந்துவிட்டது" என்றார். தொடர்ந்து

" இன்று 12.30 க்கு சத்திர சிகிச்சை செய்ய வேண்டும்" என்று கூறிவிட்டுச் சென்றுவிட்டார்.

தரனுக்கும் தரனின் தந்தைக்கும் சந்தோசமாக இருந்தது. ஆனால் கிளயா மட்டும் சந்தோசமாக இல்லை. அவள் அனுபவப்பட்டவள். எத்தனையோதரம் இப்படி நம்பிக்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுத்துவிட்டு ஈற்றில் கைவிரிக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் பலவுண்டு. இதனால் அவள் இதனைப் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை.

சரியாகப் 12.30 இற்கு சத்திரசிகிச்சை அறைக்குள் கொண்டு சென்றனர். சத்திரசிகிச்சை ஆரம்பமானது. அண்ணளவாக இரு மணித்தியாலங்கள் சத்திர சிகிச்சை நடந்தது. அந்த அறையைவிட்டு வெளியே புன்னகையுடன் வந்த வைத்தியர்

" வெற்றிகரமாக எல்லாவற்றையும் அகற்றியுள்ளேன். மாலை வந்து சந்திக்கிறேன்" என்று கூறிவிட்டுச் சென்று விட்டார்.

கிளயா ஒரு மணித்தியாலத்தின் பின் சாதாரண அறைக்குக் கொண்டுவரப்பட்டாள். வசதியான அறை. கிளயா இன்னும் கண்ணை மூடியபடியே இருந்தாள். தரனும் தரனின் தந்தையும் அவள் கண் முழிக்கும்வரை காத்திருந்தார்கள். அரை மணித்தியாலயத்தின்பின் கண்முழித்தாள். அங்கு நின்றிருந்த தாதி, செய்ய வேண்டியவற்றைச் செய்துவிட்டு சாப்பாடு ஏதும் கொடுக்க வேண்டாமென்றும் வைத்திய சாலை சாப்பாடு வழங்கும் என்றும் கூறிவிட்டுச் சென்று விட்டாள்.

"வழமையான வலி குறைந்தமாதிரி உள்ளது" என கிளயா கூறினாள். தரன் முகத்தில் மகிழ்வு தெரிந்தது. களைத்துப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போயிருந்த அவன் முகம் சிரித்துப் பூரித்தது. மாலை வைத்தியர் தர்மநாயக்கா தன் குழாத்துடன் வந்தார். அவர் கைகளில் பல படங்கள் இருந்தன. அந்தப் படங்களைக் காட்டினார்.

அந்தப் படங்களில் சத்திரசிகிச்சை செய்யமுன் உடல் உள் இருந்தவைகளைக் காட்டினார். ஒவ்வொரு உறுப்பு களும் ஒருவித படலங்களால் மூடப்பட்டிருந்தன. சிறுகுடல் பெருங்குடல் ஆகியன அந்தப் படலங்களால் இறுக்கிப் பிணைக்கப்பட்டிருந்தன.

சத்திர சிகிச்சைக்குப் பின்னான படங்களில் அந்தப் படலங்கள் முற்றாக அகற்றப்பட்டிருந்தன.

கிளயாவின் வலிக்கும் உணவு உண்ண முடியாமலிருந்த மைக்குமான காரணம் அந்தப் படலங்கள்தான் என்றும் இனி எதுவும் சாப்பிடலாமெனவும் கூறினார். அத்தோடு உள்ளே ரத்தக்கசிவு இருப்பதை அவதானித்தோம். அது சம்பந்தமாக நீங்கள் லண்டனிலுள்ள வைத்தியர்களோடு கலந்துரையாடவேண்டும். தற்போதைக்கு அதற்கு எம்மால் ஒன்றும் செய்ய முடியாது என்று கூறிவிட்டுச் சென்றார்.

கிளயா, தரன், தரனின் அப்பா ஆகியவர்களுக்கு மிகுந்த சந்தோசம் அதே நேரம் இரத்தக்கசிவு பற்றி அவர் கூறிய செய்தி கலக்கத்தையும் தந்தது. இரு கிழமைகள் அங்கு இருந்தபின் மீண்டும் லண்டன் நோக்கிப் பயணமானார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலி பெரிதாக இருக்கவில்லை. லண்டன் வந்து மூன்று வாரங்களின்பின் ஒரு நாள் கிளயா பழையமாதிரிக் கத்த ஆரம்பித்தாள். கீழே ஏதோ அலுவலாக இருந்த தரன் பாய்ந்து விழுந்து ஓடினான். அங்கே கிளயா துடித்துக் கொண்டிருந்தாள்.

தரன் செய்வதறியாது கலங்கிப்போயிருந்தான். மீண்டும் வேதாளம் மரத்தில் ஏறிக் கொண்டது.

தரனுக்கும் கிளயாவுக்கும் என்ன செய்வதென்றே புரியவில்லை. ஆளுக்கொரு மூலையில் இருந்து சிந்திப்பதும் இணையத்தில் சென்று தேடுவதுமே இவர்களின் வழக்க மாகப் போய் விட்டது. அன்றும் அப்படித்தான்!.

இலங்கையிலிருந்து வந்தபின் திரும்பவும் வலி வந்த போது அவசர நோயாளர் காவிக்கு தொலைபேசிபண்ண விரும்பவில்லை. அவசர நோயாளர் வண்டி கொண்டு வருபவர்களுக்கும் சலித்து விட்டது. சில சமயங்களில் கூப்பிட்டு இரு மணித்தியாலங்களின் பின்தான் வருவார்கள். அப்படி வந்தாலும் ஏனோதானோ என்று முகம் சுழித்த படியே செய்வார்கள். அதைப் பார்க்கும்போது கிளயாவுக்கு நிரம்ப வேதனையாகி விடும். தரன் கோபம் கொள்வான். இதனால் வேறு பிரச்சினைகள் உருவாகிவிடும்.

இவைகளைத் தவிர்ப்பதற்காக அவர்களுக்கு அறிவிப் பதை விட்டுவிட்டார்கள். அவர்கள் தங்களையும் வைத்திய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறைகளையும் ஆழமாக நம்பத் தொடங்கினர். இந்தத் தேடலில் கிளயாவின் பெரும்பான்மையான நேரங்கள் வைத்தியசாலைகளின் வராண்டாக்களிலும் காத்திருக்கும் இடங்களிலும் கழியத் தொடங்கியது. இவையெல்லாம் அவளின் விதி என்று கூறும் இறை நம்பிக்கைகளோடு அவளால் ஒன்றிப்போக முடியவில்லை. ஒன்று போனால் இன்னொன்று என்று வேறுவேறு பாதைகளில் தரனோடு கைகோர்த்துக் கொண்டு விடைதேடிப் பயணிக்க ஆரம்பித்தாள்.இணையத்தை அலசிக் கொண்டிருந்தாள். திடீரென்று அவளின் முகத்தில் பிரகாசம் ஒளிர்ந்தது. தரனைக் கூப்பிட்டாள்.

"தரன், இந்தப்பக்கத்தைப் பாருங்கோ?" என்று கொடுத் தாள் .தரன் அதனை வாங்கிப் பார்த்தான். அதில் பிரான்சி லுள்ள ஒரு வைத்தியரைப்பற்றியும் அவரின் திறமைக ளைப்பற்றியும் கூறப்பட்டிருந்தது. அதைப் படித்துவிட்டு அவளின் முகத்தைப் பார்த்தான். அந்த முகம் அவனுக்குப் பல செய்திகளைக் கூறியது.

"சரி, போவம்." ஒரே வார்த்தையில் முடித்துவிட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 8

# பிரான்ஸ் பயணம்

கிளயா பிறந்ததே பிரான்சில்தான். கல்வியில் அடுத்த கட்டத்தை நெருங்க வேண்டுமென்பதற்காகத்தான் அவளை அவள் பெற்றார் லண்டனுக்குக் கொண்டு வந்தனர். அந்த நோக்கத்தில் அவள் வெற்றியே அடைந்திருந்தாள். இன்னும் அவள் பிரான்ஸ் நாட்டின் பிரசையாகவே இருக்கிறாள். அவளுக்கு அதனை விட்டு லண்டன் பிராஜாவுரிமை பெறுவதில் அவ்வளவாக உடன்பாடு இருக்கவில்லை. இதனால்தானோ என்னவோ பிரான்சில் ஒரு வைத்தியர் உள்ளார் என்றதும் தனது பிரச்சினை அவரால்தான் தீரும் என்கின்ற அசாத்திய நம்பிக்கை அவளுள் உருவானது.

தரனைப் பொறுத்தவரை அவளின் சந்தோசம்தான் தனது சந்தோசம் என்று மட்டுமே நினைப்பான். பிரான்சுக்கு சென்றால் சுகமாகும் என அவள் சந்தோசப்படுவதனால் அதைச் செய்வோம் என்று அவன் முடிவு செய்தான்.

பிரான்சுக்குப் பயணமாகினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரான்சில் கிளயாவின் ஒன்றுவிட்ட சகோதரரோடு நின்று கொண்டு அந்த வைத்தியருக்குத் தொலைபேசி எடுத்து தனது நிலைமையை விளக்கினாள் கிளயா. அவரும் அவளை நேரே வரும்படி அழைத்தார். பாரிசிலுள்ள வைத்தியசாலையொன்றில் அவரைச் சந்தித்தனர்.

அந்த வைத்தியர் ஆதரவாகவும் அமைதியாகவும் கதைத்தார். கிளயாவின் கதையை ஒன்றுவிடாமல் கேட்டார். சில நிமிடங்கள் சிந்தித்துவிட்டு ஊடுகதிர்(scan) முறைமூலம் கிளயாவின் உடலின் உட்பகுதிகளைப் பார்த்தபின்தான் எதையும் கூற முடியும் என்று கூறிவிட்டு அதற்கான ஆயத்தங்களைச் செய்யத் தொடங்கினார்.

அவரின் உதவியாளர்கள் கிளயாவை அழைத்துச் சென்று பலவிதமான ஊடுகதிர் பரிசோதனைகள் செய்தனர். அவற்றின் பிரதிகளை எடுத்து அவர் ஆராய்ந்தார். ஆயினும் ஏதோ திருப்தியில்லாமல் இருந்தது. எனவே தானே சென்று செய்தார். அதற்குப் பின்புதான் ஒரு முடிவெடுத்துவிட்டு கிளயாவையும் தரனையும் சந்திக்க வந்தார்.

தன்னுடைய கண்டுபிடிப்புகளையும் முடிவையும் கூறினார். அவரின் கண்டுபிடிப்பு கிளயாவின் வயிற்றினுள் எண்டோமெற்றியோசிஸ் உள்ளது என்பதாகும்.

எண்டோமெற்றியோசஸ் என்பது மெல்லிய சவ்வு போன்று கருப்பையின் உள்குழியில் இருக்கும். ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்ணின் மாதவிடாய் சுழற்சி குறித்த பிரச்சினையின் போது குறிப்பாக அதிக வலியை உணர்ந்தால் அது எண்டோமெட்ரியோசியஸ் பிரச்சினைகளாக இருக்கக் கூடும் என்பது வைத்தியர்களின் முடிவு. இவை வயிற்றுக்குள் பெண்ணின் மாதவிடாய் காலத்தில் சிறுநீரகப் பை, மலக்குடல் போன்ற இடங்களிலும் சென்றுவிடும். கரு முட்டைக்குள் சென்றுவிட்டால் வெளியே வர இயலாமல் அங்கேயே தங்கி உதிரம் நீர்க்கட்டிகளாக வெளியேறும்.

பெண்ணின் மாதவிடாய் காலங்களில் எண்டோ மெற்றி உருவத்திலும் செயற்பாட்டிலும் மாற்றங்களைச் சந்திக்கிறது. இது தடிமனாகிற பட்சத்தில் புற்றுநோயாகிற சாத்தியங்களும் உண்டு. அதே நேரம் இதனால் தொடர்ச்சியான வலிகள் தோன்றுவதற்குக் காரணமாகவும் இருக்கலாம். என்று விளக்கமாகக் கூறிய வைத்தியர் கிளயாவுக்கும் அப்படித்தான் வலி உருவாகிறதென்று கூறி சத்திரசிகிச்சை மூலம் அதை அகற்றிவிடுவதே நல்லது என்றும் கூறினார்.

கிளயாவும் தரனும் உடனேயே சம்மதித்துவிட்டார்கள்.

நாளை மறுநாள் திகதி வைக்கப்பட்டது.

சத்திரசிகிச்சை ஆரம்பிக்க முன்னும் தன்னுடைய முடிவு சரியானதுதானா என்பதை அறிய கிளயாவை மீண்டுமொருமுறை ஊடுகதிர்ப் பரிசோதனை செய்து உறுதிப்படுத்திக் கொண்டார். சத்திரசிகிச்சைக்கான ஆயத்தங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிந்துவிட்டன. அந்த வைத்தியர் உள்ளே நுழைந்தார். கிளயா மயக்கப்பட்டு சத்திர சிகிச்சை ஆரம்பிக்கப்பட்டது.

வயிற்றின் உள் பகுதியை ஆராய்ந்த அந்த வைத்தியரின் முகம் மாற்றமடைந்தது. திரும்பத்திரும்ப எதனையோ தேடினார். அவர் எதிர்பார்த்தது அங்கு இல்லை? அது எப்படி? இப்போதானே 5 நிமிடங்களுக்கு முன் ஊடு கதிர் பரிசோதனை மூலம் பார்த்திருந்தார்!

வைத்தியரின் முகம் வியர்த்தது. தன்னுடைய கண்டு பிடிப்பு ஒரு போதும் தோற்றதில்லையே? இப்போ அவரி டம் எந்தப் பதிலும் இல்லை. சத்திர சிகிச்சை இடையில் நிறுத்தப்பட்டது.

குழப்பமான முகத்துடன் அறையைவிட்டு வெளியே போனார். அவர் எதிர்பார்த்த எண்டோமற்றியோசஸ் கிளயாவின் வயிற்றுள் இருக்கவில்லை.

விடயம் தரனுக்குத் தெரிவிக்கப்பட்டது. தரன் அழுதே விட்டான். மிகுந்த ஆர்வத்தோடு காத்திருந்த தரனுக்கு வந்த செய்தி அவனை சித்திரவதை செய்தது.

மயக்கம் தெளிந்து எழும்பிய கிளயா "ஓ" வென்று அழு தாள். என்ன செய்வது? வைத்தியர் வந்து தன்னுடைய தவறான கண்டுபிடிப்பையிட்டு மன்னிப்புக் கோரிவிட்டு தன்னால் இனி இந்தப் பெண்ணுக்கு வைத்தியம் பார்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியாது என்றும் கூறிவிட்டார்.

தொடர்ச்சியான தோல்விகள் அந்த இரு உள்ளங்களையும் காயப்படுத்திவிட்டது. இருவரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டேயிருந்தார்கள். தரனின் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்து கொண்டேயிருந்தது. கிளயா அவனை நெருங்கி வந்து கட்டிப் பிடித்தாள்.

“ தரன் எங்களுக்கு ஏன் இந்தத் துன்பம்?. நாங்கள் யாருக்கு என்ன செய்தோம்?”

தரன் அவளை இறுகக் கட்டிப் பிடித்தபடி

“ இனி எனக்கு நீ உனக்கு நான்.. இப்படியே வாழ்ந்தி டுவோம்” என்று தரன் சொல்ல

“ இல்லை தரன். நாங்கள் போராடியே ஆகவேணும். இந்த யுத்தத்திலை நாங்கள் வெற்றியடைய வேணும்.” என்று கூறிவிட்டு தரனைக் கட்டிப்பிடித்தபடி விக்கிவிக்கி அழுதாள்.

மூன்று நாட்களின் பின் பிரான்சைவிட்டுப் புறப்பட்ட னர். விமான நிலையத்தில் காத்திருக்கும் போது யாரோ தன் பெயரைக் கூப்பிடுவதை உணர்ந்து கிளயா திரும்பிப் பார்த்தாள். அங்கே அவளின் நண்பி ரேணு நின்று கொண்டிருந்தாள். கிளயா எதிர்பார்க்கவேயில்லை.

ரேணுவோடு உயர்தர வகுப்புமட்டும் படித்திருந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன்பின் இருவரும் சந்திக்கவேயில்லை. ரேணுவுக்கு அருகில் சென்று தரனுக்கு அவளை அறிமுகப்படுத்தினாள். ரேணு தன் கணவன் சபேசனை இருவருக்கும் அறிமுகப்ப டுத்தினாள். நால்வரும் சந்தோசமாகக் கதைத்துக் கொண்டு நின்றிருந்தனர். லண்டனில் அவர்கள் இருக்கும் இடத்தைக் கேட்டாள் கிளயா. ரேணு அதனைக் கூறியபோது தங்களுக்கு அருகாமையில்தான் இருக்கிறார்கள் என்பதை தரனும் கிளயாவும் விளங்கிக்கொண்டனர்.

ரேணுவும் சபேசனும் கூட வைத்திய அலுவலாகவே பிரான்சுக்கு வந்திருந்தனர். அவர்கள் திருமணம் செய்து நான்கு வருடங்களாகிவிட்டன. இன்னும் குழந்தை இல்லை. அது சம்பந்தமாக ஒரு வைத்தியரைப் பார்க்கவே வந்தி ருந்தார்கள். கிளயாவும் தனது வருத்தம்பற்றிக் கூறி கவலைப்பட்டாள். பின்பு இரு பகுதியினரும் தங்களது தொடர்பு விபரங்களைப் பரிமாறிக் கொண்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 9

## மன ஏக்கம்

தூரன் தன் இளமைக்காலங்களில் தன் பிள்ளைபற்றிப் பல கனவுகள் கண்டவன். கிளயா தன் பிள்ளையை அப்படி வளர்க்க வேண்டும் இப்படி வளர்க்க வேண்டு மென்று கனவுகள் கண்டவள்.

இப்போ இருவரும் இணைந்தபின் அந்தக் கனவுகள் தூரத்தூரப் போய்க் கொண்டிருப்பதைப் பார்த்து ஏங்கித் தவித்தார்கள். மனதிற்குள்ளே இருவரும் குமைந்தாலும் வெளியில் காட்டிக் கொள்ளாமல் ஒருவருக்கொருவர் அன்பாகவே இருந்தனர்.

பிள்ளை இல்லாமல் இருப்பதற்கு கிளயாவின் கண் ணுக்குத் தெரியாத வலிதான் காரணம் என்பதை இருவருமே உணர்ந்திருந்தார்கள். ஆக இந்த வலி நின்றுவிட்டால் தமக்குப் பிள்ளை கிடைக்கும் என்பதையும் நூறுவீதம் நம்பினார்கள்.

நண்பர்களின் வீட்டுக்குப் போகும்போது அவர்கள் குழந்தையோடு மகிழ்வாக இருப்பதைப்பார்த்து தமக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்படி ஒரு வாழ்வு அமையவில்லையே என்று நினைத்து ஏங்குவார்கள். அந்த ஏக்கத்தோடு வீட்டிற்குவந்து கண்ணீர் விட்டு அழுவார்கள். பின்பு தாமே சமாதானமாகி அமைதியடைவார்கள்.

பிரான்சில் தமக்கு ஒரு விடை கிடைக்கும் என்று நம்பிக் கிடைக்காமல் போனதும் சிறிது தளர்ந்துதான் போனார்கள்.

பலரும் பலவிதமான யோசனைகளைச் சொன்னார்கள்.

வாடகைத்தாய் முறையினைப்பற்றியும் கூறினார்கள். யாரோ ஒரு பெண் வாடகைக்கு இவர்களின் குழந்தைக்குத் தாயாவதுதான் இந்த முறைமை.

இவர்கள் இருவரினதும் கரு முட்டைகளைத் தன் கரு வறையில் சுமந்து ஒன்பதுமாதம் வயிற்றினுள் வளர்த்து இவர்களின் கைகளில் குழந்தையை ஒப்படைத்துவிட்டு திரும்பியே பாராமல் சென்று விடுவதுதான் வாடகைத்தாய் முறை.

இந்த முறைக்கு தரன் ஒத்துழைக்க விரும்பவில்லை. எங்களின் சுயநலத்திற்காக ஒரு பெண்ணின் வறுமையைப் பயன்படுத்தி அவளின் தாய்மை உணர்வுகளை வலுக்கட்டாயமாகப் பறிக்கும் இம்முறையை தரன் அறவே வெறுத்தான். கிளயாவும் அதற்கு உடன்படவில்லை. அப்படி இன்னொரு தாயின் உணர்வுகளைப் பறித்துத்தான் எமக்குக் குழந்தை வருமாகவிருந்தால் அந்தக் குழந்தை வேண்டவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டாம் என்று இருவருமே ஒன்றாகக் கூறினார்கள்.

வேறு சிலர் ஒரு குழந்தையைத் தத்தெடுக்கலாமே என்றும் கூறினர். தங்களுடைய இரத்த சம்பந்தம் இல்லாத ஒரு குழந்தையை எப்படித் தங்கள் குழந்தை என்று சொல்வதெனக் கேட்டு அடியோடு மறுத்தனர். எவ்வளவோ சொல்லிப் பார்த்தார்கள். கிளயாவும் தரனும் ஒத்துக் கொள்ளவேயில்லை.

ஆக இன்னும் ஒரேயொரு முறைதான் உள்ளது. அது பரிசோதனைக் குழாய் பிள்ளை. இவர்கள் இருவரினதும் கருமுட்டைகளைப் பாதுகாப்பாக ஒரே வெட்பதட்ப நிலைகளில் ஒரு பரிசோதனைக் குழாயில் வைத்துக் கருக்கட்டச் செய்து ஒரு கட்டத்தில் அதனைக் கிளயாவின் கருவறைக்குள் வைத்து வளர்ப்பது. இதற்கு ஓரளவிற்கு இருவரும் உடன்பட்ட போதிலும் வைத்தியர்களின் அபிப்பிராயங்கள் சாதகமாக இருக்கவில்லை. குழந்தையை வைத்து வளர்க்கின்ற அளவுக்கு கிளயாவின் கருவறை பலம் நிறைந்தது இல்லை என்பதே வைத்தியர்களின் அபிப் பிராயம். இதுவும் தட்டுப்பட்டுப் போயிற்று.

இந்த ஆலோசனைகளை ஏற்றுக் கொள்வதென்பது அவர்களுக்கு என்றைக்குமே குழந்தை பிறக்காது என்பதனை ஏற்றுக் கொள்வதாகிவிடும் என்றே இருவரும் நினைத்தனர். அவர்களின் ஆழ்மனதில் குழந்தை பிறக்கும் என்ற நம்பிக்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிக ஆழமாகப் பதிந்துள்ளது. இந்த நம்பிக்கையைச் சாகடிக்க அவர்கள் விரும்பவில்லை.

கிளயாவின் வலி உச்சத்திற்குப் போகும் போதெல்லாம் தங்களின் எல்லா ஏக்கங்களையும் ஒருவர் மேல் ஒருவர் அன்பு செலுத்துவதன் மூலம் போக்கிக் கொள்வர். உணர்வு களின் மொத்தவடிவமாகவே இருவரும் வாழ்ந்து வந்தனர்.

பலவிதமான உதவி செய்யும் அமைப்புகளுடனெல்லாம் கிளயா தொலைபேசி மூலமாகத் தொடர்பு கொண்டு தங்களது பிள்ளையில்லாத் தன்மை பற்றி உரையாடுவாள்.

பிள்ளை கிடைப்பதும் இல்லாமல் போவதும் தங்களது இயலாமையால் அல்ல என்பதை இருவரும் நன்கு புரிந்து கொண்டனர். அவள் மலடியல்ல. அதேநேரம் அவன் மலடனுமல்ல. யாரும் எதிர் பாராமல் அவளின் வயிற்றினுள் தொடங்கிய வலியும் அந்த வலியைக் கண்டுபிடிக்க முடியாத மருத்துவ உலகமும்தான் காரணமென்பதை இருவரும் நன்கு உணர்ந்திருந்தனர்.

நிச்சயமாக இருவருக்கும் குழந்தை பிறக்கும் என்ற அசையாத நம்பிக்கை, வலி வளர்வதுபோல் அதுவும் வளர்ந்து கொண்டுதானிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10

## நண்பியின் வலி

அன்று காலை அழகாக விடிந்து கொண்டிருந்தது. தரனும் கிளயாவும் படுக்கையைவிட்டு எழும்பி காலைக் கடன்களை முடித்துவிட்டுக் காப்பி குடித்துக் கொண்டிருக்கும் போது கிளயா கேட்டாள் " தரன் இன்றைக்கு ரேணு வீட்டை போவமா?"

"போவோமே. முதலில் அவர்களைத் தொடர்பு கொண்டு அவர்களின் வசதியைக் கேளுமன்" என்று தரன் பதிலளித்தான்.

கிளயா உடனேயே ரேணுவுக்குப் தொலைபேசி எடுத்தாள். ரேணுவும் உடனே சம்மதிக்கவே " தரனுக்கு வேலை முடிந்ததும் மாலை ஆறு மணிக்கு வருகிறோம்" என்று கூறிவிட்டுப் தொலைபேசியை வைத்தாள்.

தரன் தன் வேலையை ஆரம்பிக்க கிளயா தொலைக் காட்சியில் தன் கவனத்தைச் செலுத்தினாள்.

நேரம் தன்பாட்டில் நகர்ந்து கொண்டிருந்தது.

ஆறுமணியானதும் இருவரும் புறப்பட்டனர். அவர்கள் வீட்டை அடையும்போது ஆறு முப்பதாகிவிட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் வீட்டு அழைப்பு மணியை அழுத்தினார்கள்.

ரேணுதான் வந்து திறந்தாள். உள்ளே வந்ததும் கதிரை ஒன்றில் சபேசனின் அம்மா இருந்தார். அவவுக்கு வணக்கம் கூறிவிட்டு கதிரையில் போய் அமர்ந்தனர்.

ரேணு தேனீர்போட உள்ளே போய்விட்டாள்.

சபேசனும் தரனும் உலக விடயங்களைக் கதைத்தனர். தேனீரோடு வந்து ரேணுவும் கலந்து கொண்டாள். மனம் விட்டுக் கதைத்தனர். அப்போதான் கிளயா தன் விடயம் பற்றிக் கூறினாள்.

திருமணம் முடிந்த அன்றிலிருந்து நடந்த விடயங்களை ஒன்றும் விடாமல் கூறினாள். அவளுடைய அந்தச் சோக மான விடயங்கள் எல்லோரையும் கவலை கொள்ள வைத்தது.

“ ஏன் ஒரு வைத்தியராலையும் கண்டுபிடிக்க முடிய வில்லையா?” என்று சபேசனின் அம்மா கேட்டார்.

“ இல்லையம்மா... எல்லாரும் தொடங்க முதல் கண்டு பிடிச்சிட்டம் சத்திர சிகிச்சை முடிய எல்லாம் சரியாகும் என்று சொல்லி பணத்தைக் கறந்திடுவாங்கள். முடிவிலை ஒண்டும் நடக்காது” என கிளயா கூறினாள்.

சிறிது நேரம் அமைதியாக இருந்தனர்.

“ உங்கள் இருவரின்ரை அம்மா அப்பா இருக்கினமே?” சபேசனின் அம்மா கேட்டா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" ஓம்.. இருக்கினம்" என்றாள் கிளயா.

" உம்மடை மாமா மாமி எப்பிடி நல்லவையே?" என்று ரேணு கேட்டாள்.

" அவை என்னை தங்கடை குழந்தை மாதிரித்தான் பார்க்கிறவை. எண்டைக்கும் வித்தியாசமாய் பார்க்காயினம். தரனுக்கும் குழந்தையிலை ஆசை. இந்த வருத்தம் மாறினால் தானே எதுவும் வரும்" என்று கிளயா சொன்னாள்.

"உனக்குப் குழந்தையில்லையென்று மாமா மாமிக்குக் கவலையில்லையே?" என்று சபேசனின் அம்மா கேட்டார்.

"ஆருக்குத்தான் ஆசையில்லை. அதை வைச்சு ஒரு நாளும் என்னைப் பேசமாட்டா மாமி." என்று கிளயா கூற ரேணு சபேசனின் கண்களைப் பார்த்தாள். சபேசன் தன் தலையைக் குனிந்து கொண்டான்.

இதனை கிளயாவும் தரனும் கவனிக்கத் தவறவில்லை.

மேலும் இருந்து கதைக்காமல் " அப்ப நாங்கள் வெளிக்கிடப்போறம்.. நீங்களும் ஒரு நாளைக்கு வீட்டை வாங்கோ... வரேக்கை அம்மாவையும் கூட்டிவாங்கோ" என்று கூறிவிட்டுப் புறப்பட்டனர்.

ரேணுவும் சபேசனும் வாசல்சரை வந்து அனுப்பி வைத்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 11

## பரிதாபமான பெண்

கிளயாவும் தரனும் போன பின்பு உள்ளே வந்த ரேணுவும் சபேசனும் குழப்பநிலையில் இருந்தார்கள். ரேணுவுக்கு தனது மாமியார் கிளயரோடு கதைத்த விடயங்கள் பிடிக்கவில்லை. அதனால் நேரடியாகவே தனது மாமியாரிடம் ,

"ஏன் மாமி அப்பிடிக் கதைச்சனீங்கள்?" என்று கேட்டாள்.

" எப்படி?" மாமியாரும் இடக்காகவே பதிலளித்தார்.

சபேசனுக்கு விளங்கிவிட்டது. " இண்டைக்கு பெரிய சண்டை நடக்கப்போகுது" என மனதுள் சொல்லிக் கொண்டான்.

" அவையள் ஏற்கனவே வருத்தத்தோடை இருக்கேக்கை நீங்கள் ஏன் குழந்தையைப்பற்றிக் கேட்டனீங்கள்?" என்று ரேணு கூறினாள்.

" நான் என்ன கதைக்கவேணுமெண்டதை உம்மைக் கேட்டுத்தான் கதைக்க வேணுமோ?" மாமியார் கூறினார்.

" நான் அப்பிடிக் கூறயில்லை. அவள் என்ரை நண்பி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னைப் பார்க்கத்தான் வந்தவள். நீங்கள் ஏன் அதிலை வந்து கதைச்சனீங்கள்." ரேணு இப்படிக் கேட்க சபேசனின் அம்மா " அப்ப நான் ஆரோடையும் கதைக்கக் கூடாது. அதுதானே உமது திட்டம்" என்று பேச்சை திசை திருப்பி விட்டார்.

இத்தனைக்கும் இந்த உரையாடல்களை செவிமடுத்தபடி எவ்வித சலனமுமின்றி தன் வேலையில் கவனமாக இருந்தான் சபேசன்.

ரேணு திரும்பவும் மாமியாரிடம் " நான் ஒன்று உங்களைக் கேட்கலாமா?" என்றாள்.

"ம்"

" நண்பி கிளயாவை அவவின்ரை மாமியார் பிள்ளை மாதிரித்தானே பார்க்கிறார்" என்றாள் ரேணுா.

" அதுக்கென்ன நானும் இப்ப இரண்டு வருசமாய் உன்னைப் பிள்ளைமாதிரித்தானே பார்த்தன். இப்ப உனக்கு என்ரை வம்சத்தை வளர்க்க லாயக்கில்லை என்ற பிறகுதானே கொஞ்சம் கடுமையாய் நடந்தன். உண்மைதானே?" என்று மாமியார் கூறினார்.

" கிளயாவுக்கும் பிள்ளை இல்லைத்தானே!" என்றாள் ரேணு.

" உன்னையும் கிளயாவையும் ஒன்றாகப் பார்க்காதை. அவளுக்கு வருத்தம் சுகமானால் குழந்தை பெற்றுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளலாம். உனக்கு அப்பிடியே?" மாமியார் இப்படி குத்திக்காட்டிப் பேசினதும் ரேணுவுக்கு அழுகை வந்து விட்டது.

திரும்பிக் கணவனைப் பார்த்தாள். அவன் தன் காதில் எதுவும் கேளாதவன்போல் தன் வேலையைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

"அதுக்கு நானென்ன செய்யிறது. நான் வேண்டுமென்றா செய்யிறன். கொஞ்சமும் மனிசத்தன்மை இல்லாமல் பேசிறியள். உங்கடை மகளுக்கு இப்படிவந்தா இப்பிடிச் செய்வியளே?" ரேணு தன்னைத்தானே காப்பாற்றிக் கொள்ளவேண்டிய யுத்தத்தை நிகழ்த்திக் கொண்டிருந்தாள்.

" தேவையில்லாமல் கதையாதை. என்னைப் பொறுத் தவரை எனக்குப் பேரனோ பேத்தியோ வேணும். நீ என்ரை மகனை விட்டிட்டுப் போறியோ அல்லது என்ன இழ வெண்டாலும் செய்" இப்படிக் கூறிய மாமிக்காரியைப் பார்த்துக் கொண்டிருந்த ரேணு அப்படியே ஸ்தம்பித்து நின்றாள்.

பெண்களின் வாழ்க்கை என்பது வெறுமனே பிள்ளை பெற்றுக் கொடுப்பது என்பதாகச் சமூகம் கருதுகிறது. பிள்ளை பெற்றுக் கொடுப்பதால்தான் அவளைக் கடவுளுக்குச் சமமாகக் கருதுவதாக சமூகம் கூறுகிறது. இவற்றை உடைத்துக் கொண்டு வெளியே வரும்போது அவளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடங்காப்பிடாரியாகவும் நடத்தை கெட்டவளாகவும் இந்தச் சமூகம் பெயரிட்டுவிடுகிறது. பெண்ணியம் பேசுப வர்களும் நடைமுறையில் உள்ள இந்தக் கொடுமை களைப்பற்றி துளியும் மூச்சுவிடுவதில்லை.

ஆண்களைப் பொறுத்தவரை ஒன்றுபோனால் இன் னொன்று என்ற நிலைதான். நேரம்போகவில்லையெனில் பெண்ணுரிமைபற்றி பேசுவார்கள் அதன்பின் அம்மாவின் சேலைக்குப் பின்னால் ஒழிந்து விடுவார்கள். இப்படியா னவர்களில் ஒருவன்தான் சபேசன்.

சபேசனை எரிச்சலோடு பார்த்த ரேணு, அவனிடமிருந்து தனக்கு எதுவும் கிடைக்காதென்பதைப் புரிந்து கொண்டு தன்னளவில் துணிந்து ஒரு முடிவை எடுத்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 12

## தரனின் அன்பு

கிளயாவின் வலி நாளுக்கு நாள் அதிகரித்ததே ஒழிய குறைவதாகத் தெரியவில்லை. கூடுதலான நேரம் தரன் அவள் அருகிலேயே இருந்தான். வலி ஆரம்பித்த காலத்தில் இருந்து கிளயாவுக்கு அவன் ஒரு அசைக்க முடியாத அன்புத் தூணாகவே இருந்தான். அவள் வலி தாங்காமல் அழும்போது அருகிலிருந்து அவளைத் தடவிக் கொடுத்து ஆறுதல் படுத்தும்போது சில சமயங்களில் அவனது கண்களிலிருந்தும் கண்ணீர் உருண்டோடும். இந்தத் துயரத்திலிருந்து எப்படி வெளியே வருவதென்று இருவருக்குமே புரியவில்லை.

இந்தச் சமூகமும் அவளைவிட்டு வைக்கவில்லை.தமிழ்ச் சமூகத்தில் பெண்ணைச் சுற்றி எத்தனையோ எழுதப்படாத சட்டங்களை காலங்காலமாக அமுல் படுத்தி வருகிறார்கள். குறித்த காலத்தில் பிள்ளை பெற்றுக் கொள்ள முடியாத பெண்கள் சமூகத்தில் நடக்கும் மங்கல நிகழ்வுகளில் நடைபெறும் சமயக் கிரிகைகளில் பங்குபற்றக் கூடாது என்பது மேலே கூறிய எழுதப்படாத சட்டங்களில் ஒன்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பாகப் பூப்புனித நீராட்டு வைபவங்களிலும் திருமண வைபவங்களிலும் இந்த எழுதப்படாத சட்டம் கடுமையாக மூத்த பெண்மணிகளால் அமுல் நடத்தப்படும். இதற்குக் காரணம் பிள்ளை இல்லாதவர்கள் பங்குபற்றினால் அந்தப் பெண்களுக்குப் பிள்ளைப் பாக்கியம் இல்லாமல் போய் விடும் என்பதே.

எழுதப்படாத சட்டத்தின் பாதிப்பு கிளயாவின் வாழ் விலும் நடந்தது. ஒரு சமயம் கிளயா அவளது நெருங்கிய உறவினர் வீட்டுத் திருமணத்திற்குச் சென்றிருந்தாள். அங்கு சென்ற இருவரும் மணமேடைக்கு முன்னாலிருந்த ஆசனத்தில் அமர்ந்து கொண்டனர். இவர்களோடு கிளயாவின் அம்மாவும் தங்கையும் அமர்ந்திருந்தனர்.

திருமணமேடையில் கிரியைகள் நடந்து கொண்டிருந்தன. திருமணத்தை நடத்திக் கொண்டிருந்த குருக்கள் மணப்பெண்ணின் தாயாரைப் பார்த்து ஐந்து பெண்களை அழைத்து வாருங்கள் என்று கூறினார். மணப்பெண்ணின் தாயார் கிளயா இருந்த இடத்தை நோக்கிவந்து கிளயாவைத் தவிர்த்து மற்றவர்களை அழைத்தபோது கிளயாவின் தங்கை கிளயாவை அழைத்துச் செல்லும்படி கூற அவர் அதனைப் பொருட்டாகக் கொள்ளாமல் மற்றவர்களை வலுக் கட்டாயமாக அழைத்துச் சென்றார். இந்த நிகழ்வு கிளயா வின் மனதை சுள்ளென்று தைத்தது. மனம் உடைந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழுதாள்.

அதன்பின் எதுவும் கூறாது தரனும் கிளயாவும் அந்த இடத்தைவிட்டுப் புறப்பட்டுவிட்டார்கள். அந்த நிகழ்வு கிளயா நடக்க ஏலாமல் இருப்பதால் நிகழ்ந்ததா? அல்லது எழுதப்படாத சட்டத்தின் பிரகாரம் கிளயா ஒதுக்கப் பட்டாளா என்பது புரியாத புதிராகவே இருந்தது.

இப்படியான நிகழ்வுகள் கிளயாவிடம் வாழ்க்கைமீது ஒருவித விரக்தியை உண்டுபண்ணியிருந்தது.சில சமயங்க ளில் கிளயா தன்னைத்தானே முடித்துக் கொண்டால் என்ன என்று சிந்திப்பாள்.தன்னுடைய இந்த வலியினால் தரன் ஏன் துன்பப்படவேண்டுமென்றும் நினைப்பாள். ஒரு தடவை தன்னிடமுள்ள குளிசைகள் எல்லாவற்றையும் கட்டிலில் கொட்டிவிட்டு அவற்றை ஒரேயடியாக உட் கொண்டு தன் உயிரை மாய்த்துவிட எண்ணிக் கொண்டி ருந்தபோது தற்செயலாக வந்த தரன் கண்டு விடுகிறான். பாய்ந்து வந்து குளிசைகளைத் தட்டி விட்டு அவளைப் பார்த்துக் கண்ணீர்விட்டழுதான்.

"என்னைத் தனியே விட்டுவிட்டுப் போகிறாயா?" என்று அழுதபடி கேட்டான். அவன் அழுவதைப்பார்த்த அவளும் சேர்ந்தழுதாள். அன்று அவன் கிளயாவைப் பார்த்து இனிமேல் இப்படியான முயற்சியில் இறங்க மாட்டேன் என்று சத்தியம் பண்ணும்படி கேட்டு வாங்கிக் கொண்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றிலிருந்து இருவரும் எந்த முடிவையும் ஒன்றாக இணைந்தே எடுத்தனர். தரனைப் பொறுத்த அளவில் அன்போடு காதலித்த கிளயா தனியப்படுகின்ற துயரம் அவனது நெஞ்சைப் பிழிந்தது. கிளயா இரவு நேரத்தில் தூங்குவதேயில்லை. ஊரெல்லாம் தூங்கும் போது தன் நெஞ்சோடு நெருங்கியவள் தூங்காமல் இருக்கிறாளே என்று தனக்குள் தானே அழுதான் தரன்.

இரவு நேரங்களில் தூக்கம் வராமல் யன்னல் ஓரம் சென்று தன்னைத்தவிர மரம் செடி கொடிகளெல்லாம் அமைதியாகத் தூங்கிக் கொண்டிருப்பதைப் பார்த்து ரசிப்பாள். இவைகளையெல்லாம் தூங்குவதுபோல் பாசாங்கு செய்து கொண்டு அவளையே அவதானித்துக் கொண்டிருக்கும் தரனின் துன்பத்தை என்னவென்று சொல்வது?.

தரன் தனக்குள் தானே ஏன் கிளயாவின் வலி யாராலும் கண்டு பிடிக்க முடியாததாக உள்ளது? அவன் பல மருத்து வத்தில் புகழ்பெற்ற பல வைத்தியர்களை அணுகிக் கேட்டி ருக்கிறான். யாராலுமே அவனது கேள்விக்கு விடையளிக்க முடியவில்லை. இணையத்துள் சென்று தேடுவான். பல மருத்துவ சஞ்சிகைகளை வாங்கி ஓய்வு நேரமெல்லாம் படிப்பான். எங்கும் எதிலும் அவனது கேள்விக்கு விடை இல்லவேயில்லை. மனம் சோர்ந்து வாழ்க்கையையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெறுத்து ஓய்ந்து ஒடுங்கிப்போய் இருப்பான்.

அவளது துயரத்தை போக்குவதில் அவனது அர்ப்பணிப்பு அதி உன்னதமாக இருந்தது. தாங்கள் இருவரும் காதலிக்கும் போது இருந்த இன்பமான நாட்களை அவளுக்கு நினைவு படுத்துவான். அவளும் அவனும் சேர்ந்து சிரித்து மகிழ்ந்த அந்தச் சந்தர்ப்பங்களை நினைவுபடுத்துவான். அதனைக் கேட்டு அவள் வலியை மறந்து அவனோடு சேர்ந்து சிரிப்பாள். அந்தச் சிரிப்பைப் பார்த்து அவனது மனம் புளகாங்கிதம் அடையும்.

எப்பொழுதும் தான் அவளுடையவன் என்பதை நினைவுபடுத்திக் கொண்டேயிருப்பான். அவளது சுகதுக் கங்களை தடையின்றிக் கேட்கக் கூடியவனாகவும் சோர்வு வரும்போது அவள் சாய்ந்து கொள்ளத் தன் தோள்கள் காத்திருப்பதாகவும் உணர்த்திக் கொண்டேயிருப்பான். அவளின் நம்பிக்கை, தைரியம் எல்லாமே தான் தான் என்பதை சந்தர்ப்பம் கிடைக்கும்போதெல்லாம் உணர்த் துவான். அவனுடைய இந்தச் செயற்பாடுகள் வலியிலும் கிளயாவை வாழ ஊக்குவித்துக் கொண்டிருந்தது. ' நான் தனித்தவளல்ல. என்னருகில் எனக்காக என் தரன் இருக்கிறான்' என்ற உன்னதமான உணர்வு அவளை வாழ வைத்துக் கொண்டிருந்தது. தரன் அருகில் இருக்கும்போது எந்தத் துயரக் கடலையும் நீந்திக் கடந்துவிடலாம் என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் மனம் அவளுக்கு உணர்த்திக் கொண்டிருந்தது.

துயரமானது அதிகரிக்க அதிகரிக்க அவர்கள் இருவருக்கு மிடையிலான பிணைப்பு மேலும்மேலும் அதிகரித்துக் கொண்டேயிருந்தது. இந்தப் பிணைப்பினால் உருவான சக்தி அவர்களைச் சோர்ந்துபோகவிடாது எப்படியாவது எவ்வளவு காலமானாலும் இந்தத் துயரத்திலிருந்து வெளியே வந்துவிடுவோம் என்ற மனத்தைரியத்தை அள்ளிக் கொடுத்துக் கொண்டிருந்தது. இவர்களுக்கிடையில் உதித்த இந்தக் காதல் வெறும் உணர்வாக இல்லாமல் உயிரோடு பின்னிப் பிணைந்து இருந்தது.

அன்று இருவரும் கதைத்துக் கொண்டிருந்தபோது ரேணுவின் கதை வந்தது. " தரன் அண்டைக்கு பிள்ளைப் பிரச்சினை சம்பந்தமாக மாமா மாமியைப்பற்றிக் கதைக்கும் போது ரேணு சபேசனைப் பார்த்ததையும் சபேசன் குற்ற உணர்வோடு தலையைக் குனிந்ததையும் அவதானிச்சியளே." என்று கேட்டாள்.

" ஓம் பார்த்தனான். நான் நினைக்கிறன் அங்கை சபேசனின்ரை அம்மா கொஞ்சம் பிரச்சினைபோலக் கிடக்குது." என்று தரன் கூறினான்.

" அந்த மனிசியைப் பார்த்தால் அப்பிடித்தான் கிடக்குது. கொஞ்சம் கறார் பிடிச்ச மனிசி என்றுதான் நினைக்கிறன்." என்றாள் கிளயா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எதுக்கும் ரேணுவோடை கதைச்சுப் பாரும். பாவம் அவ" என்று தரன் கூறிமுடிக்க அவர்களின் அழைப்பு மணியடித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13

## பிரிவு

அழைப்பு மணிச் சத்தம் கேட்டுத் தரன் போய் கததவைத் திறந்தான். அங்கே ரேணு நின்றிருந்தாள்.

ரேணுவின் கண்கள் கலங்கி இருந்தன. அவளை உள்ளே அழைத்து அமரச் சொல்லிவிட்டு மேலேயிருந்த கிளயாவுக்கு ரேணு வந்திருக்கும் விடயத்தைத் தெரியப்படுத்தினான்.

கிளயா கீழே இறங்கிவந்து

" உமக்கு நூறு வயது இப்பதான் உம்மைப்பற்றிக் கதைச்சுக் கொண்டிருந்தனாங்கள்." என்று கிளயா கூறினாள்.

" மன்னிச்சுக் கொள்ளுங்கோ சொல்லாமல் கொள்ளாமல் வந்திட்டன்" என்று ரேணு கூற

" சீச்சீ பரவாயில்லை என்ன குடிக்கிறீர்?" என்று கிளயா கேட்டாள். அவள் பதில் சொல்ல முன் தரன் எழுந்து சென்று தேனீர் போட ஆரம்பித்துவிட்டான்.

" என்ன முகம் ஒருமாதிரிக் கிடக்குது." என்று கிளயா கேட்டாள். கிளயா கேட்டதும் ரேணுவின் கண்கள் கலங்கி அழத் தொடங்கிவிட்டாள்.

கிளயாவுக்குத் தர்ம சங்கடமாகிப்போய்விட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரேணு தன் பிரச்சினையை மெதுவாகக் கூறினாள். ரேணுவின் மாமியாருக்கும் ரேணுவிற்குமிடையில்தான் பிரச்சினை. ரேணுவுக்குப் பிள்ளை பிறக்கவில்லை என்பது சபேசனின் அம்மாவுக்குப் பெரும் பிரச்சினையாகி ரேணுவை தாறுமாறாகப் பேசிவிட்டாள். அதைவிட இப் பிரச்சினை நடக்கும் போது சபேசன் எதுவும் கூறாது தன் வேலையைப் பார்த்துக் கொண்டிருந்தான் என்பதும் ரேணுவை நன்றாகத் தாக்கிவிட்டது.

இந்த விபரங்களைக் கூறிவிட்டு ரேணு அழுதாள். ரேணுவின் கண்களைத் துடைத்துவிட்டு "ஏன் சபேசன் எதுவும் பேசவில்லை?" என்று கிளயா கேட்டாள்.

" அவர் அம்மா பிள்ளை. அம்மாவுக்கு எதிராக எதுவும் சொல்ல மாட்டார்." என்று ரேணு சொன்னாள்.

"நீங்கள் இருவரும் காதலித்துத்தானே திருமணம் செய்தனீர்கள்?" தரன் கேட்டான்.

" ஓம் காதலித்துத்தான் செய்தனாங்கள்." என்று ரேணு கூறினாள். ரேணு தொடர்ந்து கூறினாள்.

" எங்கடை காதலிலை எங்கடை வீட்டாருக்கு விருப்ப மில்லை. சபேசனின்ரை அம்மாவுக்கு விருப்பம். எங்கடை கல்யாணத்திற்குக் கூட அம்மா அப்பா வரயில்லை." என்று கூறிவிட்டு எதுவும் பேசாது இருந்தாள் ரேணு.

இன்றைய சமுதாய அமைப்பில் ஒரு குடும்பத்தில் பிள்ளை இல்லை எனும்போது குற்றஞ்சாட்டுவது பெண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ணையே. ஆணை யாரும் எதுவும் சொல்வதில்லை. இந்த ஆணாதிக்க சமூக அமைப்பில் வேறு எதையும் எதிர் பார்க்கவே முடியாது.

"நான் விட்டிட்டுப்போவன் ஆனால் அவர் பாவம்." என்று ரேணு சொன்னபோது கிளயாவும் தரனும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

பெண்களின் பலயீனமும் இதுதான். இந்த எண்ணப் போக்கிலிருந்து பெண்கள் வெளியே வரும்வரை ஆண் தன்னால் முடிந்தவரை பெண்ணைப் பழிவாங்கிக் கொண் டேயிருப்பான். ஆண் பெண்ணைப் பாவம் பார்ப்பதும் பெண் ஆணைப் பாவம் பார்ப்பதும் இல்லாமல் ஒழியும் போதுதான் சமநிலை ஒன்று உருவாகும்.

" சரி. சமாளித்துப் போக முடியாவிட்டால் என்ன செய்வதாக உத்தேசம்?" என்று தரன் கேட்டான்.

" எனக்குத் தெரியேல்லை. ஒவ்வொரு நாளும் எதுக்கு எடுத்தாலும் பேசிக் கொண்டேயிருப்பா. தன்ரை பையனை விட்டிட்டு என்னைப் போகச் சொல்லுவா. முந்தியெல்லாம் இப்பிடியில்லை. இந்த ஒரு வருசமாய்த்தான் இந்த நிலைமை. அவையின்ரை ஆரோவொரு சொந்தக்காரர் வந்துபோன பிறகுதான் இப்பிடி இருக்கிறா. முந்தி இந்தத் துன்பங்களைச் சொல்ல ஒருவரும் இல்லை. இப்ப நீங்கள் வந்தபடியால்தான் சொல்லிறன். இல்லையெண்டால் எனக்குள்ளை நினைச்சு அழுது கொண்டிருப்பன்." என்று ரேணு கூறினாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சரி..இப்ப உன்னைக் கலைச்சுப்போட்டு வேற பொம்பிளையைக் கட்டினால் கட்டாயம் பிள்ளை பிறக்கும் எண்டது என்ன நிச்சயம்?" கிளயா கேட்டாள்.

" இல்லை பிறக்கும். பிள்ளை பெறுகிற தன்மை எனக் குத்தான் இல்லை. என்ரை கருப்பை பலவீனமானதாம். ஒரு குழந்தையைத் தாங்கும் சக்தி அதுக்கு இல்லையாம்."

ரேணு கூறிவிட்டு அழுதாள்.

"உந்த விசயம் உன்ரை மாமிக்குத் தெரியுமே?" கிளயா கேட்டாள்.

" ஓம் அதையும் சபேசன்தான் அவவுக்குச் சொன்னவர். நான் இப்ப சொல்ல வேண்டாமென்று அவருக்குச் சொல்ல தான் தன் தாய்க்குப் பொய் சொல்லவும் மாட்டன் மறைக் கவும் மாட்டன் என்று பிடிவாதமாய் நின்று சொல்லிப் போட்டார்."

ரேணு கூறினாள்.

" சரி ரேணு கவலைப்படாதை. இதைப்பற்றி யோசித்து முடிவெடுப்பம். இப்ப நீ போயிட்டு வா நல்லாய் இருட்ட முன்னம்."

என்று கிளயா கூறி அவளை அனுப்பி வைத்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 14

## உறவுகள்

என்னதான் தைரியமாக இருந்தாலும் உறவுகளும் உலகமும் துன்பப்படுபவர்களை தைரியமாக இருக்கவிடுவதில்லை. ஆனால் இந்த விடயத்தில் கிளயாவும் தரனும் கொடுத்து வைத்தவர்கள் என்றே சொல்லவேண்டும். தரனின் பெற்றார்களும் கிளயாவின் பெற்றாரும் உறு துணையாகவே இருந்தார்கள். ரேணுவின் மாமியாரோடு ஒப்பிடும்போது தரனின் பெற்றார் கடவுள் போன்றவர்கள் என்று மனதுள் நினைத்துக் கொண்டாள் கிளயா. ஆணா திக்கம் நிறைந்த இந்த சமூகம் இப்படியான பிரச்சினைகளை ஆணுக்குச் சாதகமாகவே முடிவெடுக்கிறது. அதற்குச் சாதகமான மனிதர்களும் தோற்றுவிக்கப்படுகிறார்கள்.

தரன், கிளயா பக்கத்துப் பெற்றார்கள் வித்தியாசமாகவே இந்தப் பிரச்சினையை அணுகினார்கள். பெண்ணைப் பெற்றவர்கள் எப்போதும் பயத்துடன் வாழும் ஒரு சமூக மாகவே காலங்காலமாக உருவாக்கப்பட்டுள்ளார்கள்.

கிளயாவின் அம்மா அப்பாவும் இதற்கு விலக்கானவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லைத்தானே!

“ நோவிருந்தாலும் காட்டிக் கொள்ளாதை. தரனின்ரை அப்பா அம்மாவுக்கு முன்னாலை தைரியமாக நடக்கப்பார். அவை பிழையாய் விளங்கிச்சினமெண்டால் உன்னை வீட்டை அனுப்பிப் போடுவினம்.” இப்படித்தான் அவர்கள் கிளயாவைக் காணும்போதெல்லாம் கூறினார்கள்.

“ அம்மா தேவையில்லாமல் கதைக்காதையுங்கோ. மாமா மாமி அப்பிடி இல்லை. அவை நல்லவை. அவையின்ரை உதவியில்லையெண்டால் நானும் தரனும் எப்பவோ செத்துப் போயிருப்பம். நான் ஒண்டும் நடிக்கயில்லை. வலி வரேக்கை வலிக்கும்தான். நடிக்கச் சொல்லிறியள். இப்படி இனிப் பேசாதையுங்கோ” கிளயா இப்படிக் கூறி அவர்களின் வாயை அடைத்துவிடுவாள். அதற்குப் பின் அவர்கள் எதுவும் கதைக்கமாட்டார்கள்.

தரனின் வீட்டில் நிலைமை வேறுமாதிரி இருக்கும்.

“ கவலைப்படாதையம்மா. அது கெதியாய்ச் சுகமாயிடும். என்ரை பிள்ளை உன்னை நல்லாக வைத்திருப்பான். நீ விரும்பியோ அல்லது நாங்கள் விரும்பியோ இந்த நோய் வரவில்லை. அது வந்திட்டுது . அவ்வளவுதான். இனி அடுத்தகட்டத்தை நோக்கி நகர்வம். தேவையில்லாமல் மனதைப்போட்டுக் குழப்பாதை.” என்று தரனின் அப்பா அடிக்கடி சொல்வார். அவர் சொல்வதை அவரின் மனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வியும் ஆமோதிப்பார்.

"உனக்கு என்ன சாப்பிட விருப்பமோ அதையெல்லாம் கூச்சப்படாமல் கேள். நான் செய்து தருவன். நான் பெத்திருக்கிறது பத்தரை மாத்துத் தங்கம். அவன் உன்னைக் கண்கலங்காமல் பார்ப்பான்." தரனின் அம்மா இப்படிக் கூறுவார்.

கிளயா இரண்டு பக்கத்தையும் ஒப்பிட்டுப் பார்த்துக் கவலைப்பட்டு "தரன், உங்கடை அப்பா, அம்மாவையும் என்ரை அப்பா அம்மாவையும் நினைக்கேக்கை கவலையாய்க் கிடக்குது" என்று கூறுவாள். தரன் மெதுவாகச் சிரித்துவிட்டு

"உங்கடை அப்பா அம்மாவுக்கு பிள்ளையின் வாழ்க்கை பற்றிய கவலை. என்னுடைய அப்பா அம்மாவுக்கும் பிள்ளையைப் பற்றிய கவலை. இரண்டு பக்கமும் அணுகிறவிதந்தான் வேறை. உங்கடை அப்பா அம்மாவுக்கு எங்கை நான் உன்னைக் கலைச்சு விட்டிடுவேனோ என்ற கவலை. ஏனென்றால் உலகத்திலை அப்பிடித்தான் நடக்குது. என்ரை அப்பா அம்மாவுக்கு,காதல் செய்து கட்டியிட்டான். இனி அவனைச் சந்தோசமாக வாழ வைக்கவேண்டுமென்ற கவலை. அதுக்காக எவ்வளவு உதவி செய்ய முடியுமோ அவ்வளவு உதவி செய்ய வேணுமெண்ட எண்ணம். தவறு ஒரு பக்கத்திலையும் இல்லை. நாங்கள் தைரியமாயிருந்து இந்த யுத்தத்திலை வெற்றி பெறுவம்" என்று முடித்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரன்.

இங்கு ஆணாதிக்கம் பெண்ணாதிக்கம் என்ற எந்த விடயமும் அவர்களைக் குழப்பவில்லை. ஆனால் உறவு களுக்கப்பாலுள்ள உலகத்தில் வாழ்பவர்கள் இவர்கள் பிரச்சினையை அப்படித்தான் பார்க்கிறார்கள்.

“ உந்தப் பொடியன் ஏன் உவளை இன்னும் வைச்சிருக் கிறான். சரிவரவில்லையென்றால் கலைச்சுப்போட்டு இன்னொருத்தியைப் பார்க்கிறதுதானே. ஏதோ ஒரு அப்சரசைக் கட்டிக் கொண்டு வந்தமாதிரி கட்டிப் பிடிச்சுக் கொண்டிருக்கிறான்.” இப்படி ஒரு பிரிவினரும்

“ உந்தப் பொடியன் உண்மையிலை கடவுளின்ரை அவதாரம்தான். அவன்ரை அப்பா அம்மா அவனை ஒழுங்காய் வளர்த்திருக்கினம். இல்லையெண்டால் உந்த வருத்தக்காரப் பிள்ளையோடை உப்பிடி இருப்பானே!. என்னமாதிரிப் பார்க்கிறான். எங்கடையளென்றால் எப்பவோ கலைச்சிருக்குங்கள். உந்தப் பொடியனின்ரை காலைத் தொட்டுக் கும்பிடவேணும்.” இப்படி ஒரு பிரிவி னரும் கூறுகிறார்கள்.

இவைகளையெல்லாம் தாண்டித்தான் கிளயாவும் தரனும் தைரியமாக விடியலைத்தேடிப் பயணித்துக் கொண்டிருக்கிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 15

# வலியின் ரணம்

நாளும் பொழுதும் நகர்ந்து கொண்டிருந்தன. நாட்கள் கிழமைகளாகி கிழமைகள் மாதங்களாகி மாதங்கள் வருடங்களாகி காலம் நகர்ந்து கொண்டிருந்தது. இவைகளோடு கிளயாவின் வலியும் அதிகரித்துக் கொண்டிருந்தது.

தரனும் கிளயாவும் களைத்துவிட்டார்கள். அவர்களைப் பார்க்க முடியவில்லை. மிகமிகச் சோர்ந்துபோய் இருந்தார்கள். எத்தனை வருடங்கள்தான் இந்த வலியை அவள் தாங்குவது. ஒரு மணித்தியாலம் இரு மணித்தியாலம் இல்லை இருபத்துநான்கு மணி நேரமும் வலிதானே அவள் அனுபவம். அவர்களின் சந்தோசம் இளமை எல்லாவற்றையும் இந்த வலி கொள்ளையடித்துக் கொண்டு செல்கிறதே!.

இந்த வலி அவளுக்கு ஒரு நிரந்தரமான கூட்டாளி, கண்ணுக்குப் புலப்படாத வாழ்நாள் எதிரி! ஒரு நிமிடம் கூட ஓய்வு எடுக்க அனுமதியாத கொடூர தன்மை வாய்ந்த இந்த வலியைவிட்டு எப்படி அவள் வெளியில் வருவது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரவுத் தூக்கத்தையே விழுங்கி அவளை அணுவணுவாகச் சித்திரவதை செய்யும் இந்த வலியோடு எப்படித்தான் போராடுவது?

இளமையில் அவள் கொண்டிருந்த துடிப்பு உற்சாகம் எல்லாம் பறிகொடுத்து வெறுமையாக நிற்கிறாளே இந்த பாழாய்பபோன வலியினால். ஏதோ உலகத்தில் உள்ள அதிகூடிய பாரத்தைத் தூக்குவதுபோல் அவளின் அசைவுகள் கட்டுப்படுத்தப்பட்டுவிட்டன. ஒரு கணத்தில் செய்து முடிக்க வேண்டிய காரியங்களைக் கூட பலமணி நேரம் எடுத்துத்தானே அவளால் செய்ய முடிகிறது. அவளால் தன் செயற்பாட்டை நம்பவே முடியவில்லை. நாளிலும் பொழுதிலும் அதிகரிக்கும் இந்த வலி அவளைக் கொன்று கொண்டுதானே இருக்கிறது. உடல் வலுவிலும் மனத் தைரியத்திலும் அவள் தன்னை இழந்து கொண்டிருப்பது எவ்வளவு துன்பத்தைத் தருகிறது.

இந்தவலி அவளை நாளாந்தம் என்றைக்கும் மாற்ற முடியாத ஒன்றாக வாழ்வின் இனிய தரிசனங்களை தரிசிக்கவிடாமல் அரித்துக் கொண்டிருந்தது. அவளின் கற்பனைகளை எதிர்பார்ப்புகளை இந்த வலி சுக்கு நூறாக்கிக் கொண்டிருந்தது. அவளுக்குள் ஒரு அவநம்பிக் கையை தோற்றுவித்து அவளைப் பயமுறுத்திக் கொண்டிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றவர்களெல்லாம் சுகதேகிகளாகவும் சந்தோசமாகவும் வாழும்போது தான்மட்டும் இந்த வலியால் துன்புற வேண்டும் என தனக்குள் தானே கேள்வி எழுப்பி அழுதாள். சில சமயம் ரேணு வந்திருந்து அவளோடு கதைப்பாள். ரேணு கூறும் விடயங்களுக்கு ஆலோசனை சொல்லும்போது கிளயா தன் வலியை மறந்திருப்பாள். ஒரு வலியை மறக்க அவளுக்கு இன்னொரு வலி தேவைப்படுவதுபோல் உள்ளது.

ஆனாலும் கிளயாவின் இந்தத் துன்பம் அவள் அருகில் ஒரு தூண்போல நின்று கொண்டிருந்த தரனின் மனத்திலும் பாரமாக அழுத்தத் தொடங்கியது. அவளின் வலி மறைந்து அவளின் முகத்தில் வெளிச்சத்தையும் அவளின் அதரங்களில் சிறு புன்னகையையும் காண அவன் துடியாயத் துடித்தான். அவனது ஆன்மா ரணப்பட்டுத் துடித்தது.

அவர்களின் வாழ்வின் பெரும்பகுதி வைத்தியர்களைச் சந்திப்பதிலேயே கழிந்து கொண்டிருந்தது. பல பரிசோதனைகளை ஆர்வத்துடன் செய்வார்கள். ஆனால் முடிவில் கையை விரித்துவிடுவார்கள். வைத்தியச் செலவு மட்டும் தான் உச்சத்தையடையும். உடல் வலியின் தாக்கத்தோடு பொருளாதார வலியும் அவர்களைத் துன்பப்படுத்தியது.

தரன் முழுமையாக கிளயாவுக்கு ஒரு பணியாளாகவே மாறிவிட்டான். அவளுக்குத் தேவையானவற்றை அருகிருந்து கொடுப்பதும் அவளது அன்றாட தேவைகளைப் பூர்த்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்வதும் அவனது பணிகளாக மாறிவிட்டன. இணையத் தில் களைப்பின்றித் தேடுவான். அவளைக் குணப்படுத்துவதற் காக எந்த எல்லைக்கும் போகத் தயாராகவே இருந்தான். ரேணுவும் சபேசனும் கூடத் தங்கள் பிரச்சினைகளை மறந்து கிளயாவுக்காக இணையத்தில் பரிகாரம் தேடிக் கொண்டிருப்பார்கள். எங்காவது வெளிச்சம் தெரிந்தால் உடனே அந்த இலக்கத்தை எடுத்துத் தரனுக்கு அனுப்பி உடனே தொடர்பு கொள்ள வைப்பார்கள்.

என்னதான் இருந்தாலும் கிளயாவின் வலியின் தீவிரத் தன்மை அவர்களின் உறவில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தத்தான் செய்தது. யாருடைய உதவியுமில்லாமல் அவளின் வலி அவன்மேல் முழுமையாகச் சுமத்தப்பட்டபோது அவன் பேதலித்துவிட்டான். கிளயாவின் மனமும் குழம்பித்தான் இருந்தது. அவள் தன்னை ஒரு குற்றவாளிபோல் உணரத் தலைப்பட்டாள். தன்னைக் காதலித்த ஒரேயொரு செய லுக்காக அவன் ஏன் இப்படித் துயருறவேண்டும் என மனத்துள் மறுகினாள். இந்த நிலை அவளைப் பலவாறாகச் சிந்திக்க வைத்தது. திரும்பத் திரும்ப தன்னை அழித்துக் கொள்ளவே அவள் மனம் விரும்பியது. ஆனால் அன்று அப்படிச் செய்யப்போய் தரனிடம் அகப்பட்டு அவன் அவளிடம் சத்தியம் வாங்கியதை நினைத்தபோது அந்த நினைவை எண்ணத்தைத் தூர எறிந்துவிட்டு தன்னை நினைத்துத் தானே அழுதாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு சமயம் ரேணு கிளயாவோடு கதைக்கும்போது தன்னைக் காதலித்த ஒரே குற்றத்திற்காக சபேசன் குழந்தைகள் மேலுள்ள ஆசையை ஏன் கைவிட வேண்டும் என்று கேட்டிருந்தாள். அப்போது கிளயா தன் பக்கமும் அந்தக் கேள்வி எறியப்படுவதுபோல் உணர்ந்து உடனேயே அது அவரவர் விதி அதற்கு நாம் என்ன செய்வது எனச் சமாளித்துவிட்டாள்.

எப்போதும் சுயமாக இயங்கும் இயல்பை இழத்தல் கிளயாவை நன்கு துன்பப்படுத்திக் கொண்டிருந்தது. நண்பர்களோடு கதைப்பதும் காலையில் நடைப் பயிற்சிக்குச் செல்வதும் அவளை விட்டு நெடுந்தூரம் சென்று பல நாட்களாகி விட்டன. உறவுகள் மத்தியில் நடைபெறும் வைபவங்களுக்கு அல்லது நண்பர்கள் மத்தியில் நடைபெறும் கொண்டாட் டங்களுக்கு செல்வதனை அடியோடு விட்டுவிட்டாள். தன்னுடைய வலி அவர்களுக்கு வலியாக மாறிவிடக் கூடாது என்பதில் கவனமாகவே இருந்தாள் அவள். தனிமைப்பட்ட இந்த வாழ்க்கை அவளை அணுஅணுவாகத் தின்று கொண்டிருந்தது.

தரனைப் பொறுத்தவரை அவனுக்கு அவன்மீதான நம்பிக்கையும் தளர்ந்து கொண்டிருந்தது. கிளயாவை எப்படியாவது பழைய நிலைக்குக் கொண்டு வந்துவிட வேண்டுமென்பதில் அவன் தன்னால் முடிந்தளவுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதவியாக இருக்கிறான். ஆனால் எதுவுமே போதுமானதாக அவனுக்குப்படவில்லை. தனக்கு அந்தளவுக்குத் தகுதியில்லையாவென்று தனக்குள்ளே அவன் கவலைப்படத் தொடங்கியிருந்தான்.

என்னதான் மனது சோர்ந்துபோனாலும் முயற்சியை விட அவன் தயாராக இருக்கவில்லை. தங்களின் காதல் இந்த வலியைவிட அதி உயர்ந்தது என மனதார நம்பினான். இருவரும் ஒருவருக்கொருவர் அன்பு செலுத்துவதன் மூலம் சில கணங்கள் கிளயா வலியை மறந்தே விடுகிறாள். கண்ணீரையும் பயத்தையும் இருவரும் பகிர்ந்து கொண்டனர். வலியின் உச்சம் அடைய அடையத்தான் இருவருக்கிடையிலான தூரம் குறைய ஆரம்பித்தது. வலியோடு போராடும் கிளயாவுக்கு அவன் ஒரு நங்கூரமாகவே இருந்தான்.

அவர்களுக்கிடையிலான தொடர்பாடல் அதிகரித்துக் கொண்டேயிருந்தது. தங்கள் உணர்வுகளைப் பகிர்ந்து கொள்ளக்கூடிய பெரு வெளிகளை தாங்களே உருவாக்கிக் கொண்டனர். ஒருவர் மீது ஒருவர் சாய்ந்து தங்கள் அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டனர். வலி அதிகரித்துக் கொண்டு போகும்போது அதை எதிர்த்துப் போராடும் சக்தியை தாமே வகுத்துக் கொண்டனர்.

இவர்களின் தாரக மந்திரம் நம்பிக்கை ஒன்றுதான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்பிக்கையையே நம்பினார்கள். நம்பினார் கெடுவதில்லை என்ற வார்த்தையை மனமார நம்பினார்கள்.

இந்தக் காதல் பறவைகளின் போராட்டம் முடியும் இடம் தெரியாமல் நெளிந்து நெளிந்து நகர்ந்து கொண்டிருந்தது.

ஆனால் இந்த அடையாளம் தெரியாத வலி தங்கள் வாழ்க்கையின் ஒவ்வொரு கணத்தையும் கபளீகரம் செய்ய அவர்கள் அனுமதிக்கவில்லை. சிறு சிறு வெற்றிகளையும் பெரு வெற்றிகளாகக் கொண்டாடினார்கள். அவர்களின் ஒப்பற்ற காதல் அவர்களுக்கு தெம்பைக் கொடுத்தது.

காதல் பறவைகள் எங்காவது ஒரு வெளிச்சம் தங்களுக்குக் கிடைக்காதா என்று பறந்து கொண்டிருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 16

## திருச்செந்தூர் பயணம்

கிளயாவும் தரனும் படும் துன்பத்தைக் கண்டு பெற்றவர்கள் உள்ளம் கலங்கித் தவித்தது. என்ன செய்வது ஏது செய்வது என்று அறியாமல் இருபக்கத்துப் பெற்றாரும் கலங்கினர்.

தரனின் பெற்றாரைப் பொறுத்தவரை மகனின் வாழ்க்கை ஏன் இப்படியாகிவிட்டது என்று நினைத்து மனதிற்குள் அழாத நாட்களே இல்லை. ஆனால் எந்த நிலையிலும் அவர்கள் கிளயாவைக் குற்றஞ்சாட்டவோ வெறுக்கவோ இல்லை.

இவர்களும் தங்களாலான எல்லாவித உதவிகளையும் அவர்களுக்குச் செய்தார்கள். தங்கள் பிள்ளை மேலானவனாக நடந்து கொண்டாலும் தனக்குள் அவன் கண்ணீர் வடிக்கிறான் என்பதை தரனின் தாயுள்ளம் புரிந்து புரிந்து அழுதது. இந்த அழுகைக்கு எல்லையே இருக்கவில்லை. தன் மனைவியின் அழுகையைப் பார்த்து தனக்குள் தானே தரனின் அப்பாவும் அழுதார். அதனால்தானோ என்னவோ தரன் கிளயாவைக் காதலிக் கிறேன் என்று அந்தத் தாய்க்குக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறியபோது அந்தத் தாயின் மனதிற்குள் தன் பிள்ளைக்கு ஏதோ நடக்கப் போகின்றதென்ற உணர்வு அவளுள் உண ரப்பட்டிருக்கிறது. அதுதான் தாய்மையின் வலிமையும் சிறப்பும்.

கண்ணுக்குத் தெரியாத அந்த வலி ஆரம்பமாகி, தரனின் வாழ்க்கை சிக்கலானதும் " நான் அப்பவே சொன்னனான் ஆரும் கேட்டியளே" என்று அவள் கணவனைப் பார்த்துக் கேட்டபோது தரனின் அப்பா பேச்சற்றுத்தான் நிற்க முடிந்தது.

என்னதான் அவள் அவரைக் கேட்டாலும் தரன் - கிளயாவின் வாழ்க்கையில் அவளின் பங்களிப்பு கனமாகவே இருந்தது. கிளயாவுக்கான பிரத்தியேகச் சாப்பாடுகளை தன் உடல் துன்பம் பாராது ஓடி ஓடிச் செய்தாள். அவளைப் பார்த்து பல உறவினர்கள் பேசியதுமுண்டு.

" ஏன் உந்தப் பெட்டையை வைச்சிருக்கிறான். கொண்டு போய்த் தாய் வீட்டிலை விடலாந்தானே" இது உறவினர்க ளின் வாயிலிருந்து வரும் வார்த்தைகள்.

தரனின் அம்மாவோ அல்லது அப்பாவோ எந்தக் கட்டத் திலும் யாரின் பேச்சையும் பொருட்படுத்தியதில்லை. தங்கள் கடமையைச் செவ்வனே செய்தார்கள். தரனுக்கு அவர்கள் பக்கபலமாகவே நின்றார்கள். தங்களின் உணர்வு ரீதியான உதவி அவனை எந்தத் துன்பத்தையும் தாங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைக்கும் என்று தரனின் அப்பாவும் அம்மாவும் எண்ணி னார்கள்.

தரனின் அப்பா இந்தப் பிரச்சினைபற்றிச் சொல்லாத நண்பர்கள் இல்லை. அவர்களில் ஒருவர்தான் சிவானந்தன். சிவானந்தன் சிறந்த முருக பக்தன். அவரின் கூடுதலான காலம் இந்தியாவில் உள்ள திருச்செந்தூர் முருகன் ஆல யத்தில்தான் கழியும்.

ஒரு நாள் தரனின் அப்பாவிற்கு ஒரு காலைநேரம் தொலைபேசி வருகிறது. அந்தத் தொலைபேசியை எடுத்தவர் சிவானந்தன்.

" ஒருக்கால் இந்த சோதிடரோடை கதையுங்கோ." என் கிறார் சிவானந்தன்.

தரனின் அப்பா கதைப்பதற்கு ஆயத்தமாகிறார்.

மறுபக்கத்திலிருந்து,

" ஏனிந்த கல்யாணத்தைச் செய்து வைச்சியள். எந்த வகையிலும் பொருத்தமே இல்லை. உடனே பிரிச்சிடுங்கோ. இரண்டு பிள்ளையளும் சந்தோசமாக வாழ வேண்டு மென்றால் உடனே இரண்டுபேரையும் பிரிச்சுவிடுங்கோ. பிரிக்கவில்லையென்றால் அந்தப் பிள்ளை இன்னும் பதினைஞ்சு நாள்தான் உயிர் வாழ்வா. அதை யாராலையும் நிறுத்தேலாது." என்று கூறிவிட்டு தொலைபேசியை வைத்துவிடுகிறார் அந்தச் சோதிடர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏங்கிப்போய் தொப்பென்று இருந்துவிட்டார் தரனின் அப்பா. தரனின் அம்மாவுக்கு ஒரே குழப்பம்.

" விசயத்தைச் சொல்லிப்போட்டு இருங்கோவன்" தரனின் அம்மா பதட்டப்பட்டாள்.

தரனின் அப்பா விடயத்தை கூறினார். ஏங்கிப்போன தரனின் அம்மா " நான் அப்பவே சொன்னனான். ஆராவது கேட்டியளே" என்று கூறினாள்.

இருவரும் செய்வதறியாது தலையில் கைவைத்தபடி இருந்தனர்.

மீண்டும் தொலைபேசி மணி அடிக்கிறது.

அவசர அவசரமாகத் தொலைபேசியை எடுக்கிறார்.

மறுமுனையில் அவரின் நண்பர் சிவானந்தன்.

" ஒண்டுக்கும் யோசியாதையுங்கோ. சாத்திரங்கள் எதுவும் சொல்லலாம். அதைவிடப் பலமானது இறை சக்தி. உடனே ரிக்கற் போட்டு திருச்செந்தூருக்கு வாங்கோ. முருகனுக்கு ஒரு பிரத்தியேக அர்ச்சனை செய்யவேணும். அது செய்தால் ஒண்டும் நடக்காது. அவன் காப்பாற்றுவான்."

உறுதியாக அவர் சொல்கிறார். அப்போதிருந்த சூழ்நிலையில் சரி பிழை எதையும் சிந்திக்கும் மனநிலையில் தரனின் அப்பா இல்லை.

உடனே விமான பிரயாணச் சீட்டை முகவர் ஒருவரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுகிப் பெற்றுக் கொள்கிறார். அடுத்த நாள் புறப்பட்டு விட்டார். இடையில் எத்தனையோ இடைஞ்சல்கள். விமானம் பழுதாகிறது. பிரயாணிகளை ஹோட்டல் ஒன்றில் விடுகிறார்கள். இனி அடுத்தநாள்தான் விமானம் என்கி றார்கள். தரனின் அப்பா வெள்ளிக்கிழமை திருச்செந்தூ ரில் நிற்க வேண்டும். அன்று புதன்கிழமை. அவருக்குப் பதட்டமாக இருக்கிறது. உண்மையிலேயே மனம் குழம்பி விடுகிறார்.

இந்தத் தடைகளையெல்லாம் தாண்டி சென்னையை அடைகிறார் தரனின் அப்பா. சென்னையில் காத்து நின்ற நண்பரோடு திருச்செந்தூருக்குச் சென்று அந்த விசேட அர்ச்சனையில் கலந்து கொண்டார்.

திருச்செந்தூர் முருகன் ஆலயங்களில் பெரியதும் பிரசித்தி பெற்றதுமாகும். அந்த ஆலயத்தில் சிவநாதனுக்கு கூடுதலான செல்வாக்கு உண்டு. அங்கே போனதும் பெருவாரியாக இருந்த கூட்டத்தையும் கிழித்துக்கொண்டு ஒரு பிராமணர் அவர்களை முருகனின் மூலஸ்தானத்தருகில் கொண்டு சென்றுவிட்டார். தரனின் அப்பாவுக்கு ஆச்சரியமாகவே இருந்தது. பணம் கோயிலிலும் தன் ஆட்சியைப் புரிகிறது என மனதிற்குள் நினைத்துக் கொண்டார்.

தரனின் அப்பாவை கருவறைக்குள் அழைத்து முருகனின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னால் இருத்தினார்கள். அர்ச்சனை ஆரம்பமானது. இதனை சகஸ்ரநாம அர்ச்சனை என்பர். உள்ளே வெக்கை தாங்க முடியவில்லை. பல்லைக் கடித்துக் கொண்டு பொறுமையாக இருந்தார்.

பூசை முடிந்து வெளியில் வந்ததும் தரனின் அப்பாவால் நடக்க முடியவில்லை. மயங்கிவிட்டார்.

இப்படி பலவிதமான பிரச்சினைகளையெல்லாம் முடித்து நான்கு நாட்களின்பின் லண்டனுக்குத் திரும்பவும் புறப் பட்டார்.

அவர் லண்டனுக்கு வந்தநாள் 15 ஆம் திகதி. 25 ஆம் திகதி கிளயாவுக்குக்கெடு வைக்கப்பட்ட திகதி . இதனை யாருக்கும் சொல்லாமல் தங்களுக்குள் வைத்துத் துன்பப்பட்டுக் கொண்டிருந்தனர் தரனின் அப்பாவும் அம்மாவும். மனதிற்குள் திருச் செந்தூர் முருகன் காப்பான் என்கின்ற நம்பிக்கை உரமாக இருக்கிறது. ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு யுகமாகக் கழிந்தது.

அவர் நண்பர் கூறிய " முருகன் காப்பாற்றுவான். கவலைப்படாமல் போங்கோ" என்ற வார்த்தைகள் அவருள் ஒங்கிக் கேட்டுக் கொண்டிருந்தன.

நாளைதான் கடைசி நாள். இருவரும் ஆளை ஆள் பார்த்து முழுசிக் கொண்டிருந்தனர். அவர்கள் வீட்டில் இருக்க விரும்பவில்லை. மிக முக்கிய அலுவலாக அவரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனைவியும் குறோய்டன் போக வேண்டி இருந்தது. கிளயாவிடம் ஏதும் அவசரம் எண்டால் போன் பண்ணச் சொல்லிவிட்டு புறப்பட்டார்கள்.

தரன் வேலைக்குப் போய்விட்டான். கிளயா தனித்து வீட்டில் இருந்தாள்.

அவர்கள் குறோய்டனுக்குப் போய்க் கொண்டிருக்கும் வழியில்திடீரென்று தரனிடமிருந்து தொலைபேசி வருகிறது.

தரனின் அப்பா திடுக்கிட்டு விட்டார்.

" அப்பா,கிளயாவுக்குநெஞ்சு நோவாம். அவள் தானே காரை எடுத்துக் கொண்டு ஹொஸ்பிற்றல் போயிட்டாள். நீங்கள் அங்கை போங்கோ. நானும் அங்கை வாறன்."

தகப்பனுக்குக் கூறிவிட்டு ரேணுவுக்கும் அறிவித்து விடுகிறான். ரேணுவும் சபேசனும் உடனேயே புறப்பட்டு விட்டார்கள்.

தரனின் அப்பா கலங்கிப் போய்விட்டார். கிளயாவா? கார் ஓடிப்போனாளா? எப்படி அவளால் முடியும்? அவரால் நம்ப முடியவில்லை.

விடயத்தை புரிந்து கொண்ட தரனின் அம்மா,

" அது முருகன்தான் அவளை வைத்திய சாலைக்குக் கூட்டிப் போயிருக்கிறார்" தரனின் அம்மா திடமாகக் கூறினாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிளயாவின் நிலைமை கட்டுக்குள் கொண்டு வரப்பட்டு விட்டது. " நல்லவேளை சரியான நேரத்திற்கு வந்திட்டா" என்று வைத்தியர் கூறினார்.

தரனின் அம்மா தன் கணவனின் முகத்தை நிமிர்ந்து பார்த்துவிட்டு வானத்தைப் பார்த்து 'முருகா' என மனதிற்குள் முணுமுணுத்துக் கொள்கிறாள்.

சிறிது நேரம் ரேணு, சபேசன், தரனின் அப்பா அம்மா நின்றுவிட்டுப் புறப்பட்டுவிட்டார்கள்.

தரன் மட்டும் வைத்தியசாலையில் கிளயாவோடு நின்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 17

# விரக்தியின் ஆழும்

அதிகரித்துச் செல்லும் வயிற்று வலியின் தாக்கம் கிளயாவையும் தரனையும் விரக்தியின் விளிம்புக்குக் கொண்டு சென்றது. தங்களால் என்ன முடியுமோ அவ்வளவும் செய்துவிட்டார்கள். வைத்தியர்களிலிருந்து ஆன்மிகம் வரை சென்று விட்டார்கள். என்ன செய்தும் கிளயாவின் வலி அணுவளவும் குறையவில்லை.

கிளயாவை ஒரு பரிசோதனை எலியாகக் கூடப்பாவித்து விட்டார்கள். எந்த மருந்துமே அவளின் வலிக்குக் கிட்ட நெருங்கவேயில்லை.

தங்கள் வாழ்க்கையின் பெரும் பகுதியை மருத்துவ சஞ்சிகைகளைப் படிப்பதிலும் இணையத்திலுள்ள மருத்துவக் குழுக்களோடு உரையாடுவதிலும் செலவழித்து விட்டார்கள்.

நாடுகள் தாண்டி புதிய புதிய வைத்திய முறைகளையெல்லாம் நாடிவிட்டார்கள்.எதுவுமே அவர்களின் துயரத்தைத் தீர்க்கவேயில்லை. முடிவற்ற இந்தப் பயணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலே செல்வதும் கீழே செல்வதுமாகத் தொடர்ந்து கொண்டிருந்தது. ஒவ்வொரு தடவையும் ஏதாவது புதிய முயற்சி செய்யும்போது சரிவரும் என்ற எண்ணம் உருவாகி வந்த வேகத்திலேயே அது இல்லாமல் போய்விடும். இந்த ஏமாற்றங்களைத் தொடர்ந்து தாங்க முடியுமா என்பதும் கேள்விக் குறியாகவே இருந்தது.

துயரத்தோடு நகர்ந்து செல்லும் இந்தப் பயணத்தின் போதுதான் மருத்துவ உலகத்தின் கறுப்புப் பக்கங்களையும் அவர்களால் காணமுடிந்தது. தங்களுடைய வைத்தியம் பலன் தராது என்று தெரிந்தும் பொய்யாக வாக்குறுதி கொடுப்பார்கள். தாங்கள் பலரைக் குணப்படுத்தி உள்ள தாகவும் பொய்யான கதைகளைக் கூறி நம்ப வைப்பார் கள்.இந்த வியாபார தந்திரம் மருத்துவ உலகத்தின்மீது தரனுக்கும் கிளயாவுக்கும் ஒருவித வெறுப்பைக் கொடுத்தது. வலி ஒரு பக்கம் இருக்க மருத்துவ உலகின் வெளிப்படத் தன்மையற்ற இந்தப் பொய்மை கிளயாவையும் தரனையும் விரக்தி அடைய வைத்தது. சக மனிதர்கள் மீதான நம்பிக்கை அற்றுப்போகும்போது கண்ணுக்குத் தெரியாத கடவுளை நம்புவதற்கு மனிதன் ஆரம்பித்து விடுகிறான்.

கடவுள்பற்றிய எண்ணம் மனிதனுக்குத் துன்பம் வரும்போதுதான் வருகிறது. தன்னுடைய நம்பிக்கை மனிதனைவிட்டு விலகும்போதோ அல்லது இன்னொரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சக மனிதனை சகட்டு மேனிக்கு நம்பி அந்த நம்பிக்கை தோற்றுப்போகும் போதோ அவனுக்கு ஒரு சுமைதாங்கி தேவைப்படுகிறது. அந்தச் சுமைதாங்கிதான் அவனுக்குக் கடவுளாகத்தெரிகிறது. அதன் உருவம் இருப்பு அழகு எதுவுமே அவன் கண்களுக்குத் தெரிவதில்லை. இப்படி ஒரு சூழ்நிலையில்தான் கிளயா கர்த்தரைத் தனது சுமைதாங்கியாக ஏற்றுக்கொண்டாள்.

இவைகள் எல்லாவற்றாலும் திரும்பவும் கர்த்தர் தனக்கு அற்புதம் நிகழ்த்துவார் என்று கிளயா நம்ப ஆரம்பித்தாள். காலையும் மாலையும் கர்த்தரைத் தொழுவாள். அழுது அழுது வேண்டுவாள். தரனும் அப்படியே தனது இந்துக் கடவுளரை வேண்டி அழத் தொடங்கியிருந்தான். கடவு ளிடம் இருவரும் வேண்டும்போது கிளயா தனக்கு வலி குறைவதுபோல் உணர்வாள். ஆனால் நிஜத்தில் அப்படி இருக்கவில்லை.

நாளுக்குநாள் வலி அதிகரித்துக் கொண்டேயிருந்தது. முயற்சியைக் அவர்கள் கைவிடத் தயாராக இல்லை. இவ்வளவு தூரம் இந்த வலியைத் தாங்கி சகித்து நகர்ந்து முன்னேறிவந்த அவர்களால் விட்டுவிலக முடியவில்லை. தங்களின் மாசு மறுவற்ற காதல் நிச்சயமாகத் தங்களுக்கு ஒரு வெளிச்சத்தைக் காட்டும் என்று இருவரும் நம்பினார்கள்.

எப்போதும் இப்படி இருக்கமுடியாது என்று இருவரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைத்தார்கள். வலி ஒரு பக்கம் இருந்துவிட்டுப் போகட்டும், நாம் முன்னோக்கி நகர்வோம் என்று நினைத்தனர். இணையத்தில் கிளயாவைப்போல் வலி கொண்டவர்களின் குழுக்களில் தாமும் இணைந்து கொண்டனர். அவர்களோடு அன்போடு கதைத்து நம்பிக்கையை ஊட்டினார்கள். ஒவ்வொருவரும் தங்கள் கதைகளைக் கூறும்போது அதை உள்வாங்கி ஆலோசனைகள் வழங்கத் தொடங்கினார்கள். இத்தனை காலமும் இவர்கள் சந்தித்த அனுபவங்கள் இவர்களுக்கு உறுதுணையாக நின்றது.

சக மனிதர்களோடான உரையாடலும் அவர்களின் பிரச்சினைகளை செவிமடுத்தலும் அந்தப் பிரச்சினைகளுக்கு தீர்ப்புகள் சொல்வதிலும் மனம் ஆழமாக ஈடுபடும்போது எப்பேற்ப்பட்ட வலியாகவிருந்தாலும் தன்னைக் காட்டிக் கொள்ளாது ஒதுங்கும் என்பதுவே வழமை.

இவர்கள் கூறிய பரம்பரை வைத்திய முறைகள் அவர்களுக்குப் புதியனவாக இருந்தன. மொழி, இனம் இவைகளுக்கு அப்பால் இந்தக் குழுக்களில் வெறும் உணர்வுகளே சந்தித்தன. மனத்தை கட்டுப்படுத்துவது எப்படி தன்னம்பிக்கையை வளர்த்துக் கொள்வது பற்றியெல்லாம் தரன் கதைத்தான். பலர் இவர்கள் சொல்வதைக்கேட்டு நடந்து சுகமான சம்பவங்களும் நடந்தேறின.

தன் வலியை மறந்து இவைகளில் ஈடுபட்டபோதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளின் சுகநலத்திற்காக அவளின் பங்குபற்றும் நேரத்தைக் குறைத்துத் தரன் கூடப் பங்குபற்றினான்.

தரன் ஒவ்வொருவருக்கும் தன்னம்பிக்கையை அழகாக உருவாக்கினான். கடவுள் என்ற மூன்றாம் ஆளை நம்புவதை விட உன்னை நீயே நம்புவதுதான் எதற்கும் தீர்வு தரும் என்று போதித்தான்.

நாள்கள் மாதங்களாகின. மாதங்கள் வருடங்களாகின.

கிளயாவும் தரனும் என்ன சொன்னாலும் கேட்டார்கள்.

இவர்கள் சொல்கின்ற சகல முறைகளையும் அவை தாங்கள் அறியாதவையாக இருந்தபோதும் நம்பிச் செய் தார்கள்.

பலரோடு ஆத்மார்த்தமாக தொடர்பு கொள்ளும் போது கிளயாவுக்கு புதிய புதிய மரபுவழி முறைகள் அறிமுக மாகின. அவள் எதையும் ஒதுக்கவில்லை. எல்லாவற்றையும் முயற்சித்தாள். எந்த முறையிலும் அவளுக்கு விடை கிடைக்கவில்லை.

மற்றவர்களுக்கும் அதே நிலைதான். விடை கிடைக்காத முடிவற்ற இந்தப் பயணம் எங்கோ ஓரிடத்தில் நிறுத்தப்பட வேண்டும். அதற்காக எல்லோரையும் இணைத்துக் கொண்டு கிளயாவும் தரனும் பயணத்தை உத்வேகத்துடன் ஆரம்பித்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்களோடு சேர்ந்து ரேணுவும் பயணித்தாள். ஒரு நாள் ரேணு கிளயாவிடம் " நான் ஒரு முடிவு எடுத்து விட்டேன்." என்று கூறினாள்.

கிளயா அவளை வியப்போடு பார்த்தாள்.

" என்ன முடிவு?" கிளயா கேட்டாள்.

" நான் சபேசனை விட்டு விலகுவதாக முடிவு செய்துள் ளேன்." இப்படி ரேணு கூறியபோது கிளயா குழம்பிப் போனாள்.

" ஏன் இந்த அவசரம் இப்போ?" கிளயா கேட்டாள்.

" அவசரம் இல்லை. யோசித்து எடுத்த முடிவுதான்"

" சபேசனுக்குச் சொல்லிவிட்டாயா?" என்று கிளயா கேட்டாள்.

" இன்னும் இல்லை. இன்று சொல்லலாம் என்று நினைக் கிறேன்" என்றாள் ரேணு.

ரேணுவின் இந்த முடிவோடு கிளயா உடன்படா விட்டாலும் ஒவ்வொரு மனிதனுக்கும் அவன் சார்ந்த முடிவுகளை எடுக்கும் உரிமை தார்மீகமாக உண்டு என்பதால் அபிப்பிராயம் ஏதும் சொல்லாமல் ஒதுங்கிக் கொண்டாள் கிளயா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 18

## புதிய பயணம்

அவர்கள் மகிழ்ச்சியை நோக்கிய பயணத்தை விடுவதாக இல்லை ஆனால் ஏதாவது ஒரு முடிவு எடுக்க வேண்டிய எல்லைக்கு தாங்கள் வந்துவிட்ட நிலையையும் மனதார ஏற்றுக் கொண்டனர். தங்களின் ஆலோசனைக்காகப் பலர் காத்திருக்கிறார்கள் என்பதையும் மனதிலிருத்திக் கொண்டனர்.

புதிய ஒரு சிந்தனைக் களத்தினுள் அவர்கள் புகுந்து விட்டதையும் தங்களின் வலிதீர மருந்து எடுப்பதோடு தங்களின் கடமை முடிந்துவிடப் போவதில்லை என்பதையும் மனதார உணர்ந்து கொண்டனர்.

உளவியல்ரீதியாக ஒரு துன்பத்திலிருந்து மீள்வதற்காக தன் புலனை வேறு திசையில் திருப்பி அந்தப் புதிய துன்பத்தைத் தான் உள்வாங்கும்போது அந்தப் பழைய துன்பம் ஒதுங்கி வழிவிட்டுவிடுகிறது. இதனால் பழைய துன்பம் அகன்றுவிட்டதென்பது அர்த்தமல்ல. அது தனக்கான சந்தர்ப்பத்திற்காகக் காத்துக் கொண்டிருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதுதான் உண்மை.

கிளயா தன்னுடைய உணர்வுகளை படம் வரைதல்க ளிலும் புத்தகங்களை வாசிப்பதிலும் திருப்பி வலியின் வேகத்தைக் மறந்து இருந்தாள்.

தரன் உடற்பயிற்சி செய்வதிலும் தியானம், யோகா போன்றவைகள் செய்வதிலும் மனதைத் திருப்பி தன் உடல் நலனைப் பேணிக் கொள்ளத் தொடங்கினான்.

வலியைவிட எதிர்காலத்தில் வலியற்ற சூழ்நிலை உருவாகி வாழ்வதற்காக தங்கள் உடல் நிலைகளையும் பேணத் தொடங்கினர்.

இது இன்னொருவகையான நம்பிக்கை மருந்து. ஒரு துன்பத்திலிருந்து மீளாவிட்டாலும் ஒருகாலத்தில் அது இல்லாமல் போகலாம் என்ற நம்பிக்கையில் அந்த இன்பத்தை அனுபவிக்கப்போகும் அழியும் உடலினை இப்போதிருந்தே பேணும் நடவடிக்கையில் இறங்குவதாகும்.

தங்களது புலனை வேறு திசையை நோக்கித் திருப்பிய பொழுது மனதில் அமைதி ஏற்படுவதை இருவரும் உணர்ந் தனர். மேலதிகமாக மற்றவர்களின் பிரச்சினைக்கு தாங்கள் உதவியாளர்களாக மாறவேண்டுமென்று இருவரும் நினைத் தனர்.

அணுகமுடியாத இந்த வலி உடையவர்களை எல்லாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்பு கொண்டு ஒரு அணியில் வரச் செய்தனர். அவர்க ளோடு இருவரும் தனித்தனி உரையாடத் தொடங்கினர். ஒவ்வொருவரும் கூறும் கதைகள் அவர்களைக் கவலை யடையவும் வைத்தன.

தன்னுடைய வலிதான் உலகில் பெரியது என நினைத்திருந்த கிளயா மற்வர்களோடு உரையாடும்போது ஆச்சரியத்திற்குள்ளானாள். மிகப் பெரிய வலிகளையெல்லாம் மிகச் சாதாரணமாக தாங்கிக் கொண்டு வாழ்கிறார்கள் என்பதை நினைத்தபோது அவளுக்கு என்னவோ போலிருந்தது.

வலியின் காரணமாகக் கணவனால் ஒதுக்கி வைக்கப் பட்டவர்களும் குடும்பங்களால் கவனிக்கப்படாமல் விட்டவர்களும் வலியோடு சேர்த்துக் கொடுமைப்படுத் தப்பட்டவர்களும் இவர்களோடு உரையாடினார்கள். அந்தக் கதைகளை எல்லாம் கேட்கும்போது அவர்களுக்குத் தங்களாலான உதவிகளைச் செய்ய வேண்டுமென தரனும் கிளயாவும் விரும்பினர். அவர்களும் தரனோடும் கிளயா வோடும் கதைக்கும் போது மன அமைதி கிடைப்பதாகக் கூறினர்.

சேவைக்கும் ஒரு எல்லை உண்டுதானே! தரன் கிளயாவை நீண்ட நேரம் உரையாடவிடாமல் தடுத்தான். இல்லா விட்டால் அவளின் உடல் நிலை மேலும் மோசமாகிவிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிளயாவுக்கும் அது புரியும்.

இருவரும் சேர்ந்து ஒரு அமைப்பையே உருவாக்கி விட்டார்கள். அந்த அமைப்பு இயங்குவதற்கு அரசோடு தொடர்பு கொண்டு பணமும் பெற்றுக் கொண்டார்கள். வலி என்னவென்றே தெரியாமல் அவதிப்பட்ட பலர், யார் தங்களை ஒதுக்கினாலும் கிளயாவும் தரனும் உருவாக்கிய அமைப்பிற்கு வந்து முறையிடுவார்கள். தரன் கொடுக்கின்ற ஆலோசனைகளும் கிளயா செலுத்துகின்ற அன்பும் அவர்களை ஆறுதலடையச் செய்தது. அவர்களை மட்டுமல்ல கிளயாவும் தன் வலியை மறந்து சமூகசேவையில் ஈடுபடுமளவுக்கு மனதில் தைரியத்தை வருவித்துக் கொண்டாள்.

தரனைப் பொறுத்தளவில் கிளயாவையிட்டு பயமும் இருந்தது. கிளயா அளவுக்கதிகமாக தன்னை வேலையில் ஈடுபடுத்துவதும் தொலைபேசியில் நீண்ட நேரம் உரையாடுவதும் களைப்பை உருவாக்கி வலியை அதிகரித்து விடுமோ என்ற பயமும் இருந்தது.

இது சம்பந்தமாக பல வைத்தியர்களுடன் கிளயாவுக்குத் தெரியாமலே உரையாடி இருந்தான். வைத்தியர்களும் கிளயா செய்வது மிக நல்லது. உளவியல் ரீதியாக அவள் சேவைப் பணிகளில் ஈடுபடும்போது தன்னை மறந்து விடுகிறாள். அதனால் வலியினை உணர்வதில்லை. இடைக்கிடை தியானம் செய்யும்படியும் வைத்தியர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறினார்கள்.

இதனால் சில வேளைகளில் தரன் தியானம் செய்யும் போது கிளயாலவையும் அழைப்பான். அவளும் வந்து தியானம் செய்வாள். தியானம் செய்யும்போது தான் இதுவரை கண்டிராதவொரு உலகத்தைச் சந்தித்ததாகவும் கூறுவாள்.

இந்த அனுபவத்தை தன்னோடு உரையாடுபவர்களுக்கும் கூறுவாள். உரையாடுபவர்கள் கதைக்கும்போது அன்போடு அவர்கள் கூறுவதை செவிமடுப்பாள். அவர்கள் கூறும்போது அந்தக் கதைகளின் ஆழத்தோடு ஒப்பிடும்போது தன் கதை ஒன்றுமேயில்லை என்று தரனுக்குக் கூறுவாள்.

தரனோடு இருந்து கதைக்கும்போது இந்தக் கதைகள் எல்லாம் காற்றோடும் எங்களோடும் போய்விடக் கூடாது. அவை அடுத்த சந்ததிக்கும் செல்ல வேண்டுமென்று கூறு வாள்.

இப்போதெல்லாம் அந்தக் கதைகளை அவள் காற்றில் போக விடுவதில்லை. அவர்கள் கூறும் கதைகளை எழுதத் தொடங்கினாள். அவற்றை திரும்ப வாசித்து தானே அழு வாள். அந்தக் கதைகளுக்குரியவர்களுக்கு வலிமட்டும் பிரச்சினையில்லை என்பது அவளுக்குத் தெரிந்தது.

தனக்கு வலிவரும்போது தரனும் தரனின் அம்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பாவும் அவளின் பெற்றோரும் உறுதுணையாக நிற்பதை நினைத்துப் பார்த்தாள். இத்தகு உதவிகள் வலி யால் அவதிப்படும் பெரும்பாலானவர்க்குக் கிடைப்ப தில்லை. வலியைத் தாங்கலாம் ஆனால் அந்த வலியையிட்டு மற்றவர்கள் செய்யும் கொடுமைகளைத் தாங்கவே முடியாது என்று விக்கிவிக்கி அழுவார்கள்.

இவைகளையெல்லாம் பார்த்தும் கேட்டும் துன்பமுறும் தரனும் கிளயாவும் என்னவிதப்பட்டும் இவர்களுக்கான வழியொன்றைக் கண்டுபிடிக்க வேண்டுமென துடியாய்த் துடித்தார்கள். அவர்களினுடைய கதைகளையெல்லாம் அரச மேலிடத்தில் உள்ளவர்களுக்கெல்லாம் கூறி அவர்கள் ஏன் பிரத்தியேகமாகக் கவனிக்கப்பட வேண்டு மென்பதை அறிவுறுத்தினார்கள்.

தமிழ்ச் சமூகத்தோடு மட்டும் நின்றுவிட அவர்கள் தயாராகவில்லை. மற்றைய சமூகத்தவர்களையும் தங்கள் அணியில் சேர்த்துக் கொண்டார்கள். வலி என்னவென்றெ தெரியாத வலியைக் கொண்டவர்கள் எல்லாரும் தரனையும் கிளயாவையும் தேடிவந்து கதைத்தார்கள்.

அன்பும் அரவணைப்பும்தான் இந்த வலிக்கான மருந்து என்பதை தங்கள் வாழ்க்கையை உதாரணமாகக் காட்டி மற்றவர்களை அப்படி வாழ வழிநடத்தினார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 19

## ஒளிக்கீற்று

வாழ்க்கையின் நகர்வில் எத்தனையோ பேரிடர்களை எதிர் கொண்டபோதும் இந்தக் கடுமையான பயணத்தில் சிறிது நம்பிக்கையையும் கொண்டிருந்தார்கள். எந்த ஒரு நெருக்கடியான காலகட்டத்திலும் அடுத்த கட்டத்திற்குப் போவதற்கான முயற்சியை அவர்கள் கைவிடவேயில்லை. எப்படியாவது ஒரு தீர்வு கிடைக்குமென நம்பினார்கள்.

என்றைக்கும் நம்பிக்கையை தளரவிடக்கூடாது. நம்பிக்கைதானே வாழ்க்கை. இதனை நன்கு புரிந்து கொண்டவர்கள்தான் கிளயாவும் தரனும்.

பழைய குருடி கதவைத் திறவடி என்பதுபோல் திரும்பவும் புதிய வழிகளைத் தேடினார்கள் தரனும் கிளயாவும். இதற்காக ஒவ்வொரு துறையிலும் அதி கூடிய பட்டங்களைப் பெற்ற வைத்தியர்களைச் சந்தித்துக் கலந்துரையாடினார்கள். அடையாளம் காணமுடியாத இந்த வலி சம்பந்தமாக ஏதாவது புதிய கண்டுபிடிப்புகள் சம்பந்தமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்திகள் வந்தால் அந்த இடம் எந்த மூலையில் இருந்தாலும் அங்கே இவர்களின் பிரசன்னம் இருந்தது.

சில சமயங்களில் அவர்களின் கண்டு பிடிப்புகள் கிளயாவுக்கு சிறிது நம்பிக்கையைக் கொடுத்தது.அவர்களோடு முரண்படாமல் நேரான போக்கைக் கடைப்பிடித்து ஒத்துழைத்தார்கள். அந்த வைத்திய முறைகளை மனமார ஏற்றுக் கொண்டு தங்களை அதற்கு அர்ப்பணித்தார்கள். கிளயாவுக்கு உற்சாகமாகவும் அதே நேரம் கவலையாகவுமே இருந்தது. ஏனென்றால் இதைப் போன்ற வைத்திய முறைகளை அவள் ஏற்கனவே எதிர் கொண்டு தோல்வியை எதிர் கொண்டிருந்தமையே.

பரீட்சார்த்த வைத்தியத்தில் இவர்கள் மட்டுமல்ல வேறுபலரும் இணைந்திருந்தமையையும் கவனித்தனர். அவர்களோடு சென்று உரையாடினார்கள். அவர்களின் கதைகளை உற்சாகத்தோடு கேட்டார்கள். பல கதைகள் பலவிதமான செய்திகளை இவர்களுக்குக் கூறின.

நடத்தப்பட்ட வைத்திய முறைகள் மிகக் கடுமையாக இருந்தன. நரம்புகள் சம்பந்தப்பட்ட முறைகளாதலால் கிளயாவால் அவற்றைத் தாங்க முடியவில்லை. அவளின் நரம்புகளின் இயக்கத்தைத் தூண்டினார்கள். ஒவ்வொரு தடவையும் நடைபெறும்போது தாங்க முடியாமல் கிளயா சத்தமிட்டு அழுதாள். உண்மையில் உடல் ரீதியாகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்வு ரீதியாகவும் தாங்க முடியாமல் வேதனைப்பட்டாள்.

நரம்பு சம்பந்தப்பட்ட இந்த வைத்தியம் ஒரு கணம் வலி இல்லாததாகவும் மறு கணம் அதிக வலி கொண்டதாகவும் இருந்தது. சில நாட்கள் வலி குறைவதுபோல் கிளயா உணர்வாள். தொடர்ச்சியான வலியிலிருந்து சிறிது ஓய்வு எடுப்பதுபோல் உணர்வாள். இப்படியான கணங்களை இருவரும் சந்தோசமாகக் கொண்டாடுவார்கள். தாங்கள் இப்போது சரியான பாதையில் பயணிப்பதுபோல் உணர் வார்கள். அதே நேரம் அந்த வலி திரும்பவந்து உச்சத்திற்குச் செல்லும்போது அந்த வைத்திய முறையில் நம்பிக்கையோடு அவர்களால் இருக்க முடியவில்லை.

சந்தேகமும் பயமும் இந்த வைத்திய முறையை விட்டா லென்ன என மனது பேதலிக்கவும் தொடங்கியது. பரீட்சார்த்த வைத்தியம் செய்தவர்கள் கிளயாவைக் கூர்மையாக அவதானித்தார்கள். கிளயாவின் உணர்வு மாறுதல்களைக் கொண்டு கிளயாவுக்கு ஏற்றவிதமாக சில மாற்றங்களைச் செய்தனர். இந்த மாற்றங்களை கிளயாவும் உணர்ந்தாள். கூடுதலான நேரம் தான் வலியில்லாமல் இருப்பதாக உணர்ந்தாள். அந்த வலியில்லா நேரங்களில் அவளும் தரனும் இறக்கைகட்டிப் பறந்தார்கள். வாழ்க் கையின் இனிமையை சிறிது சுவைத்தனர். எதிர்காலம் இன்பமயமாகப் போவதாக எண்ணி கனவுலகில் சஞ்சரித்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்கள் நகரநகர பலவித அனுபவங்களோடு கிளயாவும் நம்பிக்கைகளோடு நகர்ந்து கொண்டிருந்தாள். வலி அவளை வரையறுக்கவில்லை என்பதையும் , அந்த வலி அவளை முன்னோக்கி நகர்த்திக் கொண்டிருக்கிறது என்ற உண்மை யையும் அவள் உணர்ந்தாள்.

வைத்தியத்தின்போது தரன் அவள் அருகிலேயே இருந்தான். இந்தப் புதிய வைத்தியத்தால் கிளயா எவ்வளவு துன்பத்தை உடல் ரீதியாகவும் உணர்வு ரீதியாகவும் அனுப விக்கிறாள் என்பதை தரனும் உணர்ந்தான். தன்னுடைய உணர்வுகளை வெளிக்காட்டாமல் தைரியமாக அவளருகில் இருந்து அவளை ஊக்குவித்துக் கொண்டிருந்தான்.

ஒரு சிறு வெற்றி கிடைத்தாலும் அதனை இருவரும் சேர்ந்தே கொண்டாடினர். ஒவ்வொரு காலையும் எழும்பும் போது கிளயா புதிய நம்பிக்கையுடனேயே எழுந்தாள். ஏற்படுகின்ற முன்னேற்றங்களையிட்டு இருவரும் நம்பிக் கையுடனேயே இருந்தனர்.

பரீட்சார்த்த வைத்தியத்தின் முடிவுகால எல்லை நெருங்கிக் கொண்டிருந்தது. அதன் முடிவு என்னவாகப் போகின்றதென்ற எதிர்பார்ப்புடன் கிளயாவும் தரனும் பதட்டமாகவே இருந்தனர். என்ன சொல்லப் போகிறார்கள் என்பதுவே அவர்களின் எதிர்பார்ப்பாக இருந்தது. முடிவு என்னவாக இருந்தாலும் அதனை ஏற்றுக் கொள்ளத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தயாராகவே இருவரும் இருந்தனர்.

அந்த நாள் வந்தது. ஆய்வு செய்த குழாம் தங்கள் கண்டு பிடிப்புகளை கிளயாவுக்கும் தரனுக்கும் கூறுவதற்குத் தயாராக இருந்தார்கள். ஒரு அறையில் காத்திருந்தார்கள். சில நிமிடங்களின் பின் தலைமை ஆய்வாளர் மெல்லிய புன்னகையோடு அறைக்குள் நுழைந்தார். அவரையே பார்த்துக் கொண்டிருந்தாள் கிளயா.

அவர் கூறத்தொடங்கினார். " இது ஒன்றும் தீர்க்க முடியாத வலியல்ல என்பதை எமது குழு கண்டறிந்துள்ளது. இது நரம்புகள் சம்பந்தப்பட்ட ஒன்று என்றே முடிவெடுத்தி ருக்கிறோம்.கிளயாவுக்கு சில வைத்தியங்களை செய்துள் ளோம். அது வேலை செய்யும்போது நிச்சயமாக வலி குறையும்."

என்று கூறிவிட்டு அமர்ந்தார். கிளயாவும் தரனும் அவருக்கருகில் மகிழ்ச்சியோடு சென்று கை குலுக்கி நன்றி தெரிவித்தனர்.

கிளயாவுக்கும் தரனுக்கும் அளவில்லா மகிழ்ச்சி. எங்கி ருந்து வலி ஆரம்பமாகின்றதென்ற செய்தி சந்தோசத்தைக் கொடுத்தது. உடனடியாகவே இந்தச் செய்தியை எல்லோருக்கும் அனுப்பினார்கள். தொலைபேசி மூலம் பலரோடு கதைத்து அவர்களுக்கும் நம்பிக்கையை ஊட்டி னார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்கள் நகர்ந்தன. வலி சிலவேளைகளில் வந்து போனாலும் இப்போ வலியோடு வாழப் பழகிக் கொண்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 20

## வாழ்க்கையை ஆராதித்தல்

தங்களுக்கான விதிக்கப்பட்ட வாழ்க்கை இது தானென்பதை உணர்ந்து கொண்ட பின்பு இருவரும் தாங்கள் வாழும் வாழ்க்கையை ஆராதிக்க ஆரம்பித்தார்கள். புதிய புதிய விடயங்களை ஆரம்பித்தார்கள். தங்களை மகிழ் விக்கக்கூடிய எல்லாவற்றையும் மகிழ்வோடு செய்தார்கள்.

வாழ்க்கையை ஆராதிப்பதென்பது இலகுவான ஒன்ற ல்ல. வாழ்கக்கையில் துன்பத்தைக் காணலாம் அல்லது இன்பத்தைக் காணலாம். ஆனால் இவைகளுக்கெல்லாம் அப்பாற்பட்டு வாழ்க்கையை வணக்கத்திற்குரியதாக வரித்துக் கொள்ளுதல் என்பது மிகமிகக் கடினமான காரியமாகும். அதனைச் சர்வசாதாரணமாக இந்தத் தம்பதியினர் செய்தார்கள்.

தரன் கணணியில் வடிவமைப்புகள் செய்து மேலதிக வருவாய்க்கான வழியினைக் கண்டு கொண்டான். தனி ஒருவனாகத் தங்களின் பொருளாதாரத்தை தாங்கும் அவ னைப் பார்த்து கிளயா உள்ளுக்குள் அழுதாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் செய்கின்ற வேலையை தானும் கற்றுக் கொண்டாள். தன் பொழுதுகளை அவனுக்கு உதவுவதில் செலவழித்தாள். அந்த நிமிடங்களில் எல்லாம் வலியை மறந்திருந்தாள். அவளைப் பொறுத்தவரை வலியே வாழ்க்கையானது.

எந்த வைத்தியத்தாலும் அவளின் வலியை அணுகவே முடியவில்லை. உலகம் விஞ்ஞானத்தில் எவ்வளவுதான் வளர்ந்திருந்தபோதும் சிறு உடம்பின் ஏதோ ஒரு மூலையில் ஒழிந்து வருத்திக் கொண்டிருக்கும் இந்த வலியை அந்த விஞ்ஞானத்தினால் நெருங்க முடியவில்லை என்பது வருத்தமான நிகழ்வுதான்.

காதல் என்பதன் அர்த்தத்தை இவர்களின் வாழ்க்கையினூடாகவே அடையாளம் காண முடியும். அவளுக்கு அவன் என்றும் அவனுக்கு அவள் என்றும் வாழ்கின்ற இந்த வாழ்க்கைக்கு காதல் என்று சும்மா பெயர் இட்டுவிட்டு நகர்ந்துவிட முடியாது.

ரோமியோ யூலியட், லைலா மஜ்னு இவர்களின் காதலெல்லாம் இந்த இரு இளஞ்சிட்டுக்கள் முன்னால் பூச்சியமே.

இவர்கள் தங்கள் வாழ்க்கையை மட்டும் காதலிக்கவில்லை இந்த உலகத்தையே காதலித்தார்கள். இந்த உலகமே தங்களுக்காகத்தான் படைக்கப்பட்டுள்ளது என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரக்கக் கூவினார்கள். வலியினால் கத்துவாள் ஆனால் அழமாட்டாள். வலியினால் துடிதுடிப்பாள் ஆனால் துவண்டுவிட மாட்டாள். எந்த எல்லைக்கு வலி போனாலும் இந்தக் காதல் புறாக்கள் சிறகடிக்கத் தயங்கியதே இல்லை.

மதம் இவர்களைக் குணப்படுத்தவில்லை. மந்திரவாதிகள் இவளைச் சுகப்படுத்தவில்லை. சாத்திர சம்பிரதாயங்கள் இவளைச் சுகப்படுத்தவில்லை. விஞ்ஞானம் கூட எது வும் செய்யவில்லை. ஆனால் இவர்கள் ஒருவர்மேல் ஒருவர் செலுத்திய அந்த மாசுமறுவற்ற அன்பு மட்டும் கணநேரம் ஆயினும் வலியை மறந்திருக்கச் செய்தன. வாழ்க்கையை ஆராதித்தல் என்பதை வாழ்கையின்மீது அன்பு செலுத்துபவர்களால் மட்டுமே புரிந்து கொள்ள முடியும். இந்த வாழ்க்கையில் காதல் காமம் ஆகியவைகள் எல்லாம் அடிபட்டுப் போய்விடும்.

இப்படியான ஒரு அற்புத வாழ்க்கையைத்தான் இருவரும் வாழ்ந்து கொண்டிருந்தனர். அவனுக்கு அவள் என்றும் அவளுக்கு அவன் என்றும் ஒன்றித்த வாழ்க்கையையே வாழ்ந்து கொண்டிருந்தனர். வலி தம்மைச் சுமக்கவில்லை. தங்கள் வாழ்வுதான் இந்த வலியைச் சுமக்கிறது என்பதை உணர்ந்தனர்.

அர்த்த நாரீஸ்வரராகவே இருவரும் வாழ்ந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமணம் புரிந்தால் பிள்ளை பெற வேண்டும் என்ற வட்டத்தைவிட்டு வெளியே வந்து ஒரே உடலில் இரு பாதி களாக வாழ்ந்து வாழ்க்கையை ஆராதித்தார்கள்.

சில சமயங்களில் அவளின் வலி அவனின் வலியாகி விடுகிறது. அவளைக் குழந்தையைப்போல் தூக்கி படுக்கையில் படுத்தும் போது அவனின் கண்களிலிருந்து கண்ணீர் ஒரு சொட்டுவிழும். இந்தக் கண்ணீர் ஒன்றும் கவலையால் இல்லை. அவளின் துன்பத்தைச் சகிக்கமுடியாத அவன் கண்களின் சோகம்தான் அது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 21

## தன்னம்பிக்கை

கடினமான இந்தப் பயணத்தின் ஒரு புள்ளியில் நின்று கதரனும் கிளயாவும் சில சமயங்களில் திரும்பிப் பார்த்து தங்களைத் தாங்களே திருப்திப்படுத்திக் கொள்வர். என்ன தான் துன்பங்களை இவர்கள் அனுபவித்திருந்தாலும் இன்று அவற்றுக்கப்பால் சென்று பல நோயாளிகளுக்கு உதாரணமாகவும் வாழத் தொடங்கியிருக்கிறார்கள்.

கிளயா தொடர்ச்சியான வலியினால் பட்ட துன்பங்களி லிருந்து பலகாத தூரம் ஓடி வந்துவிட்டாள். சின்னச் சின்ன விடயங்களிலெல்லாம் மகிழ்ச்சியை அனுபவித்துத் தனக்கு ஒன்றுமில்லை என்று மற்றவர்களுக்குக் காட்டுவதில் முனைப்பாக இருந்தாள். தன்னுடைய பலத்தையும் பலவீனத்தையும் நன்கு புரிந்து வைத்திருந்தாள். தன்னை அனுதாபமாகப் பார்ப்பவர்களையெல்லாம் வெறுப்போடு பார்த்தாள்.

தன்னம்பிக்கை நிறைந்தவர்கள் தம்மை யாரும் அனுதாபத்துடன் பார்ப்பதை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்படியாரும் பார்த்தால் வெகுண்டெழுவார்கள். அவர்களால் அந்தப் பார்வையினைத் தாங்க முடிவதில்லை.

தரணிலும் பல மாற்றங்கள் தென்பட்டன. கிளயாவின் துன்பங்களை அருகிலிருந்து பார்த்த அவனால் இனி இந்த உலகில் எதையும் தாங்கலாம் என்ற எண்ணம் அவனுள் உருவாகியிருந்தது. பொறுமையாக அவளைப் பார்த்ததனாலோ என்னவோ அவனுள் அன்பு வெள்ளம் பெருக்கெடுத்து ஓடிக் கொண்டிருந்தது.

வாழ்க்கையை சந்தோசமாக வாழ இருவரும் பழகிக் கொண்டனர். சிறுசிறு சந்தர்ப்பங்களையெல்லாம் பெரிதாகக் கொண்டாடத் தொடங்கினர். இயற்கையின் அற்புதங்களையெல்லாம் ரசிக்கத் தொடங்கினர். சூரியன் உதிப்பதையும் மழையின் சத்தத்தையும் இருவரும் சேர்ந்து ரசிக்கத் தொடங்கினர்.

தமது புலன்களை வேறொரு திசையில் மாற்றுவதனால் தமது வலியை மறந்துவிட முடியுமென்று இருவரும் மனதார நம்பினர்.

தங்களது பயணத்தைக் கதையாகவும் எழுதினர். மற்றவர்களையும் எழுதும்படி தூண்டினர். தாங்கள் உருவாக்கிய ஸ்தாபனத்தின் செயற்பாடுகளிலும் உற்சாகமாக ஈடுபட்டனர். பலருக்குப் பலவிதமான ஆலோசனைகளைக் கூறினர். தமது ஸ்தாபனம் வலியுடன் வாழும் சகலரையும் சென்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டைய வேண்டுமென்பதற்காக பலரைச் சந்தித்து பல விதமான வசதிகளை வலியுடன் வாழ்பவர்களுக்குச் செய்து வைத்தனர். பல வைத்தியத்துறையிலுள்ள திறமை சாலிகளைக் கொண்டு வலியோடு வாழ்பவர்களை மகிழச் செய்தனர்.

அவர்களுடைய ஸ்தாபனம் பலவிதமான சூழலில் வாழ்பவர்களை ஒரு குடைக்கீழ் கொண்டுவந்து அவர்கள் தனித்தவர்களல்ல என்ற உணர்வை ஏற்படுத்தியது.

என்னவென்றே தெரியாத இந்த வலியின் தன்மைகளை மற்றவர்களைப் புரிய வைத்து புரிந்துணர்வோடு அவர்கள் வைத்தியர்களை அணுகி பலன் பெறவேண்டும் என்பதில் கருத்தாக இருந்தனர்.

என்னதான் இவைகளில் ஈடுபட்டாலும் தங்களின் உடல் நலனிலும் கவனம் செலுத்தவேண்டுமென நண்பர்கள் வலி யுறுத்தியபோது கிளயா அவர்களைப் பார்த்து மெல்லிய புன்னகை ஒன்றை உதிர்த்தாள். ஏனென்றால் இந்த வேலை களில்தான் நான் என் வலியை மறக்கிறேன் என்று சொல்லா மல் சொல்லவே. மற்றவர்களோடு உரையாடுவதும் செயற்படுவதும் மனதிற்கு எவ்வளவு இதமானது என்பதை உளமார உணர்ந்தனர்.

இவர்களுடைய அமைப்பு பல ஆராய்ச்சியாளர்களையும் திறமைசாலிகளையும் ஒரே அனுபவங்கள் கொண்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களையும் இணைக்கும் பாலமாக மாறியது.

புதிய தொழில் நுட்ப வசதிகளையெல்லாம் மக்களோடு தொடர்பு கொள்ள பாவித்தனர். கண்ணுக்குத் தெரியாத இந்த வலியை கொண்டவர்களின் நன்மைக்காக ஒரு இணையத்தளத்தையும் உருவாக்கினர். இப்படி தங்களால் முடிந்தளவுக்கு மற்றவர்களுக்கு உதவுவதில் முன்மாதிரியாக இருந்தனர்.

இந்த ஸ்தாபனத்தில் இணைந்து பணியாற்ற சபேசனும் ரேணுவும் முன் வந்தார்கள். அன்று ரேணு, சபேசனை விட்டு விலகப் போவதாகக் கூறியபோது குழப்பமடைந்த கிளயா இப்போ ஒன்றாக உதவ வருவதாகக் கூறியபோது மேலும் குழப்பமடைந்தாள். ரேணுவுக்கு போன் பண்ணி விசாரித்தாள். இன்னும் சொல்லவில்லை என்றும் அதற்கான சந்தர்ப்பம் அமையவில்லை என்றும் ரேணு கூறினாள்.

ரேணு இணையவேலைகளில் அனுபவமுள்ளவள் ஆதலால் கிளயா தன்னோடு அவளைச் சேர்த்துக் கொண்டாள். சபேசனும் தரனும் தங்கள் வேலை தவிர்ந்த நேரங்களில் ஸ்தாபனத்தின் இதரவேலைகளைக் கவனித்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 22

## காதலைக் காதலித்தல்

ரேணுவும் சபேசனும் இணைந்து கிளயாவுக்கும் தரனுக்கும் உறுதுணையாக இருந்தனர். இப்படி வேலை செய்யும்போது வலிகள் நிறைந்த பலரோடு பழகும் சந்தர்ப்பங்கள் இருவருக்கும் கிடைத்தன. தங்களுடைய வலியையே பெரிதாக இவ்வளவு நாளும் நினைத்துக் கொண்டிருந்தவர்களுக்கு தங்களுடையதைவிடப் பெரிய வலிகள் இருப்பதை உணரும் சந்தர்ப்பம் கிடைத்தது.

இதனால் ரேணு சிலவேளைகளில் தான் எடுத்த முடிவு பிழையாக இருக்கலாமோ என்றும் சிந்தித்தாள். இன்னும் பொறுமையாகத் தான் இருந்திருக்க வேண்டுமோ என்றும் நினைத்தாள்.

சபேசனும் அப்படியான நினைப்பிலேயே இருந்தான். தன்னுடைய தாய் ரேணுவை நோகடிக்கும்போது தான் மௌனமாக இருந்தது தவறோ என்றும் யோசித்தான்.

என்னதான் இவர்கள் சிந்தித்தபோதும் அடுத்தகட்டத் திற்குப் போகவேண்டிய பலம் அற்றவர்களாகவே இருந்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த சமூக அமைப்பு சுய சிந்தனையாளர்களை என்றுமே அரவணைப்பதில்லை. திட்டமிட்டு உருவாக்கப்பட்ட இந்த அமைப்பு ஆணுக்கும் பெண்ணுக்கும் பல பாதுகாப்பு வேலிகளைப்போட்டு அவர்கள் சுயமாகச் சிந்திப்பதற்கும் செயற்படுவதற்கும் அனுமதிப்பதில்லை. தன்னைத் தானென்று ஒரு பெண் உணர்வதில்லை. தன்னைத் தானென்று ஆணும் உணர்வதில்லை. எப்பொழுதும் இவர்களை ஒருவரில் இன்னொருவர் தங்கி நிற்பதாகவே வழி நடத்தப்பட்டிருக்கிறார்கள்.

ரேணுவுக்குத் தான் சபேசனைவிட்டு விலகுவதற்கான காரணங்கள் அவள் முன்னே இருப்பது தெரிகிறது.அந்தக் காரணங்களிலுள்ள ஓட்டைகள்பற்றி அவள் சிந்திப்பது மில்லை. சபேசனுக்கும் அப்படித்தான்.

அன்று மாலை எப்படியாவது தன் முடிவைச் சொல்வ தென்று தீர்மானித்தாள். கிளயாவுக்குப் போன் பண்ணி இன்று வீட்டில் மாமியார் இல்லையென்றும் இந்தச் சூழலைப் பயனபடுத்தி சபேசனுக்குச் சொல்லப் போவதாக கூறினாள்.கிளயாவுக்கு அதைக் கேட்கப் பதட்டமாக இருந்தது. அந்தப் பதட்டத்திற்கான காரணம் என்னவென்றே அவளுக்குப் புரியவில்லை.

வேலையில் இருந்த தரனைக் கூப்பிட்டு விடயத்தைக் கூறினாள். தரன் அதனைச் சாதாரணமாகவே எடுத்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டான்.

ரேணுவைப் பொறுத்தவரையில் அவளின் வலி அவளுக்குத்தான் தெரியும். அதனால் அவள் அப்படி ஒரு முடிவை எடுத்திருக்கிறாள். அதில் மூன்றாம் ஆக்களான நாங்கள் எந்த அபிப்பிராயமும் சொல்லத்தேவையில்லை என்ற போக்கில் தரன் இருந்தான்.

ரேணு சபேசனின் கதவைத் தட்டினாள். சபேசன் அவளை உள்ளே வரும்படி கூறினான்.

"நான் உங்களோடு சிறிது நேரம் கதைக்கலாமா?" என்று கேட்டாள்.

சபேசன் தலையை ஆட்டினான்.

"சபேசன் என்னால் உங்கள் அம்மாவின் தொல்லைகளைத் தாங்கமுடியாது. தினம்தினம் திட்டுவது என்னைக் காயப் படுத்துகிறது. நீங்களும் அதனைக் கேட்க மாட்டனென் கிறீர்கள். அதனாலை..." ரேணு கூறமுன்

"அதனாலை என்ன அம்மாவை வீட்டைவிட்டு கலைக்கச் சொல்லிறியா? அல்லது தனியே போவம் என்கிறியா? எத்தனையோ சனங்கள் எத்தனையோ வலிகளோடும் துன்பத்தோடும் வாழிறதை நீ பார்க்கிறாய்தானே! அதைப் போல நாங்களும் இருக்கலாம்தானே?" என்றான் சபேசன்

"நான் ஒன்றும் உங்கடை அம்மாவை வீட்டைவிட்டுப் போகச் சொல்லயில்லை அல்லது உங்களை அவவிட்டை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யிருந்து பிரிச்சுக்கொண்டும் போகப் போறதில்லை. நான் போகப்போறன்." ரேணு இப்படிச் சொன்னதும் சபேசன் திடுக்கிட்டுவிட்டான். அவனுக்கு என்ன சொல்வதென்றே புரியவில்லை. பேசாமலிருந்தான்.

" நான் போனபிறகு நீங்கள் வேற கல்யாணம்கட்டி பிள்ளை பெற்று உங்கள் அம்மாவை மகிழ்வித்து சந்தோசமாக இருங்கோ" என்று ரேணு கூறினாள்.

" அப்ப நீ முடிவெடுத்திட்டாய். நீ நினைக்கிறியா நான் இன்னொரு கல்யாணம் கட்டுவனென்று?" சபேசன் கேட்டான்.

" அது உங்கடை விருப்பம்" ரேணு கூறினாள்.

சிறிது நேரம் பேசாமலிருந்த சபேசன் கோபமாக,

" அப்ப எப்ப போகப்போறாய்?" என்று கேட்டான்.

" இப்பவே வெளிக்கிடிறன். உங்கடை அம்மா வந்தபிறகு சொல்லுங்கோ " என்று சொல்லிவிட்டு விறுவிறுவென்று வெளியில் வந்து, ஏற்கனவே கட்டி வைத்திருந்த உடுப்புப் பெட்டியை எடுத்துக் கொண்டு கதவை இறுகச்சாத்திவிட்டு வெளியே போனாள்.

அவளின் கண்களில் மட்டும் கண்ணீர் மறைவாக வரத் தயாராகவிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 23

## காதலை ஆராதித்தல்

வீட்டைவிட்டுப் புறப்பட்ட ரேணு ஏற்கனவே பார்த்து வைத்திருந்த பெண்கள் விடுதிக்குச் சென்று தன் பொருட்களை வைத்துவிட்டு கிளயாவுக்கு தொலை பேசி எடுத்தாள். தான் சபேசனை விட்டு வந்துவிட்டதாகவும் பெண்கள் விடுதியில் தங்குவதாகவும் கூறினாள். இதைக் கேட்ட கிளயா மனம் வருந்தினாள். ரேணுவை ஒரு தடவை வீட்டுக்கு வரும்படி கேட்க அவளும் மாலை வருகிறேன் என்று கூறினாள்.

அவள் சொன்னதுபோல் மாலை 6 மணியளவில் வந்திருந்தாள். தரன் தேனீர் போட்டுக் கொடுத்தான். தேனீரைச் சுவைத்தபடி மூவரும் கதைக்கத் தொடங்கினர்.

" ரேணு, வெளியில் வந்தாச்சு அடுத்தது என்ன?" என்று கேட்டாள்.

" அடுத்தது என்ன ஒரு வேலை தேடவேணும். பிறகு அப்பிடியே வாழ்வதுதான்" என்றாள் ரேணு

" நீங்கள் இரண்டுபேரும் காதலிச்சுத்தானே கட்டின



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னீங்கள். எப்படி காதலிச்சவரை விட்டிட்டு உன்னாலை வர முடியுது?" கிளயா கேட்டாள்.

" அந்தக் காதலுக்கு நான் கொடுத்த மதிப்புத்தான் வெளியே வந்தது." என்றாள் ரேணு.

" புரியேல்லை" - கிளயா

" காதல் என்பது சேர்ந்து வாழ்தல் மட்டுமில்லை புரிந்து வாழ வேண்டும். சபேசனைப் பொறுத்தவரை இரண்டு விசயங்கள் முக்கியம். ஒன்று அவருடைய அம்மா. மற்றது குழந்தை. இந்த இரண்டும் இருந்தால் அவருக்கு வேறை எதுவும் தேவையில்லை. நான் அவரை உண்மையாகத்தான் காதலிச்சன். அவரும் அப்பிடித்தான் என்னை விரும்பினவர். ...." என்று கூறும்போது அவளின் கண்கள் கலங்கின. கேட்டுக் கொண்டிருந்த கிளயாவும் கலங்கினாள்.

ரேணு தொடர்ந்தாள்.

" நான் அங்கையிருந்தால் அது சுயநலம். என்னுடைய காதலை , அன்பை நானே அவமதிக்கிறமாதிரி இருக்கும். அந்தக்காதலை துஸ்பிரயோகம் செய்யிறமாதிரி இருக்கும். நான் அங்கை இருக்குமட்டும் அவர் அப்பாவாக முடியாது. ஏனென்றால் நான் அதற்கு லாயக்கில்லையே. எனக்குப் பிள்ளையில்லையென்றால் அவரோடை அம்மா சந்தோசமாக இருக்கமாட்டா. ஒரே வழி நான் விலகிறதுதான் நல்லது. விலகியிட்டன்." என்றாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ந்து " சபேசனின்ரை அம்மாவை நான் குறை கூறமாட்டன். கல்யாணம் கட்டிய நாளிலையிருந்து முதல் இரண்டு வருசமும் என்னைப் பிள்ளைமாதிரித்தான் பார்த்தவ. எண்டைக்கு எனக்கு பிள்ளை பிறக்காதென்று அறிஞ்சாவோ அண்டையிலிருந்து மாறியிட்டா. அதற்கு யாரும் எதுவும் செய்ய முடியாது." என்று கூறி நிறுத்தினாள்.

" அப்ப காதல் என்பது வெறுமனே அப்பா அம்மா ஆகிறதுதானா?" என்று கிளயா கேட்டாள்.

"நான் அப்பிடிச் சொல்லவில்லை. சபேசனைப் பொறுத்தவரை அதுதான். அவருக்குப் பிள்ளை வேணும் என்ற ஆசை அவருக்காக அல்ல. அது அவருடைய அம்மாவுக்காக. அம்மா பிள்ளைக்கு இடையில், அவர்களின் விருப்புக்குமாறாக எதற்குமே லாயக்கற்ற நான் வெறும் காதலுக்காக அவர்களை ஏன் துன்புறுத்தவேண்டும். அப்படி நான் அங்கு இருந்தால் என் மனதில் உள்ள தூய்மையான காதலை கொச்சைப்படுத்துவதாக ஆகிவிடும்." என்று ரேணு உணர்ச்சிவசப்பட்டுக் கூறினாள்.

" உதெல்லாத்திற்கும் சபேசன் இன்னொரு கல்யாணம் கட்டவேணுமே. அது நடக்குமென்று நினைக்கிறியா?" கிளயா கேட்டாள்.

" கொஞ்ச நாளைக்கு கவலையாயிருப்பர். பிறகு அவரிடை அம்மா சொல்லிறமாதிரிக் கேட்பார்." என்று ரேணு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறுதியாகக் கூறினாள்.

" எனக்கு நீங்கள் எங்கையாவது ஒரு வேலை எடுத்துத் தாங்கோ. அது போதுமெனக்கு." என்றாள்.

கிளயா தரனைப் பார்த்தாள்.

"உங்கடை 'சிவி' (Curriculam vitae) ஐ என்ரை இமெயிலுக்கு அனுப்புங்கோ எங்கடை காரியாலயத்திலை கதைச்சுப் பார்க்கிறன்" என்றான். ரேணு சிறிது நேரம் இருந்து கதைத்துவிட்டு புறப்பட்டாள்.

கிளயா தரனைப் பார்த்து " ரேணுவின் முடிவு சரியா தரன்?" என்று கேட்டாள்.

"காதலின் அர்த்தம் புரியாதவள். பிழையான முடிவு"

கிளயா எதுவுமே சொல்லவிலிலை. அவனை வாஞ்சை யோடு பார்த்துக் கொண்டு இருந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 24

## புதிய செய்தி

ஓடிக்களைத்துப்போய் தரனும் கிளயாவும் தாம் ஓடி வந்த பாதையைத் திரும்பிப் பார்த்தனர். தாங்கள் சோர்வடைந்து எதுவுமே செய்ய முடியாமல் தவித்த தரு ணங்களையும் நினைத்துப் பார்த்தனர். தமது வாழ்வை இந்த வலி படுத்திய பாட்டை நினைத்துப் பார்த்து வேதனைப்பட்டனர். ஒரு கட்டத்தில் இனி எதுவும் செய்ய முடியாது என்று நினைத்து இருவரும் இருந்து அழுத கணங்களையெல்லாம் கண்ணீரோடு நினைத்துப் பார்த் தனர்.

கடுமையான தருணங்களில் எல்லாம் தைரியமாக எப்படி இருக்க வேண்டுமென்பதையும் கற்றுக் கொண்டனர். தொடர்ச்சியாக வலியோடு துன்பப்படுபவர்களின் கதை களையெல்லாம் கேட்டு அவற்றிலிருந்து ஏராளமான விடயங்களைக் கற்றுக் கொண்டனர்.

ஒரே வகையான துன்பங்களை அனுபவிப்பவர்களோடு ஒரு கூட்டமாகச் சேர்ந்து செயற்படுவதன் பலாபலன்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுபவரீதியாக உணர்ந்து கொண்டனர்.

இந்தப் பத்து வருடங்களாக எத்தனையோ வைத்தியர்களை வைத்தியசாலைகளில் சந்தித்திருந்தார்கள். அப்போதெல்லாம் யாராவது ஒருவர் கண்டுபிடிக்க மாட் டார்களா என எவ்வளவு ஏங்கி இருப்பார்கள்? இலங்கை, பிரான்ஸ் என்று எத்தனை நாடுகளுக்குப் பயணமாகி இருப்பார்கள். எங்குமே அவர்களுக்கு ஆதரவாக ஒரு விடையும் கிடைக்கவில்லையே?

எத்தனைவிதமான பரிசோதனைகளை பல்லைக் கடித்துக் கொண்டு கிளயா அனுபவித்திருப்பாள்! இதுவரை ஐந்துக்குமதிகமான சத்திரசிகிச்சைகளை கிளயா சந்தித்திருந்தாள். எதுவுமே அவளுக்கு உதவவில்லையே. அவளின் உடம்பில் இனி வெட்டுவதற்கோ துளையிடுவதற்கோ ஒரு இடமுமில்லையே! எத்தனை ஊசிகள்! எத்தனை குளிசைகள்! அப்பப்பா கணக்கில்லாமல்போன இவையெல்லாம் என்னதான் செய்தன!

அவள் வயிற்றறை உட்காண் சிகிச்சைக்கும் (Laparoscopies) உட்படுத்தப்பட்டாளே! அவர்கள் உள்ளே எதையும் கண்டு பிடிக்கவில்லையே! வலியை மறப்பதற்காக Botex injection கூட எடுத்தாளே! இதைக்கூட அந்தச் சின்ன உடம்பு தாங்கிக் கொண்டதே!

வேறும் பல மருந்துகளை ஊசி மூலமாக அவளின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நரம்புகளை அமைதிகொள்ள வைக்கப் பயன்படுத்தியும் நரம்புகள் சொல்லுக் கேட்கவில்லையே!

ஒவ்வொன்றைச் செய்யும் போதும் தரனும் கிளயாவும் கொண்ட நம்பிக்கைகளுக்கு அளவுதான் ஏது?

ஒவ்வொரு ஊசி போட்டபின் இனி நான் சாதாரண மாகிவிடுவேன் என்று கிளயாவின் மனம் மகிழ்ந்த தருணங் கள்தான் எவ்வளவு! ஆனால் எதுவுமே நடக்கவில்லையே! ஆனால் என்ன நெஞ்சுரம் பாருங்கள்! எதுவுமே பலனளிக் காமல் போனபின்பும் முயற்சியைக் கைவிடாமல் இன்னும் முயல்வேன் என பிடிவாதமாக நின்ற அவளை என்னவென்று சொல்வது?.

அந்த நேரத்தில்தான் இவர்களின் இணைய நண்பி ஒருத்தி தனக்கும் இவ்வாறு வலி இருந்ததாகவும் பின்பு தான் சுவிசில் உள்ள வைத்தியர் ஒருவரிடம் சென்று ஓரளவு சுகமாகிவிட்டதாகவும் அவள் கூறியிருந்தாள். அந்த வைத்தியரின் தொலைபேசி இலக்கமும் கொடுத்தாள். தரப்பட்ட அன்றே அவரோடு தொடர்பு கொண்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 25

## வெளிச்சம்

சுவிசில் இருக்கும் அந்த வைத்தியரின் பெயர் கெவின் எட்வேட். அவரோடு கதைத்தபோது சகல விபரங்களையும் அனுப்பும்படி அவர் கூற உடனே அனுப்பி வைத்தார்கள். இரண்டு நாட்களின்பின் அவரிடமிருந்து செய்தி வந்தது. தன்னால் இதனைத் தீர்க்க முடியும் என்றும் தன்னிடம் வரமுன் தன்னுடைய மாணவியான வைத்தியர் லின்டா றோசலின் அவர்களைச் சந்திக்கும்படியும் கூறி யிருந்தார். அத்தோடு லண்டனைச் சேர்ந்த வைத்தியரின் விபரங்களையும் அனுப்பியிருந்தார்.

அந்த விபரங்கள் கிடைத்ததும் அடுத்த நாளே வைத்தியர் லின்டாவைச் சந்திக்கச் சென்றனர். லின்டா கிளயாவைப் பரிசோதித்த விதம் அவர் வழங்கிய ஆலோசனைகள் எல் லாம் தன் வாழ்க்கையில் ஒரு திருப்பு முனையை அடையலா மென்ற நம்பிக்கையை கிளயாவுக்குத் தோற்றுவித்தது.

இப்படியான சத்திர சிகிச்சை செய்வதில் வல்லவர்கள் உலகத்திலேயே மூவர்தான் இருக்கிறார்கள் என்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களில் ஒருவர்தான் சுவிசிலுள்ள வைத்தியர் கெவின் என்றும் லிண்டா கூறினார்.

லின்டா தனது அறிக்கையை அவருக்கு அனுப்பு வதாகவும் அது அவருக்குக் கிடைத்தபின் உங்களோடு தொடர்பு கொள்வார் என்றும் கூறிவைத்தார்.

வீட்டுக்கு வந்ததும் இந்தச் செய்தியை தமது அமைப் பைச் சேர்ந்த சகலருக்கும் தரனும் கிளயாவும் தெரிவித்த னர். எல்லோரும் மனதார அவளை வாழ்த்தினர்

ஒரு கிழமையின் பின் வைத்தியர் கெவின் தொடர்பு கொண்டிருந்தார். தனக்கு லின்டாவின் அறிக்கை கிடைத்த தாகவும் அதைத்தான் கவனமாகப் பரிசீலனை செய்ததாக வும் தன்னால் செய்ய முடியும் என்றும் தன்னை சுவிஸ் வந்து பார்க்குமாறும் கூறியிருந்தார். சந்திப்பதற்கான திகதியையும் குறிப்பிட்டிருந்தார். தரனும் தன் வேலைத் தளத்திற்கு அறிவித்துவிட்டு இணையத்தின் மூலம் விமானச்சீட்டை ஒழுங்கு செய்து கொண்டான்.

அப்போதான் வேறொரு பிரச்சினை ஆரம்பமானது. உலகம் முழுவதையும் அச்சுறுத்திய கோவிட் ஆரம்ப மானது. பல நாடுகள் தங்கள் எல்லைகளை மூடிக் கொண்டன. சுவிசும் எல்லையை மூடிக் கொண்டது.

கிளயா தன் நிலையை நினைத்து வருந்தினாள். எல்லாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடிவரும்போது கைக்கெட்டாமற் போய்விடுமோ என்று பயந்தாள். தரன் விரைந்து வைத்தியருடன் தொடர்பு கொண்டு நிலைமையை விளக்கி அவரிடம் வேறொரு திகதியைப் பெற்றுக் கொண்டான்.

விமானச் சீட்டு வாங்கிய இடத்தோடு தொடர்பு கொண்டு அதனையும் ரத்துச் செய்து கொண்டான்.

இவ்வாறு ஏற்பட்ட தடங்கல்கள் எல்லாவற்றையும் தாண்டி மாசி மாதம் 2022 இல் சுவிஸ் மண்ணில் கால் வைத்தனர். வைத்தியசாலைக்கு அருகிலுள்ள ஹோட்டல் ஒன்றில் தங்கி அடுத்தநாள் வைத்தியசாலை செல்வதாக திட்டத்தை வகுத்துக் கொண்டனர்.

அடுத்தநாள் காலை, அவர்கள் உலகத்திலேயே நரம்பு சம்பந்தமான சத்திர சிகிச்சைகளுக்குப் பெயர்போன வைத்தியர் கெல்வின் அவர்களைச் சந்திக்கப் போகிறோ மென்ற சந்தோசத்தில் இருவரும் புறப்படுவதற்குத் தயராகிக் கொண்டிருந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 26

## நம்பிக்கையின் கரங்கள்

வைத்திய சாலைக்கு வாடகைக் கார் ஒன்றில் சென்றனர். அவர்கள் சென்ற வைத்தியசாலை பிரமாண்டமாக இருந்தது. ஐந்து நட்சத்திர ஹோட்டல்கள் போல் அழகாக இருந்தது. உள்ளே போன அவர்கள் வரவேற்பிலுள்ள பெண்ணிற்கு தங்களை அறிமுகப்படுத்தினர். அந்தப் பெண்ணும் அவர்களைக் காத்திருக்கும்படி கூறிவிட்டு வைத்தியருக்கு அறிவித்தாள். ஐந்து நிமிடங்களின் பின் இன்னொரு தாதி வந்து அவர்களை வைத்தியரின் அறைக்கு அழைத்துச் சென்றாள்.

வைத்தியர் நடுத்தர மனிதராக இருந்தார். முகத்தில் அமைதியும் புன்னகையும் தவழ்ந்து கொண்டிருந்தன.

எழுந்து இவர்களுக்கு கை கொடுத்து இவர்களின் பிரயாணம் பற்றி அன்போடு விசாரித்தார். அதன்பின் கிளயாவை அவளின் வருத்தம்பற்றி கூறச் சொன்னார்.

கிளயாவும் தெளிவாக தனக்குள்ள வருத்தம் பற்றிக் கூறி தான் இதுவரை எடுத்த மருந்துகள் சத்திர சிகிச்சைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகியவற்றைப்பற்றியும் தெளிவாகக் கூறினாள்.

எல்லாவற்றையும் பொறுமையாகக் கேட்ட அவர் கிளயாவைக் கட்டிலில் படுக்கும்படி கூறிப் பரிசோதித்தார். அவர் பரிசோதிக்கும்போது எங்கு நோகின்றதெனக் கூறும்படி கிளயாவிடம் கூறினார். கிளயாவும் தெளிவாகக் கூறினாள். கிளயாவை எழும்பிக் கதிரையில் அமரும்படி கூறிவிட்டு சிறிது நேரம் நாடியில் கை வைத்தபடி யோசித்தார். பின்பு புன்னகைத்தபடி "உங்களுக்கு வந்துள்ள வருத்தம் புனித நரம்புத் தூண்டுதல் (Sacral nerve stimulation). இது ஒரு சத்திர சிகிச்சை மூலம் குணப்படுத்தி விடலாம்." என்று கூறினார். தரனும் கிளயாவும் ஒருவரை ஒருவர் பார்த்துப் புன்னகைத்துக் கொண்டனர்.

அவர் தொடர்ந்து " இந்தச் சத்திர சிகிச்சை மிக அபாயகரமானது. சில சமயங்களில் உயிராபத்து நிறைந்ததுமாகும். நீங்கள் திரும்ப லண்டன் சென்று ஆறுதலாக யோசித்து முடிவெடுங்கள்" என்று கூறினார்.

" இந்தச் சத்திர சிகிச்சைக்கான செலவு எவ்வளவு ஆகும்" என்று தரன் கேட்டான்.

" அண்ணளவாக முப்பதினாயிரம் பவுண்கள் முடியும். நீங்கள் சம்மதித்தால் கட்டண விபரம் முழுவதும் உங்களுக்கு அனுப்பி வைப்பார்கள்." என்று அவர் கூறினார். அதன்பின் அவரிடமிருந்து விடைபெற்று தாம் தங்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கும் இடத்திற்கு வந்தனர்.

அங்கிருந்து அடுத்தநாள் லண்டனுக்கு மீண்டும் பயணமாகினர். லண்டன் வந்தபின் இருவரும் மிக ஆழ மாகச் சிந்தித்தனர்.

" கிளயா முடிவெடுக்க வேண்டியது நீர்தான். நீர் என்ன முடிவெடுக்கிறீரோ அதற்குப் பக்கபலமாக நான் நிற்பன்." என்று தரன் கூறினான்.

இருவரது பெற்றாருக்கும் நடந்தவை யாவற்றையும் விளக்கிக் கூறினார்கள். அவர்களும் தரனைப்போல் முடிவெ டுக்க வேண்டியது கிளயாதான் என்று கூறிவிட்டார்கள்.

"சரி.. நான் முடிவெடுத்தால் உவ்வளவு பணத்திற்கு என்ன செய்வது.?" என்று கிளயா கேட்டாள்.

" அதைப்பற்றி நீர் யோசிக்க வேண்டாம். நான் எப்பிடியாவது பணம் பிரட்டியிடுவன்." என்று தரன் கூறி னான்.

அப்போது அழைப்புமணி அடித்தது. தரன் சென்று கதவைத் திறந்தான். அங்கு ரேணு நின்றிருந்தாள்.

ரேணு உள்ளே வந்து கிளயாவை சுகம் விசாரித்தாள். கிளயாவும் சந்தோசமாக அந்த வைத்தியரைப்பற்றிக் கூறினாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" சத்திரசிகிச்சை செய்வதா இல்லையா என்று முடி வெடுப்பதுதான் கடினமாக இருக்குது." என்றாள் கிளயா.

" கிளயா, இந்த முடிவை நீர்தான் எடுக்கவேணும். நீர் என்ன முடிவெடுத்தாலும் நாங்கள் உன்னோடை நிற்பம்"

இப்படி தரனைப்போலவே அவள் சொல்லிக் கொண்டி ருக்கும்போது தரன் தேனீர் போட்டுக் கொண்டுவந்து வைத்துவிட்டு,

" எப்படி வேலை பிடிச்சுதா?" என்று கேட்டான்.

" நல்ல வேலை தரன். நன்றி தரன். நான் எண்டைக்கும் மறக்கமாட்டன்" என்றாள் ரேணு.

" அப்ப என்னை மறந்திடுவாய் என்ன?" என்று கிளயா கேட்க மூவரும் சிரித்தார்கள். சிறிது நேரத்தின்பின் அவள் புறப்பட்டாள்.

அமைதியாக இருந்து கிளயா சிந்திக்க ஆரம்பித்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 27

## உறுதியின் உச்சம்

அன்று காலை வழமைபோல் துயில் விட்டெழும்பிய கிளயா தரனைப் பார்த்து

" தரன் சத்திரசிகிச்சை செய்வம். எவ்வளவு காலத்திற்கு நான் இப்படி வலியோடை இருக்கிறது. சுகம் வந்தால் வரட்டும் இல்லை வேறை மாதிரி முடிஞ்சால் முடியட்டும். நீங்கள் அறிவியுங்கோ" என்றாள்.

தரன் அவளைப் பார்த்தபடி சிறிது நேரம் நின்றான். பின்பு அவளுக்கு முன்னாலேயே வைத்தியருக்குப் போன் பண்ணிச் சொன்னான்.

அதேபோல் இரு பக்கத்துப் பெற்றாருக்கும் அறிவித்தார் கள்.எல்லோருடைய மனதிலும் மறைமுகமாகத் துயரம் படியத் தொடங்கியது. கிளயாவுக்கு மன்னால் தம்மைக் காட்டிக்கொள்ளாமல் முகத்தில் வலுக்கட்டாயமாக சிரிப்பை வரவழைத்துக் கொண்டார்கள்.

இப்போ பணம் ஒழுங்கு செய்ய வேண்டும். தரனுக்கு என்ன செய்வதென்றெ தெரியவில்லை. வேலை செய்யும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடத்தில் இதைப்பற்றிக் கதைத்தான். சில வங்கிகளுக்குத் தொலைபேசி எடுத்து கடன் எடுக்க முயற்சித்தான். சில நண்பர்கள் இணையம் மூலம் கோரிக்கைவிட்டால் பலர் உதவுவார்கள் என்று கூறினார்கள். தரனுக்கு ஆரம்பத்தில் அதில் விருப்பமில்லாமல் இருந்தாலும் நாட்கள் நகர அதற்குச் சம்மதித்தான். கிளயாவும் தரனும் மிக உருக்கமாக நோய்பற்றி எழுதி படங்களோடு இணையத்தில் போட்டார்கள்.

மேற்குலக நாடுகளில் இப்படி ஒரு முறை நடை முறை உள்ளது. சில ஸ்தாபனங்கள் இவற்றைப் பொறுப்பாக நின்று சேகரித்துக் கொடுப்பார்கள். சேரும் பணம் அவர்கள் கணக்கிற்குச் சென்று குறிப்பிட்ட திகதி முடிந்ததும் குறிப்பிட்ட வீதம் அவர்கள் தரகாக எடுத்துக் கொண்டு மீதியை இவர்களுக்குக் கொடுப்பார்கள்.

கிளயாவின் செய்தி வேகமாக இணையம் மூலமாக உலகம் முழுவதும் பரவ ஆரம்பித்தது. உறவினர்கள், நண்பர்கள் அவர்களோடு இவர்களால் உருவாக்கப்பட்ட அமைப்பைச் சேர்ந்தவர்கள் என பலர் பணம் இடத் தொடங்கினர். யாருமே எதிர்பாராத வகையில் தொடங்கப்பட்டு ஆறு மணித்தியாலங்களில் இவர்கள் கோரிய பணவருவாயைத் தாண்டி பணம் வந்து கொண்டிருந்தது.

பணம் தயாரானதும் சுவிசுக்கு தொலைபேசி எடுத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத்திரசிகிச்சைக்கான திகதியைக் குறித்துக் கொண்டான் தரன். தரனோடு துணைக்காக கிளயாவின் சகோதரியும் செல்வதென்று தீர்மானித்தார்கள்.

புறப்படும் நாள் தீர்மானிக்கப்பட்டது. கிளயா ஒவ்வொருவராகத் தொலைபேசியில் கதைத்தாள். சந்தோசமாக எல்லோருடனும் கதைத்தாள். அவளின் மனதுள் சிலசமயம் தான் திரும்ப வராவிட்டாலும் எல்லாரோடும் கதைத்துவிட்டுச் செல்லவேண்டும் என்ற எண்ணம் இருந்தது. எல்லாரும் மனதுள் துயரத்தை வைத்துக் கொண்டும் கண்களில் கண்ணீரைத் தேக்கிக் கொண்டும் அவர்களை அனுப்பி வைத்தார்கள்.

சுவிசினைச் சென்றடைந்த மூவரும் வைத்தியசாலைக்கு அண்மையில் உள்ள ஹோட்டல் ஒன்றில் தங்கிக் கொண்டனர். மறுநாள் வைத்தியசாலைக்குச் சென்றனர். கிளயாவை உள்ளே அழைத்துச் சென்றனர். அவள் போகும்போது கட்டிலில் இருந்தபடியே கணவன் தரனுக்கும் சகோதரிக்கும் கை அசைத்து விடை பெற்றாள். அவள் கை அசைக்கும் போது இருவரும் அழுதுவிட்டனர்.

வெளியில் நின்ற தரன் துடித்துக் கொண்டிருந்தான். அவனுடைய உணர்வுகளை எழுத்தில் வடிப்பது அவ்வளவு சுலபமில்லை. அங்குமிங்கும் நடந்து கொண்டிருந்தான். எதையோ தொலைத்தவன்போல் ஒரு பைத்தியக்காரனாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்குமிங்கும் உலவிக் கொண்டிருந்தான் தரன்.

உள்ளே சென்று மூன்று மணித்தியாலங்களின் பின்பு வைத்தியர் வெளியே வந்தார். அவர் முகத்தில் புன்னகை இருந்தது.தரனிடம் வந்து சத்திரசிகிச்சை வெற்றிகரமாக முடிந்தது. இன்னும் ஒரு மணித்தியாலத்தின் பின் கிளயாவை சாதாரண வார்ட்டுக்குக் கொண்டு வருவார்கள் என்று கூறினார்.வழிமேல் விழி வைத்துக் காத்திருந்தனர் தரனும் கிளயாவின் சகோதரியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 28

## மீண்டும்....

கிளயா இன்னும் வைத்தியசாலைக் கட்டிலில் படுத்திருந்தாள். அவள் இன்னும் முழுமையாகக் கண்விழிக்கவில்லை. இந்தச் சத்திர சிகிச்சை அவளின் எதிர்கால வாழ்க்கையைத் தீர்மானிக்கப் போகின்ற ஒன்று. அவள் கண்விழித்தபோது முதலில் தரணையே பார்த்தாள். அந்தப் பார்வையை என்னவென்று சொல்வது. தரனின் கண்களிலிருந்து மெலிதாகக் கண்ணீர் வழிந்தது.

அவளின் மனம் வைத்திய சாலையை விட்டு வெளியேறும் நாளை சந்தோசத்தோடு எண்ணிக் கொண்டிருந்தது மிகவும் ஆபத்தான சத்திர சிகிச்சை என அறிந்தும் பத்து வருடங்களாகத் தான்பட்ட வலியிலிருந்து மீளவேண்டும் அல்லது இந்த உலகத்தைவிட்டுப் போய்விட வேண்டுமென்ற வைராக்கியத்துடன்தான் முடிவெடுத்திருந்தாள்.

அவள் முடிவெடுக்கும்போது தான் கடந்து வந்த பாதையையும் தோல்வியான பல வைத்திய முறைகளையும் தரனின் துன்பத்தையும் கொண்டே இந்த முடிவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்திருந்தாள். அவளுடைய மனம் முழுவதும் வலியற்ற வாழ்க்கைபற்றியே இருந்தது.

இரு நாட்களில் வைத்திய சாலையைவிட்டு வெளியேறி லண்டன் செல்வதற்குத் தயாராகிவிட்டனர். திரும்பவும் வைத்தியசாலை சென்று தனக்கு அன்போடு உதவிய தாதிமாருக்கு மலர்கள் கொடுத்து நன்றி சொல்லிவிட்டு அங்கிருந்து விமான நிலையத்திற்குப் பயணமாகினர்.

வைத்தியரின் அறிவுறுத்தல்படி முதல் ஆறுமாதம் வலி சிறிது குறைவதுபோல் இருந்து மீண்டும் ஆறுமாதத்தின் பின் வலி உச்சத்திற்குச் சென்று ஒரு வருசத்தின் பின் மெல்ல மெல்ல குறைந்து இல்லாமல் போகும். பொறுமையாக இருக்க வேண்டும் என்றும் கூறியிருந்தார்.

லண்டன் வந்தபின் தன் உடம்பில் சில மாற்றங்கள் ஏற்படுவதாக கிளயா உணரத் தொடங்கினாள். வைத்தியர் கூறியபடி வலியின் வேகம் குறைந்திருந்தது. இந்த மாற்றம் அவளுக்கு நிரம்பச் சந்தோசத்தைக் கொடுத்தது. சில பயிற்சிகளைச் செய்யும்படி வைத்தியர் கூறியமையால் அவற்றை மெல்லச் செய்தாள். சத்திர சிகிச்சை ஒரு உதவியே ஒழிய அது முழுமையாக தன் வலியை உடனே மாற்றாது என்பதை கிளயா நன்கு புரிந்து கொண்டாள். முற்றாகக் குணமாகத் தன்னுடைய முயற்சிகளும் வேண்டும் என்று நினைத்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்காகத் தொடர்ச்சியான உடற் பயிற்சிகளை பயிற்றப் பட்ட உதவியாளர்களின் கீழ் செய்ய ஆரம்பித்தாள்.

இணையத்தில் இது போன்ற சத்திரசிகிச்சை செய் தவர்களோடு கதைத்து அவர்களின் ஆலோசனைகளையும் பெற்றுக் கொண்டாள். வைத்தியர் கூறிய இன்னுமொரு குறிப்பு அவளுக்கு ஞாபகத்திற்கு வந்தது. அதாவது சுகமடையும் காலம் ஒவ்வொருவரின் உடலைப் பொறுத்து மாறுபடலாம் என்றும் கூறியிருந்தார். எந்த வலி நீக்கிக ளையும் நிறுத்த வேண்டாமென்றும் தொடர்ந்து அவற்றைப் பாவிக்கும்படியும் கூறியிருந்தார்.

காலம் யாருக்காகவும் காத்திருப்பதில்லை. அது தன் பாட்டில் ஓடிக்கொண்டிருந்தது. ஒரு வருடம் முடிந்து விட்டது. கிளயா தன் வலி குறைந்ததாக இன்னும் உணர வில்லை. திரும்பவும் அவளுக்கு ஏமாற்றம்தான் பதிலா? என்று துயரப்பட்டாள். கிளயா திரும்பவும் வலியால் துன்பப்படுவதை அவதானித்த மற்றவர்களும் கவலை அடைந்தனர். தரனுக்கும் கிளயாவுக்கும்இந்த ஏமாற்றம் வாழ்க்கைமீது அளவற்ற வெறுப்பை உண்டு பண்ணியது. ஆனாலும் முயற்சிப்பதை இரு காதற்பறவைகளும் விடத் தயாராக வில்லை.


வேதாளம் மீண்டும் மரத்தில் ஏறிக் கொண்டிருந்தது.

முற்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இந்த நாவல் வெறும் கற்பனைகளின் வசனங்களல்ல. அனுபவத்தின் வெளிப்பாடு. உயிர்களுக்கு வலி வரும்போது அது எங்கிருந்து வருகிறது அல்லது எப்படி வருகிறது என்பதனைத் தெரியாதிருப்பது கொடிய துன்பம். இந்த உலகத்தில் பல ஆயிரக்கணக்கானவர்கள் பலவித வலிகளுடன் வாழ்கிறார்கள்.

உடல் வலி, உளவலி போன்ற வலிகளோடு தம் வாழ்நாளைக் கழித்துவரும் ஆண்களும் பெண்களும் இவ்வுலகில் வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறார்கள்.

எவ்வளவோ உயரத்திற்கு வளர்ந்துவிட்ட விஞ்ஞானத்தினாற் கூட அணுக முடியாத வலிகள் இருக்கின்றன என்பதை வெளிப்படுத்துவதும் இந்த அனுபவ நாவலின் ஒரு நோக்காகும். அதே நேரம் சமூகம் எப்படி இந்த வலிகளைக் கையாளுகிறது என்பதை வெளிக்காட்டவும் இந்நாவல் உதவி புரிகின்றது.

மகுடம்
ISBN: 978-624-5849-47-5
9 786245 849475
600.00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org